உங்கள் குடும்பத்தினர் அனைவரது மேம்பாட்டிற்கான ஆன்மிக-பண்பாட்டு இதழ்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

செப்டம்பர் 2013
புரட்டாசி
விலை ₹10

12 லட்சம்
பேர் பங்கு பெற
உள்ள
இளைஞர் தின விழா

ஒவ்வொரு
பள்ளியும்
கல்லூரியும்
விவேகானந்தர் தினம்
கொண்டாட
ஓர் அரிய வாய்ப்பு!

சக்தி பெற சுவாமிஜியை முழங்கு!

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

நடத்தும்

12 லட்சம் மாணவ-மாணவிகள் பங்கு பெற உள்ள

12 ஆம் ஆண்டு

தேசிய இளைஞர் தின மாபெரும் விழா - 2014

சக்தி பெற சுவாமிஜியை முழங்கு!

உங்கள் பள்ளியிலும் கல்லூரியிலும் விவேகானந்தர் தினம் கொண்டாட ஓர் அரிய வாய்ப்பு!

பள்ளித் தலைமையாசிரியர்களே, தாளாளர்களே, கல்லூரி நிர்வாகிகளே!

சுவாமி விவேகானந்தரின் 150-வது பிறந்த ஆண்டுக் கொண்டாட்டங்களில் மத்திய அரசு மிகவும் உற்சாகம் காட்டி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வரும் சுவாமிஜியின் சிந்தனைகள் தமிழகமெங்கும் பரவ வேண்டும் என்று பெரிதும் ஆர்வம் காட்டி வருகிறார்.

இந்த அருமையான சூழ்நிலையில், சுவாமி விவேகானந்தரின் இந்த விழாவை உங்கள் பள்ளியும் கல்லூரியும் கொண்டாட வேண்டாமா?

'போட்டி என்று வந்தால் நம் இந்திய இளைஞர்கள் உலகிலுள்ள எந்த இளைஞர்களையும் வெல்வார்கள்' என்று நம் இளைஞர்களின் சக்தி மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார் சுவாமி விவேகானந்தர்.

தன்னம்பிக்கை தரும் அவரது சிந்தனைகளை நாம் சேர்ந்து முழங்கினால் - நம் மாணவர்களை முழங்க வைத்தால், அவர்களின் மனங்களிலும் அவை முழங்கப்படும் இடங்களிலும் ஆக்கபூர்வமான அதிர்வலைகள் (Positive Vibrations) நிச்சயம் உண்டாகும்.

இதனால் இந்தியாவிலுள்ள எல்லாவிதமான பலவீனங்களும் மறைந்தோடும்.

✱ ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் கடந்த 11 ஆண்டுகளாக தேசிய இளைஞர் தினப் போட்டியை நடத்தி வருகிறது. சென்ற ஆண்டு நடைபெற்ற போட்டியில் சுமார் 3,000 பள்ளிகளிலிருந்து 10 லட்சம் மாணவ - மாணவிகள், இளைஞர்கள் கலந்துகொண்டு புது எழுச்சி பெற்றார்கள்.

✱ இந்த ஆண்டு சுவாமிஜியின் கருத்துகளை உங்கள் எல்லா மாணவர்களும் சேர்ந்து முழங்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். இது வெறும் ஒப்பித்தல் போட்டியாக இல்லாமல், விவேகானந்த அதிர்வலைகளை எழுப்பும் மாபெரும் முழக்கமாக எங்கும் பரவ உங்களது ஒத்துழைப்பை வேண்டுகிறோம்.

நீங்கள் செய்ய வேண்டியவை:

✱ வீரமொழிகள் கொண்ட கையேடுகள் உங்களுக்கு எவ்வளவு தேவை என்ற எண்ணிக்கையைக் குறித்து விரைவில் எங்களுக்கு அனுப்பவும். அதன்படி உங்கள் நிறுவனங்களுக்கு கையேடுகள் அனுப்பி வைக்கப்படும்.

✱ இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

✱ ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் உங்களுக்கேற்ற ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து 'விவேகானந்தர் தின'மாகக் கொண்டாடுங்கள்.

பிரிவு 1: வகுப்பு 3 முதல் 7 வரை பிரிவு 2: வகுப்பு 8 - 12 வரை & கல்லூரிகள்

இந்த இரு பிரிவைச் சேர்ந்தவர்கள், விவேகானந்தரின் 20 வீரமொழிகளை மனப்பாடமாக முழங்க வேண்டும்.

✱ இந்த விழாவிற்கு உங்கள் ஊர் முக்கியப் பிரமுகர்களை அழைக்கலாம். அவர்கள் முன்பு மாணவ-மாணவிகள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டு ஒரே குரலில் இந்த வீரமொழிகளை முழங்கட்டும்.

✱ விழா மேடையில் சுவாமிஜியின் படத்தை அலங்கரித்து வைத்து அனைவரையும் மலர் அர்ப்பணிக்கச் செய்யுங்கள். எல்லோருக்கும் இனிப்புகள் வழங்கலாம்.

✱ விழாவின் விவரம், பங்குபெற்ற மாணவ - மாணவிகளின் எண்ணிக்கை, அவை தொடர்பான புகைப்படங்கள் (மொபைல் போன் படங்கள் வேண்டாம்) அல்லது குறும் வீடியோ காட்சிகள் போன்றவற்றை எங்களுக்கு **அக்டோபர் 31** -க்குள் அனுப்புங்கள்.

✱ இந்த விழா பற்றி எங்களுக்கு நீங்கள் அனுப்பும் விவரங்களின் அடிப்படையில் உங்களுக்கு உயரிய, பெரிய நினைவுப் பரிசு வழங்கப்படும். உங்கள் பள்ளி/கல்லூரி நிகழ்ச்சியின் தரமான புகைப்படத்துடன் அந்தப் பரிசு உங்கள் பள்ளியை என்றும் அலங்கரிக்கட்டும்.

✱ மாணவர்களுக்குத் தரப்படும் மிக அருமையான கையேடு அவர்களின் வாழ்வை வழிநடத்தும் ஒரு நினைவுப் பரிசாக அமையும்.

✱ இதில் சுமார் 4,000 நிறுவனங்களிலிருந்து 12 லட்சம் பேர் விவேகானந்தரின் சிந்தனைகளை முழங்குவார்கள் என்ற இலக்கை அடைய உங்களது ஒத்துழைப்பு அவசியம். -ஆசிரியர்

தொடர்ச்சி 3-ஆம் அட்டையில்...

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

MADRAS CEMENTS

98-A, Dr.Radhakrishnan Road, Mylapore, Chennai - 600 004. Ph : 2847 8666

மதம் என்பது மனிதனிடம் ஏற்கெனவே இருக்கின்ற தெய்விகத்தை வெளிப்படுத்துவது.
– சுவாமி விவேகானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தமிழ் மாத இதழ்

தொகுதி 93 ❖ இதழ் 9
❖ செப்டம்பர்-2013 ❖ விஜய வரு புரட்டாசி மீ

கல்வி என்பது மனிதனிடம் ஏற்கெனவே இருக்கின்ற பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது.
– சுவாமி விவேகானந்தர்

அனைவருக்குமான விவேகானந்தப் பயிற்சி

23 பிறந்துவிட்டோம் இந்தியராக! வளர்கிறோமா, வாழ்கிறோமா இந்தியராக?

கரு உண்மை; உரு கற்பனை

36 சிறுகதை: அவர் அதையும் நமக்காகச் செய்கிறார்! - பாமதிமைந்தன்

பக்தர்களுக்கு

3 என்றும் இருக்கும் ஸ்ரீராமகிருஷ்ணர்! - சுவாமி சேதனானந்தர்
6 ஆனைமுகத்தோனின் அருள் கதைகள் - மேஜர் க.சீனிவாசன்
9 அத்வைதானந்தருக்கு அபிஷேகம்
17 நோய் தீர்க்கும் ஸ்ரீதன்வந்திரி பகவான் - நா. இரமணிசேகர்
33 மறைகளும் ஞானிகளும் போற்றிய விநாயகர்! - எம்.பைரவசுப்பிரமணியம்
45 படக்கதை : தெய்வ அருளால் தோன்றிய திருப்பெருந்துறை - ஓவியம் : சங்கர்

உள்ளுணர்வுக் கதை

5 உங்களை நெகிழ வைக்கும் ஒரு நிகழ்வு : ஒரு ரயில் பெட்டியில்....

இளைஞர்களுக்கு/ மாணவர்களுக்கு

10 மலாலாவின் பேச்சில் விவேகானந்தரின் தாக்கம்! - மோகனா சூரியநாராயணன்
15 இளைஞர்களின் கேள்விகளுக்கு நீதியரசர் சந்துரு பதிலளிக்கிறார்!
18 தமிழ்நாடு இளைஞர் முகாம் - எம்.சரவணன்
20 மாணவர் சக்தி: இளம் விஞ்ஞானியும் இளம் மெய்ஞ்ஞானியும் - சுவிர்
27 விவேகானந்தப் பயிற்சியில் பரிசு பெற்றவர்கள்
28 உலகின் குரு இந்தியா - சிரத்தாலு ரானடே
40 சுய முன்னேற்றப் பகுதி : வள்ளுவர் வழியில் மேல்நாட்டு மேலாண்மை
44 தமிழ் பேசினால் தண்டனை! - சுதந்திரப் போராட்ட வீரர் சின்ன அண்ணாமலை



ஆசிரியர் உலகம்

12 ஓர் ஆசிரியையின் ஆசிரிய மாணவி - கே.சித்ரா

அன்பார்ந்த வாசகர்களே, ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் மற்றும் அதிலுள்ள சிறப்பம்சங்கள், அவை தொடர்பான சுவையான செய்திகளையும் பார்க்க www.facebook.com/srkvijayam என்பதைச் சொடுக்குங்கள்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சந்தா விவரம்

	தனிப்பிரதி	ஓர் ஆண்டுச் சந்தா	3 ஆண்டுச் சந்தா	5 ஆண்டுச் சந்தா	20 ஆண்டுச் சந்தா
இந்தியா	₹ 10/-	₹ 110/-	₹ 330/-	₹ 550/-	₹ 1500/-
	இணைய தபால் மூலமாக வெளிநாடு	₹ 120/-	₹ 360/-	₹ 590/-	₹ 1750/-
இதர நாடுகள்	—	₹ 1200/-	₹ 3600/-	₹ 6000/-	—
	இணைய தபால் மூலமாக வெளிநாடு	₹ 1320/-	₹ 3950/-	₹ 6500/-	—

வெளிநாட்டுச் சந்தாத் தொகைகளில், விமானத் தபால் செலவும் அடங்கும்.

சந்தா அனுப்புவதற்கான சந்தாத் தொகையை மணியார்டர்/டிமாண்ட் டிராஃப்ட்/AT-PAR செக்காக 'ஸ்ரீராமகிருஷ்ண மடம்' என்ற பெயரில் எடுத்து ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-600 004 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். மாதம், வீட்டு விலாசம் மாறினால் மடத்தின் வெப் தளத்தில் சந்தா கட்டணம், நூல்கள் வாங்கலாம்.
☎: 2462 1110 Fax : 2493 4289 e-mail : mail@chennaimath.org website : www.chennaimath.org

ஆசிரியர் : சுவாமி விமூர்த்தானந்தர் ❀ நிர்வாக ஆசிரியர் : சுவாமி கௌதமானந்தர்

என்றும் இருக்கும் ஸ்ரீராமகிருஷ்ணர்



வேதச் சடங்குகளை அனுசரிக்கும் மீமாம்ஸ பள்ளியின் ஆசிரியராக விளங்கியவர் குமரில பட்டர். அவர் சீடராக மாறித் தந்திரமாக பௌத்த கொள்கைகளைக் கற்றுக் கொண்டார்.

அதனால் பௌத்தர்கள் அவரிடம் கோபமுற்று அவரை பௌத்த விஹாரத்தின் உச்சியிலிருந்து தள்ளிவிட்டனர்.

அப்படி விழும்போது குமரிலபட்டர் 'வேதங்கள் உண்மையானால், நான் காயமின்றி உயிருடன் இருப்பேனாக' என உரக்கக் கத்தினார்.

குமரிலபட்டர் கீழே விழுந்தாலும் உயிர் தப்பினார். ஒரு கண்ணில் மட்டும் அடிபட்டது.

''ஓ, எனது ஒரு கண் காயமுற்றுள்ளது. வேதங்கள் உண்மை; வேதங்கள் உண்மையானால் என்று கூறாதிருந்தால் இது நடந்திருக்காது'' என்றார்.

பௌத்தர்கள் குமரிலபட்டரின் புனித சக்திகளை அறிந்து விடுவித்தனர். குமரிலபட்டர் வேதங்களின் மீது தனக்கிருந்த நம்பிக்கையால் இறப்பிலிருந்து தப்பினார்.

ஆனால் நாம் எப்படி உள்ளோம்? நமது மனங்கள் சந்தேகத்திலிருந்து நம்பிக்கைக்கு மாறி மாறிச் சுற்றி வருகின்றன.

ஸ்ரீராமகிருஷ்ணர் இன்று உயிருடன் இருந்தால் என்ன நடக்கும்? நிச்சயமாகவே இருக்கிறாரா அல்லது நிர்வாணத்தில் கரைந்துவிட்டாரா? என்று 'ஆனால்' எனும் சொல் நிரந்தரமாக நம்முள் தோன்றிக்கொண்டே உள்ளது.

இந்தப் பயங்கரமான சந்தேகத்தை நீக்கவே நாம் புராணங்களைப் படிக்கிறோம். ஜபம், தியானம் செய்கிறோம். மகான்களின் உறவை நாடுகிறோம், தன்னலமற்ற செய்கைகளைச் செய்கிறோம். அப்படி இருந்தும் சந்தேகம் நீங்கவில்லை. இதிலிருந்து எப்படி தப்பிப்பது?

சிறு ஆல விதையிலிருந்து எப்படி மிகப் பெரிய ஆலமரம் உண்டாகிறது என்பதை மனித அறிவு ஊகிக்க முடியாது. அதேபோல் பிரபஞ்சத்தின் கடவுள் எவ்வாறு மனித உடம்பில் பிறப்பெடுத்து வாழ்ந்து காண்பிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அண்ணன் மகன் ராம்லால் ஒருவரிடம் தன் சந்தேகத்தை இப்படி விளக்குகிறார்:

''நான் ஸ்ரீராமகிருஷ்ணரை 'அப்னி' (வங்க மொழியில் பெரியவர்களைக் குறிக்கும் சொல்) என அழைப்பேன். ஏனெனில் அவர் என் சித்தப்பா என்று நான் நினைக்கவில்லை. அவரது நடவடிக்கைகள், மனநிலை, சமாதி இவற்றைப் பார்த்து என் மனதில் ஒரு சந்தேகம் எழுந்தது.

''இவர் படிப்பறிவில்லாதவர், ஆனாலும் கற்றுத் தேர்ந்த மேதைகள் இவரிடம் தோற்றுப் போகின்றனர். இவர் நிச்சயமாகவே கடவுளின் அவதாரம் தானா?'' என்றெல்லாம் நான் நினைத்தேன்.

''ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணரிடம், 'ஒரு சந்தேகத்தால் நான் சிறிது குழப்பமடைந்துள்ளேன்' என்றேன். உடனே அவர், ராம்லால், புத்தியினால் ஒருவர் இந்த ரகசியத்தைப் புரிந்துகொள்ள முடியாது.

ராம்லால்

''நீ ஜிலேபிகளைப் பார்த்திருப்பாய். வெளித் தோற்றத்திற்கு அவை காய்ந்திருக்கும். உள்ளே முழுவதும் தித்திப்பு ரசத்தால் நிரம்பியது என எப்படி தெரியும்? நீ என்னை அவதாரம் என்று நினைத்தால் எனக்குச் சேவை செய்யும் பாக்கியம் உனக்குக் கிட்டும். நீ என் ரத்த சம்பந்தப்பட்ட உறவு என்பது வேறு. வேறென்ன உனக்கு வேண்டும்?'' என்று கேட்டார்.

உன்னால் அணைக்க முடியாத நெருப்பை ஒரு போதும் கண்டிவிடாதே. - பழமொழி

சுவாமி சேதனானந்தர்



பந்தப்பட்ட ஜீவனும் முக்தியடைய முடியும்!

ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவார்: 'வாழ்க்கையில் பெண்ணாசை, பொன்னாசை என்ற சங்கிலியால் கட்டுண்டவர்கள் பத்த ஜீவன்கள். அவற்றால் கிடைக்கும் இன்பமே வாழ்க்கை என்று நினைப்பவர்கள். அந்த இன்பத்திலேயே அழிவும் உள்ளது என்பது அவர்களுக்குத் தெரியாது. பத்த ஜீவன்களில் ஒருவன் சாகிறபோது, அவன் மனைவி 'ஐயோ, போகிறாயே! எனக்கு என்ன வழி செய்தாய்?' என்று புலம்புவாள்.

அப்பப்பா! இந்த மாயைதான் எப்படிப்பட்டது. ஒருவன் மரணப் படுக்கையில் கிடக்கிறான். இதோ சாகப் போகிறான். பக்கத்தில் விளக்கு ஒன்று பெரிதாக எரிந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்த்ததும், 'எண்ணெய் தீர்ந்துவிடும்; விளக்கை நிறுத்திவிடு' என்று அந்த நேரத்திலும் உலகப் பொருள்களையே நினைக்கிறான்!

'பத்த ஜீவன்கள் இறைவனை நினைப்பதில்லை. ஓய்வு கிடைத்தால் தேவை இல்லாத வம்பு அளப்பார்கள்; அல்லது பயனற்ற வேலைகளைச் செய்வார்கள். காரணம் கேட்டால், 'என்னால் சும்மா உட்கார முடியாது; அதனால் இந்த வேலியைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்பார்கள். இல்லையென்றால் உட்கார்ந்து சீட்டு ஆடுவார்கள்!

– ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் பாகம் 1, பக்கம் 65

''அந்த நாட்களில் அவரது மகிமைகளை நான் அறியவில்லை. அவர் என் உறவுக்காரர் எனினும் உண்மையில் அவர் யார் என்று நாங்கள் புரிந்து கொள்ளவில்லை. அவரது கருணையால் எனக்கு இந்த அளவு நம்பிக்கை இருந்தது. அவரின் குடும்பத்தில் பிறந்ததால் அவரது தாமரைத் திருவடிகளில் சரணடைந்தோம்.

''கடவுளே எங்கள் குடும்பத்தில் மனித உருவில் பிறந்திருக்கிறார் என்பதை நினைத்தால் ஆச்சரியமாக உள்ளது! அவரது கருணையாலும், அவருடன் கூடிய உறவாலும் எங்களுக்கும் பல ஆன்மிகக் காட்சிகள், அனுபவங்கள் கிட்டின. இவ்வாறு அவர் எங்களுக்கு நம்பிக்கையையும், பக்தியையும் அளித்தார்.''

நம் மனதிற்கு இனியவர்களைப் பிரியும்போது வெறுமையை உணர்கிறோம். இது இயற்கையின் விதி. ஸ்ரீராமகிருஷ்ணர் தக்ஷிணேஸ்வரத்தைவிட்டு புற்றுநோய் சிகிச்சைக்காகப் புறப்பட்டபோது ராம்லால் சொன்னார்:

''சித்தப்பா நீங்கள் சிகிச்சைக்காக கல்கத்தா செல்கிறீர்கள். உங்களை இழந்து நான் மிக வருந்துவேன்'' என்று துக்கத்துடன் கூறினார். ஸ்ரீராம கிருஷ்ணர் அவருக்கு ஆறுதல் கூறி, ''நான் கல்கத்தாவிலுள்ள பைன் தோட்டத்தைப் பார்க்கச் செல்வதாக நினைத்துக்கொள். நான் விரைவில் திரும்பி வந்துவிடுவேன். இது மாதிரி நினைத்தால் நீ வருந்த மாட்டாய்'' என்றார்.

ராம்லால் பின்னாளில் பக்தர்களிடம் சொன்னார்: ''குருதேவர் அப்படிச் சொன்ன பிறகு அவர் இல்லை என்பதே எனக்குத் தோன்றவில்லை. அவர் இருப்பதாகவே உணர்கிறேன். சில சமயங்களில் பார்க்கவும் செய்கிறேன்.

''குருதேவர் என்னிடம் கூறினார்: ''யார் தக்ஷிணேஸ்வரத்திற்கு வந்தாலும் - உனக்குத் தெரிந்தவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவருக்குத் தயவு செய்து சிறிது பிரசாதமும் ஒரு டம்ளர் கங்கை நீரும் கொடு. நீ வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை. இந்தச் சேவையே உனக்கு ஜபம், தவம், தியாகம் செய்த பலன்களை எல்லாம் வழங்கும்.

''அவர் கூறியதுபோல் செய்து வந்தேன். அதில் எனக்கு அளவற்ற சந்தோஷம் கிடைத்தது. உண்மையாக, எனக்கு ஜபத்திலும், தியானத்திலும் மனஒருமைப்பாடு இல்லை. ஆனால் என் தினசரி வேலைகளுக்கிடையில் அவற்றைப் பழகுகிறேன்.

''இப்போது என் குருவின் பக்தர்கள் அதிகரித்துள்ளனர். அவரது செய்தி சில வருடங்களுக்குள்ளேயே பரவிவிட்டது. பல நாடுகளிலிருந்து மனிதர்கள் வருவதைப் பார்க்கிறேன். அவர்கள் மொழிகூட எனக்குத் தெரியாது.

''அவர்கள் பஞ்சவடிக்குச் சென்று பூமியில் புரள்கிறார்கள். அங்கிருந்து தூசியை எடுத்துச் செல்கின்றனர். ஆலமரத்திலிருந்தும் வில்வ மரத்திலிருந்தும் இலைகளை எடுத்துச் செல்கின்றனர்.''

ஆதாரம்: Source: How to live with God.

ஆன்ட்ரூ கார்னகியிடம், ''பல்வேறு மனிதர்களை எவ்வாறு சமாளிக்கிறீர்கள்?'' என ஒருவர் கேட்டார்.

''மனிதர்களோடு பழகுவது, தங்கத்திற்காகப் பூமியைத் தோண்டுவது போன்றது. தோண்டித் தோண்டி ஓர் அவுன்ஸ் தங்கத்திற்காக டன் கணக்கில் மண்ணையும் அழுக்கையும் எடுக்க வேண்டியுள்ளது. ஆனால் நான் வேண்டாத குப்பைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. என் கவனமெல்லாம் தங்கத்தின் மீதுதான் உள்ளது'' என்றார் கார்னகி.

- ஷிவ் கேரா

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்
SHRI GHEE SWEETS
PH: 2431 2345

பணமும் மகிழ்ச்சியும் பிறவிப் பகைவர்கள். ஒன்றின் இடத்தில் மற்றொன்று வசிக்காது. - பிலிப்பைன்ஸ் பழமொழி

ஒரு ரயில் பெட்டியில்...

ஜோலார்பேட்டை சந்திப்பில் அந்த ரயில் நின்றது. ஒரே இரைச்சல். S8 கம்பார்ட்மெண்டில் ரவி ஏறினான். லேசான அழுக்குச்சட்டை, பேண்ட். கையில் ஒரு பிரஷ்.

ஓ, இவன் ரயிலில் குப்பை கூட்டிக் காலம் தள்ளுபவனா? நாளைக் காலை மைசூர் போய்ச் சேரும்வரை இந்த துர்நாற்றத்தில் போக வேண்டுமே என்று பயணிகள் குமைந்தபோது ரவி ஏறியிருக்கிறான்.

ரவி பிரஷ்ஷால் ரயில் பெட்டியின் தரையைப் பெருக்கினான். ஒரு தாடிக்காரர் கடலையைத் தின்றபடியே துடைத்த இடத்திலேயே தோலைப் போட்டார். அதையும் ரவி எடுத்துப் போட்டான்.

3-வது பெட்டிக்குப் போனபோது ''இங்க தொட'' என்று ஓர் அதட்டும் குரல். ரவி சுத்தப்படுத்தியதும் அந்த மீசையாள் ஒரு ரூபாயை வீசினார்.

ரவி அதை அமைதியாக எடுத்து, மீசையாளரிடமே கொடுத்தான்.

அவர் கோபத்துடன், ''பார்ரா, இவன் செய்ற இந்த வேலைக்கு ஒரு ரூபா பத்தாதாம். அதான் துரை திருப்பித் தர்றாரு...'' என்று தன் நண்பனிடம் வீம்பு வளர்த்தான். ரவி பேசவில்லை.

''நீ மரியாதையா அவனுக்கு ரூபாயைத் தந்திருக்கணும்'' என்று அவனது நண்பன் கூறுவதற்குள், ரவி 5-வது பெட்டியில் கூட்டிக் கொண்டிருந்தான்.

அங்கு ஓர் இளம்பெண் கணவனிடம், ''இவன் நல்லா க்ளீன் பண்றான்... பாவங்க'' என்றாள். ''சும்மா இரு. இந்த மாதிரி நாம காசு குடுத்துப் பிச்சைக்காரத் தனத்த ஆதரிக்கக் கூடாது'' என்று கூறி விட்டு செல்போனில் பாட்டு கேட்டார்.

ரவி 6-வது பெட்டிக்குப் போனான்.

''சார், நாட்டுல ஊழல் பெருகிடுச்சி. டாஸ்மாக் பணத்தை நம்பித்தான் அரசே இருக்கு. இனி இந்த நாட்டை எவன் காப்பாத்த முடியுங்குறீங்க?'

''நான் ஸ்வீடன் போயிருந்தேன். அங்க எங்கயுமே ஒரு தூசி இருக்காது. ஆனா இங்க..., என்னால இந்த அசிங்கமான இடத்துல இருக்க முடியாது. நான் போய் டி.டி.ஆரைப் பாக்கறேன்.''

இவ்வாறு பேசி வந்தவர்களின் கால்களுக்கடியில் இருந்த தூசிகளை ரவி சுத்தம் செய்தான். அவர்களுள் ஒருவர் ரவியிடம் ஒரு ரூபாய் தந்தார். அவன் சிரித்தபடி அதை மறுத்துவிட்டான்.

பெட்டி 7- இல் இருந்த ஒரு சிடுமூஞ்சி, ''எனக்கு 'டஸ்ட் அலர்ஜி' '' என்று நாராசமாகக் கூவி விட்டுத் தூங்கினாள்.

பெட்டி 8. ரவி போனபோது, ''இந்தா, டீ சாப்பிடு'' என்று 5 ரூபாய் தர முன் வந்த ஒருவரை அவரது மனைவி முறைத்தாள்.

''இந்த மாதிரி பசங்கள்லாம் வேலை செய்ற மாதிரி செஞ்சி நம்ம லக்கேஜைத் திருடிட்டுப் போயிடுவாங்க'' என்றாள்.

அதைக் கேட்டும் ரவி கண்டு கொள்ளாது செல்கிறானே?

இவன் யார்? பிச்சைக்காரனா? பார்த்தால் அப்படி இல்லை. ஊமையா? செவிடா? கிறுக்கனா? ரவியையே பார்த்துக் கொண்டிருந்த ஒரு பாட்டி, ''இங்க வாய்யா, இந்தா, இந்த ரெண்டு இட்லிய சாப்பிடு'' என்றாள். அதற்கும் சிரிப்பு.

''நீ என்ன ஊமையா?'' என்று பாட்டி கேட்டாள்.

ரவி, ''பாட்டி, நாங்க மூணு பேரு காலேஜ் படிக்கிறவங்க. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இது மாதிரி ரயிலில் எங்களால் முடிஞ்சதைச் செய்றோம்...'' என்றான். அதற்குள் அங்கு வந்த இன்னொருவன், ''ரவி, நான் முடிச்சிட்டேன்டா...'' என்றான்.

69-வது சீட்டில் இருந்த ஒரு கல்லூரி மாணவி, ''நீங்க இதை ஏன் செய்றீங்க?'' என்று கேட்டாள் அக்கறையுடன்.

''மேடம், நம்ம மக்கள் வாழற இடம்தாங்க நம்ம இந்தியா. இப்படி நினைச்சுதான் நாங்க நாட்டுக்காக சேவை செய்றோம். தயவு செய்து எங்க போனாலும் பொது இடத்த நீங்க சுத்தமா வச்சுகிட்டு, எல்லாருக்கும் பயன்படுற மாதிரி இருக்கணும்னு உங்கள கேட்டுக்கறேன்'' என்றான் ரவி எல்லோரிடமும்.

''அதோட, இந்த வருடத்து சுவாமி விவேகானந்தரின் 150-வது பிறந்த ஆண்டை நாங்க இப்படித்தான் கொண்டாடுறோம்'' என்றான் அங்கு வந்த நண்பன்.

அந்த கம்பார்ட்மெண்டில் இருந்த 72 பேருக்கும் அவரவர் தூக்கம் திடீரென்று கலைந்தது. ❖

தேசியக் கல்வி தேசியமாயிருக்க, அது தேசநலனுக்கு உகந்ததாயிருத்தல் அவசியம். - காந்தியடிகள்

தொகுப்பு : மேஜர் க.சீனிவாசன்

ஆனைமுகத்தோனின் அருள் கதைகள்

ஓலமிட்ட விநாயகர்

சுந்தரர் திருவையாற்றுக்குச் சென்றபோது காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. அதனால் திருவையாறு செல்ல முடியவில்லை.

சுந்தரர் எதிர்க்கரையில் நின்றபடி, ''ஐயாறுடைய அடிகளே! ஓலம், ஓலம்'' என்று கதறினார்.

பக்தரின் துயரம் அறிந்த விநாயகர் அந்த ஓலத்தைத் தந்தையாகிய ஈஸ்வரனுக்குத் தெரிவித்தார். இறைவனும் கருணை கூர்ந்து வெள்ளத்தை வடிய வைத்தார். எனவே ஓலமிட்ட விநாயகர் என்றானார்.

குளம் வெட்டிய கணபதி

சிவனிடம் அளவற்ற பக்தி கொண்ட நந்தனார் புலையர் குலத்தில் உதித்தவர்.

மேல்திசையில் ஒரு குட்டை இருந்தது. அதனைக் குளமாக வெட்ட விரும்பினார். பண பலமோ, ஆள் பலமோ இல்லாத அவர் இறைவனை எண்ணி வேண்டும்போது விநாயகர் கூலியாளராக வந்தார்.

நந்தனாரை நோக்கி விநாயகர், ''நான் உனது ஆள். என்ன செய்ய வேண்டும்'' என்று கூலியாள் போல் கேட்டு, நந்தனார் கோயிலை வலம் வருவதற்குள் திருக்குளத்தை வெட்டிவிட்டு மறைந்தார்.

விநாயகர் வெட்டிய திருக்குளம் இன்றும் திருப்புன்கூரில் உள்ளது. அங்கே குளம் வெட்டிய கணபதி வீற்றிருக்கிறார்.

கையொடிந்த கணபதி

சிதம்பரத்தில் செங்கழுநீர் பிள்ளையார் சந்நிதி உள்ளது. திப்புசுல்தான் காலத்தில் முகமதியர் இவரது கையை உடைத்துவிட்டனர்.மக்கள் வேறு சிலை வைக்க முயன்றனர்.

பிள்ளையார் அவர்கள் கனவில் தோன்றி, ''கை ஒடிந்த உன் மகனை விரட்டிவிடு வாயா?'' என்று கேட்க, மக்கள் அவரை கை ஒடிந்த கணபதியாக வழிபடுகின்றனர்.

திருமுறைகள் தேடித் தந்தவர்

திருநாரையூரில் பிறந்தவர் நம்பி ஆண்டார் நம்பி. பொல்லாப் பிள்ளையாரை வழிபட்டவரின் மகன் பிள்ளையார் மீது திருவிரட்டை மணிமாலை பாடினார்.

நம்பியாண்டார் நம்பியின் ஆழ்ந்த பக்தியைக் கேட்டறிந்த ராஜராஜ சோழன் திருநாரையூர் சென்று அவரைக் கண்டு வணங்கி, சமயாசாரியார்கள் மற்றும் நாயன்மார்களின் தேவாரத் திருப்பதிகங்களைப் பூவுலகில் விளங்கச் செய்யுமாறு வேண்டினார்.

நம்பியும் பிள்ளையாரை வேண்டினார்.

அவரது கட்டளைப்படி அரசனும் நம்பியும் தில்லையை அடைந்து தில்லைவாழ் அந்தணர்களிடம் தங்கள் நோக்கத்தைத் தெரிவித்தனர்.

அந்தணர்கள் 'தேவாரம் பாடிய மூவரும் வந்தால் தான் சுவடிகள் இருக்கும் அறைக் கதவு திறக்கும்' என்றனர். அரசனும் நடராஜருக்கு விசேஷ பூஜை செய்வித்து, சமயக் குரவர் மூவரது திருவுருவங்களைத் திருவீதியுலாவாக எழுந்தருளச் செய்து அறையின் எதிரே நிறுத்த, கதவு திறந்தது.

செல்லரித்த ஓலைச் சுவடிகளில் கிடைத்தவற்றை எடுத்து, சுத்தம் செய்து, பின்னர் அசரீரி வாக்குப்படி தேவாரங்களுக்குப் பண்முறை வகுக்க, பன்னிரு திருமுறைகள் தோன்றின.

செவிசாய்த்த விநாயகர்

லால்குடிக்கு அருகில் அன்பில் ஆலந்துறை என்ற புகழ்பெற்ற சிவத்தலம் உள்ளது. அப்பரும் சம்பந்தரும் அங்கு வழிபடச் சென்றார்கள்.

வழியில் கொள்ளிடம் குறுக்கிட்டது. மிகுந்த வெள்ளம். அக்கரை செல்ல இயலவில்லை என்று வருந்தி இறைவனைப் பாடினார்கள்.

இறைவனுக்கு முன்பாக விநாயகர் வெள்ளச்

இளமையில் கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன், எதிர்கால வாழ்வில் இறந்தவன். - யூரிபிடிஸ்

சத்தத்திலும் அவர்களின் கூக்குரலைச் செவிசாய்த்து உன்னிப்பாகக் கேட்டார்.

அப்பர் - சம்பந்தர் வரவை விநாயகர், இறைவனுக்குச் சொல்ல அவர் வெள்ளத்தை வடித்து வழிவிட்டார். விக்ரஹ ரூபத்தில் செவியைச் சாய்த்துக் கொண்டிருக்கும் அந்தப் பிள்ளையார் செவிசாய்த்த விநாயகர் ஆவார்.

பிரளயம் காத்த விநாயகர்

குடந்தை சுவாமிமலையில் புளியஞ்சேரியிலிருந்து சிறு தொலைவில் திருப்புறம்பியம் உள்ளது.

பிரளய காலத்தில் இங்கு தண்ணீர் சூழுமே தவிர மூடாது. ஆகவே இங்கு உறையும் விநாயகருக்கு 'பிரளயம் காத்தவிநாயகர்' என்று பெயர்.

விநாயகசதுர்த்தியன்று தேன் அபிஷேகம் செய்வார்கள். தேன் திருமேனியின் மேலே பட்டதும் உறிஞ்சப்பட்டு விடும். வெளி வராது.

பழவங்காடி கணபதி

திருவனந்தபுரம் ஊர் நடுவில் பழவங்காடி கணபதி சந்நிதி உள்ளது. எல்லா மதத்தினரும் வழிபடும் விநாயகர் இவர். இந்திய ராணுவத்தினர் நிர்வகிக்கும் ஆலயம் இது.

மகாராஜா மார்த்தாண்டவர்மன் கட்டிய கோவில். பக்தர்கள் சூறைத் தேங்காய்கள் உடைத்து பிரார்த்தனை செய்கின்றனர்.

மோதகம் பிறந்த கதை

விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது மோதகம் என்ற கொழுக்கட்டை. பிரம்மம் போல சர்வ வியாபியான விநாயகர் தன் வீட்டிற்கு வருவதை அறிந்தாள் ரிஷிபத்தினி அருந்ததி.

இந்த அண்டத்தில் பிரம்மம் எங்கும் நிறைந்துள்ளது என்ற தத்துவத்தை உணர்ந்த அருந்ததி இவ்வுண்மையை உலகிற்கு உணர்த்த அண்டம் என்ற அர்த்தத்திலே வெள்ளை மாவினால் செப்பு செய்து பிரம்மம் எங்கும் பூர்ணமாக நிறைந்துள்ளது என்ற பொருளில் அமிர்தமயமான பூர்ணத்தை வைத்து வசிஷ்டர் மூலமாக விநாயகருக்குப் படைத்தார்.

அதை ஏற்றுக்கொண்டு அந்தத் தத்துவத்தை யாவரும் அறிந்து கொள்வதற்காகக் கையில் எப்போதும் மோதகத்தை வைத்துக் கொண்டிருக்கிறார் விநாயகர்.

மூஷிக வாகனம்

கஜமுகாசுரன் என்ற கொடிய அரக்கன் சிவபெருமானை நோக்கிப் பல்லாண்டுகள் தவமிருந்து வரம் பெற்றான். தேவரையும் மூவரையும் அடக்கியாளவும் எப்படைகளாலும் மரணமற்ற தகைமையும் பெற்றான்.

தேவர்களை இழுத்து வந்து தினமும் காலை, உச்சி, மாலை வேளைகளில் 1008 தோப்புக்கரணம் போடச் செய்தான்.

வருந்திய அவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர் விநாயகரை ஆணையிட்டு அனுப்பினார். அவர் போர்க் கோலம் பூண்டு கஜமுகாசுரனை எதிர்த்தார். விநாயகரின் கணைகளால் கஜமுகாசுரனை அழிக்க முடியவில்லை. படைகளால் மாயாத வரம் பெற்ற இவனைத் தந்தத்தால் ஒழிப்போம் என்று தன் வலக்கொம்பை முறித்து, சிவ மந்திரம் சொல்லி ஏவினார்.

கஜமுகாசுரனைத் தந்தம் பிளந்தது. பெருச்சாளி வடிவில் விநாயகரிடம் வந்தான். கருணையுடன் அவனை மன்னித்து, மூஷிகத்தைத் தன் வாகனமாக ஏற்றுக்கொண்டார்.

அமரர்கள் முன்புபோலவே அன்போடு தோப்புக்கரணம் இடலாம் என்று அருளினார்.

வழிகாட்டிய விநாயகர்

சமயக்குரவர் நால்வருள் ஒருவரான திருஞானசம்பந்தர் ஒருமுறை தேரழுந்தூர் சென்றார். அங்கு வேதபுரீஸ்வரரின் சிவாலயமும், ஆமருவியப்பர் என்ற பெருமாளின் வைணவ ஆலயமும் உள்ளன.

இரண்டு கோபுரங்கள் இருபக்கங்களிலும் இருந்தன. எது சிவாலயம் என்று தெரியாமல் ஈசுவர பக்தரான சம்பந்தர் குழம்பினார்.

அப்போது அங்குள்ள பிள்ளையார்தான் வழிகாட்டினார். எனவே வழிகாட்டி விநாயகர் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது.

விளையாடும் விநாயகர்

கணபதியை விளையாட்டுப் பிள்ளையாகக் காட்டியுள்ளனர் சில ஆலயங்களில். வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோயிலில் கையில் கொழுக்கட்டையுடன் பின்புறம் என்ன நடக்கிறது என்று பார்க்கும் தோரணையில் தவழும் கணபதி இருக்கிறார். சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபத்தில் இரு கைகளுடன் வெண்ணைப்பாத்திரத்தை வைத்துக் கொண்டு (கிருஷ்ணன் போல்) தவழும் பால கணபதி இருக்கிறார். ❖

அறிவு தரும் கல்விக்கு ஆகும் செலவைவிட அறியாமையால் ஆகும் செலவே அதிகம். - எட்மண்ட் பர்க்

ஸ்ரீராமகிருஷ்ணர்

வடமாநில புனித யாத்திரை

ஸ்ரீ குருவாயூரப்பர் பேருந்து அலுவலகம்

24.10.2013 இது 13 நாட்கள் கொண்டது. தீபாவளி கங்கை கங்கா ஸ்நானம் ஸ்ரீவிஜயவாடா, கோணார்க், புவனேஸ்வர், கயா, புத்தகயா, காசி, சாரநாத், பிரயாக, சித்ரகூடம், அயோத்தியா, நைமிசாரண்யம், - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 10,250/-

15.11.2013 இது 15 நாட்கள் கொண்டது. மும்பை, நாசிக், பஞ்சவடி, த்ரியம்பகேஸ்வர், சிரடி, சனி சிங்கனாப்பூர், குர்லேஸ்வர், எல்லோரா குகை, நாகநாதம், பரலிவைத்தியநாதம், சைக்கடி மகாலட்சுமி கோவில், பண்டரிபுரம், பிரபுபாதம், அங்கு கணபதி சன்னிதானங்கள், உஜ்ஜயினி மகா காளேஸ்வரர், ஓங்காரேஸ்வரர் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 12,100/-

19.01.2014 இது 10 நாட்கள் கொண்டது. குருவாயூரப்பன் ஆத்திரிசேரி மாத்திரை அரோகரா, மதுராந்தி, மந்திராலயம், ஹுப்பாலி, கடப்பா, வேதாந்தி, கட்டப்பாடி, பத்ராசலம், ஹுகேரி, சிம்மாசலம், துர்காபுரம், துவாரகாதிருமலை, பொன்னூர் பெருமாள், விஜயவாடா, மங்களகிரி, நெல்லூர், நெல்லையப்பர், காளஹஸ்தி - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 9,500/-

02.02.2014 இது 15 நாட்கள் கொண்டது. மும்பை, நாசிக், பஞ்சவடி, த்ரியம்பகேஸ்வர், சிரடி, சனி சிங்கனாப்பூர், குர்லேஸ்வர், எல்லோரா குகை, நாகநாதம், பரலிவைத்தியநாதம், சைக்கடி மகாலட்சுமி கோவில், பண்டரிபுரம், பிரபுபாதம், அங்கு கணபதி சன்னிதானங்கள், உஜ்ஜயினி மகா காளேஸ்வரர், ஓங்காரேஸ்வரர் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 13,400/-

20.02.2014 இது 15 நாட்கள் கொண்டது. அஹமதாபாத், பக்கம் துவாரகை, லிம்டி, பரலா, சோமநாத், நாகேஸ்வரம், கோபி துவாரகை, கோதாவரி, நாசிக், பேட்துவாரகை, போர்பந்தர், அம்பாஜி, மாத்ருகயா, மவுண்ட் அபு, உதய்பூர், ஸ்ரீ நாத்துவாரகை, கங்கரோலி துவாரகை, புஷ்கர்தீர்த்தம், நெல்லூர் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 13,400/-

05.03.2014 இது 10 நாட்கள் கொண்டது. கோதாவரி சமோலி, கட்டப்பாடி, பேக்கர, முக்திநாத், மகாலட்சுமி அம்மன் கோவில் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 10,000/-

05.03.2014 இது 18 நாட்கள் கொண்டது. கோதாவரி சமோலி, கட்டப்பாடி, பேக்கர, முக்திநாத், மகாலட்சுமி அம்மன் கோவில், நைமிசாரண்யம் 11 நாட்கள் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 11,000/- 7 நாட்கள் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம் கட்டணம் இல்லை.

05.03.2014 இது 24 நாட்கள் கொண்டது. கயா, புத்தகயா, காசி, சாரநாத், கட்டப்பாடி, பேக்கர, முக்திநாத், மகாலட்சுமி அம்மன் கோவில், பிரயாக, அயோத்தியா, நைமிசாரண்யம் 17 நாட்கள் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 16,500/- 7 நாட்கள் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம் கட்டணம் இல்லை.

12.03.2014 இது 11 நாட்கள் கொண்டது. நைமிசாரண்யம் அங்கு 7 நாட்கள் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம் நடைபெறும். அதற்கு கட்டணம் இல்லை. 4 நாட்கள் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 4,000/-

12.03.2014 இது 17 நாட்கள் கொண்டது. கயா, புத்தகயா, காசி, சாரநாத், பிரயாக, அயோத்தியா, நைமிசாரண்யம் 10 நாட்கள் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 9,500/- 7 நாட்கள் ஸ்ரீமத்பாகவத உபன்யாசம் கட்டணம் இல்லை.

30.03.2014 இது 13 நாட்கள் கொண்டது. ஸ்ரீ ஜெகன்னாத், கோணார்க், புவனேஸ்வர், கொல்கத்தா, கொழுகத்தி, கேரையா, சிம்லா, சிருமுரி, சிக்கிம், டார்ஜிலிங் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 14,000/-

13.04.2014 இது 14 நாட்கள் கொண்டது. பிரயாக சித்ரகூடம், கயா, புத்தகயா, காசி, சாரநாத், நாசிக்தியாள், சிஷ்கேஷ், நியூடெல்லி, ஆக்ரா, மதுராவிருந்தாவன் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 12,500/-

அனைத்து இடங்களிலும் விலை மலிவு கருதாமல் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வாகும் சமயங்களுக்கு கடனாக வழங்கி உள்ளோம். யாத்திரைக்கான சான்று சிறப்பாக நிலைக்க வேண்டும்

ஒரே முகப்பாக வேறுபடாமல் 9444887134 என்ற செல்போன் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். நீங்கள் விரும்பும் இடங்கள் ஏற்பாடு செய்து தருகின்றோம்.

ஆன்மிகத் தாகம் வளரவும், ஆன்மிகப் பண்பு பட்டணம், தூங்கும் வாழ்வு கொண்டு, இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம், சைவோத்து தேவாரத்தும் பிரபுபாதங்களைக் கொண்டு மலை - காசி, ஆபாய் மதுரை, இரவு உணவுடன் இங்கு குறிப்பிட்ட தலங்களுக்கு சென்றவரை சேர்ந்தவை எந்த யாத்திரைகளில் காண்பு கொள்வதானாலும் குறைந்தபட்சம் 75 நாட்களுக்கு முன் முன்பதிவு செய்து கொள்வது நலம்.

மேலும் விவரங்களுக்கு:

ஸ்ரீ விஜயலட்சுமி டிராவல் சர்வீஸ்

பழைய எண். 55/3, புதிய எண். 12, சிங்காரச்சாலி தெரு, (நல்லா தம்பி தெரு கார்னர்)
திருவல்லிக்கேணி, சென்னை - 5. ✆ : 28440144 உரிமையாளர் : S. செல்வராஜன்

அத்வைதானந்தருக்கு அபிஷேகம்



சுவாமி விவேகானந்தர் பேலூரில் இருந்த கடைசி நாட்கள் ஆனந்தமயமானவை.

அவர் ஒரு நாள் சுவாமி அத்வைதானந்தரிடம், ''உங்களுக்கு வயதாகிறது. நீங்கள் இனி பாலும் பழங்களுமே உண்ண வேண்டும். எங்களுக்கெல்லாம் மூத்தவர் நீங்கள். தெய்வத் திருவுருவங்களுக்குச் செய்வதுபோல் உங்களுக்கு நாளை அபிஷேகம் செய்யப் போகிறோம்'' என்றார்.

அடுத்த நாள் சகோதரத் துறவிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து நிறையப் பாலை அத்வைதானந்தரின் சிரசு மற்றும் தோள்களில் பக்தியுடன் ஊற்றி அபிஷேகம் செய்தார்கள்.

பிறகு கங்கை நீரால் அபிஷேகம் செய்து உடம்பைத் துடைத்துவிட்டுப் புதிய துறவாடை அணிவித்தனர். பின் பழம், பால் மற்றும் இனிப்புகள் ஆகியவற்றை சிவபெருமானுக்கு அளிப்பதற்கொப்பான பக்தியுடன் அவருக்கு அளித்து நமஸ்கரித்தனர்.

சுவாமிஜி தமது மூத்த சகோதரரை இறைவனாகக் கண்டு இவ்வாறு வழிபட்டார்.

ஆதாரம் : Samvit - ப்ரவ்ராஜிகா பிரபுத்தப்ராணா

(சுவாமி அத்வைதானந்தர் ஜயந்தி தினம் - 4.9.13 - புதன்கிழமை)

விவேகானந்தரிடம் தோற்பது...

ஸ்ரீராமகிருஷ்ண சீடர்களுக்கிடையே அபரிமிதமான அன்பும், மரியாதையும் நிலவின.

ஒரு நாள் இரவு காளி (சுவாமி அபேதானந்தர்) குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார். உறக்கம் வராமல் அவர் புரண்டு படுத்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பெரிய அறையில் பெரிய கொசு வலை ஒன்றைக் கட்டி எல்லோரும் தரையில்தான் படுத்து உறங்குவார்கள்.

நரேந்திரர் இரவு இரண்டு மணிக்கு எழுந்து அவருக்காகத் தேனீர் போட்டுத் தந்தார்.

பிறகு சுவாமிஜி (நரேந்திரர்) காளியைச் சீண்டுவதுபோல், ''உனது அற்புத அத்வைத வேதாந்தத்தைவிட நான் போட்டுத் தந்த சூடான தேனீர் சிறிது பயனுள்ளதாக இல்லையா, காளி?'' என்றார்.

கீழை, மேலைநாட்டுத் தத்துவங்களை நன்கு கற்றிருந்த காளி நரேந்திரருடன் விவாதம் செய்வார்.

சுவாமி அத்புதானந்தர் ஒரு சம்பவத்தை நினைவு கூர்கிறார்:

காளி சாஸ்திரப் படிப்பிலும், மற்ற புத்தகங்களைப் படிப்பதிலும் மூழ்கியிருந்தார். சில நேரங்களில் அவர் நரேந்திரருடன் விவாதத்தில் ஈடுபடுவார். நரேன் அவரை வெகு எளிதாகத் தோற்கடித்து விடுவார்.

ஒருமுறை காளி நரேந்திரரை எப்படியோ மடக்கி விட்டார். அவரால் காளியின் கேள்விக்குப் பதில் கூற முடியவில்லை. உடனே அவர் காளியிடம், 'இன்றைக்கு இத்துடன் நிறுத்திக் கொள்வோம். நாளை மீண்டும் விவாதத்தைத் தொடர்வோம்' என்று கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டார்.

மறுநாள் நரேன் வேறுவிதமான விவாதங்களின் மூலம் காளியை மடக்கிவிட்டார். காளி வேறு வழியில்லாமல் தனது தோல்வியை ஒப்புக்கொண்டார்.

காளி என்னிடம், 'என்னால் நரேனைத் தோற்கடிக்க முடியவில்லையே' என்றார் வருத்தத்துடன்.

நான் அவரிடம், 'சகோதரா, உன்னால் எப்படி நரேனைத் தோற்கடிக்க முடியும்? அவர் நமது தலைவர் அல்லவா? அவரிடம் நீ தோற்பது இயல்புதானே?' என்று ஆறுதல் சொன்னேன்.

சுவாமி அபேதானந்தர் ஜயந்தி தினம் - 28.9.13 - சனிக்கிழமை

ஒரேயடியில் உச்சிக்குப் போய்விட வேண்டுமென்ற முயற்சிதான் உலகில் பெருந்துயருக்குக் காரணம்.- காப்ட்

இப்படி நினைவு!

சாதாரணமான ஒருவனுக்கு ஒரு புது கார் கிடைத்தது. அவரது நண்பர், ''இது மாதிரி எனக்கும் ஒரு கார் வேண்டும். யார் உனக்கு இதைக் கொடுத்தார்கள்?'' என்று கேட்டார்.

''இது எனக்கு என் அண்ணன் அன்பாகத் தந்தார். அவர் மாதிரி ஒரு சகோதரனைப் பெற ஆசைப்படு. கார் தானாக வரும்'' என்றார்.

இந்த உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த இன்னொருவன், ''நான் அந்தச் சகோதரனாக இருக்க விரும்புகிறேன்'' என்றான்.

- ஷிவ் கேரா

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்
SHRI KRISHNA SWEETS
பாண்டி பஜார், சென்னை PH:24317345

மலாலாவின் பேச்சில் விவேகானந்தரின் தாக்கம்

''முதலில் உங்கள் பெண்களுக்குக் கல்வி அளியுங்கள். பிறகு என்னென்ன சீர்திருத்தங்கள் தங்களுக்குத் தேவை என்பதை அவர்களே கூறுவார்கள்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறினார்.

சுவாமி விவேகானந்தர் 120 ஆண்டுகளுக்கு முன்பு கூறிய இந்த அறிவுரைகளை, இன்று 16 வயது பாகிஸ்தானியப் பெண் மலாலா ஐக்கிய நாடுகளின் சபையில் உணர்ச்சியுடன் கூறினாள்.

பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கைச் சேர்ந்த இஸ்லாமியப் பெண்

மலாலாதான் இப்புதுமைப் பெண். அவரை 'ஸ்வாட்'டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு அழைத்துச் சென்றது யார்?

2009-ன் ஆரம்பங்களில் ஸ்வாட், இஸ்லாமிய அடிப்படைவாதிகளான தாலிபன்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. டி.வி., இசை, பெண் கல்வி அனைத்தும் துப்பாக்கிமுனையில் மூடப்பட்டன. பெண்கள் வெளியில் செல்லத் தடை என்று திரும்பிய பக்கமெல்லாம் தாலிபனின் அநியாய அடக்குமுறை. சமுதாயத்தின் முக்கிய அங்கமான பெண்களை முடக்கும் அத்தனை செயல்களும் அங்கு அரங்கேறின.

இக்கொடுமைகளை உலகுக்கு அறிவிக்க பி.பி.சி. ஒரு பள்ளிப் பெண் மூலம் நடந்ததை எழுத வைக்க விரும்பியது. இது தொடர்பாக, பல பள்ளிகளை நடத்தி வந்த ஸ்வாட்டின் கல்வியாளரான மலாலாவின் தந்தை ஜியாவுத்தீனை அணுகியது.

அவர் 7-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த தன் மகள் மலாலாவின் பெயரைப் பரிந்துரைத்தார்.

மருத்துவர் ஆகக் கனவு கண்டு கொண்டிருந்த மலாலாவை, ஓர் அரசியல்வாதியாகத் தன் உரையாடல்களால் உருவாக்கி வந்த ஜியாவுத்தீன், ஒருமுறை அவரை ஒரு பத்திரிகையாளர் சங்கத்தில் 'எனது அடிப்படை உரிமையான கல்வியை அபகரிக்கத் தாலிபன்களுக்கு என்ன தைரியம்?' என்று முழங்க வைத்திருந்தார்.

இப்படி தந்தையின் வார்ப்பில் வளர்ந்த மலாலா, 'குல் மகாய் (சோளப்பூ)' என்ற புனைப்பெயரில் Blog எழுத ஆரம்பித்தார்.

''பள்ளியில் 27-க்கு 11 பேரே வந்திருந்தனர். எல்லாம் தாலிபனுக்குப் பயந்துதான். பள்ளியிலிருந்து திரும்பும்போது, 'உன்னைக் கொன்று விடுவேன்' என்று அருகில் ஒரு குரல் கேட்டது. நான் ஓட்டமெடுத்தேன். நல்ல வேளை அவன் என்னைத் தொடரவில்லை'' என்று இப்படி ஆரம்பித்தது மலாலாவின் டைரி.

தாலிபனுக்குப் பயந்து சீருடையின்றி, சாதாரண உடையில் பள்ளி சென்றது... என எல்லாவற்றையும் எழுதினாள் மலாலா.

பெண்களுக்கு எதிரான தாலிபனின் அட்டூழியங்கள் தொடர்ந்தன. டி.வி., ஆவணப் படம், பத்திரிகைப் பேட்டிகள் என்று பெண் கல்விக்கான மலாலாவின் தீவிர முயற்சியும் பிரச்சாரமும் தொடர்ந்தன. மலாலாவின் புகழ் பரவியது.

ஸ்வாட் மாவட்ட சிறுவர் சபையின் தலைவியாக மலாலா உருவெடுத்தாள். உலகளாவிய சிறுவர் அமைதிப் பரிசு, 'தேசிய இளைஞர் அமைதிப் பரிசு' என்று வீரப் பெண் மலாலாவிற்குப் பட்டங்களும் விருதுகளும் குவிந்தன. விளைவு?

தாலிபன் தலைவர்கள் அவளைக் கொல்ல முடிவெடுத்தனர்.

அன்று மலாலா பள்ளியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள். அவளது வாகனம் நிறுத்தப்பட்டது.

மலாலா யார்? என்று கொலைவெறியுடன் விசாரிக்கப்பட்டது.

மலாலா ஈவிரக்கமின்றிச் சுடப்பட்டாள். குண்டு தலை, கழுத்து வழியாகத் தோளில் இறங்கியது. தொடர்ந்த தீவிரச் சிகிச்சையால் மலாலா என்னும் மலர், மறுமலர்ச்சி அடைந்தது.

'மலாலா' என்றால் 'துயருற்ற' என்று பொருள். மலாலா உண்மையில் துயருற்றவள்தான். ஆனால் அது உடலளவில் மட்டுமே. அவளது உள்ளத்தின் உறுதியை எதுவும் துயரடையச் செய்ய இயலாது.

''தைரியமான சொற்கள், அதைவிட தைரியமான செயல்கள்



இவையே வேண்டியவை'' என்ற சுவாமிஜியின் வாக்கிற்கிணங்க புறப்பட்ட மலாலா ஐக்கிய நாடுகள் சபையில் ஜூலை 12, 2013-ல் உரையாற்றியதிலிருந்து சில பகுதிகள்:

''2012, அக்டோபர் 9-ம் நாள் தாலிபன் என் நெற்றியில் சுட்டார்கள். என் தோழிகளையும் தாக்கினார்கள். குண்டுகளால் எங்களை வாயடைக்கச் செய்து விடலாம் என்று நினைத்தார்கள். ஆனால் அவர்கள் தவறு செய்துவிட்டார்கள். அவர்கள் எதிர்பார்த்த அமைதியிலிருந்து ஆயிரமாயிரம் குரல்கள் எழும்பிவிட்டன. என்னிடம் உடல் பலவீனம் தவிர வேறு மாற்றமில்லை. எனது பயமும் நம்பிக்கையின்மையும் செத்துவிட்டன. பலமும் சக்தியும் துணிவும் பிறந்துவிட்டன. நான் அதே பெரும் விருப்பங்களுடன் உள்ள மலாலாதான்.''

மலாலாவின் துணிச்சலே அவளை உலகின் உயர்ந்த அரங்கில் உலக முழுவதுமான பெண்களுக்காக உரத்த குரல் கொடுக்க வைத்துள்ளது.

''அன்புச் சகோதரிகளே, சகோதரர்களே நமது குரலின் ஆற்றலை, அது ஒலிக்கத் தடை போடப்படும்போதுதான் நாம் உணர்கிறோம். அதேபோல் ஸ்வாட்டில் இருந்தபோது துப்பாக்கிகளைக் கண்டபோதே பேனா மற்றும் புத்தகங்களின் முக்கியத்துவத்தை அறிந்தோம். 'வாளை விடப் பலம் பொருந்தியது எழுதுகோலே' என்பதை உணர்ந்தோம். கல்வி அவர்களைப் (தாலிபன்களை) பயமுறுத்துகிறது. பெண்களின் சக்திமிக்க குரல் அவர்களைப் பயமுறுத்துகிறது. அதனால்தான் அவர்கள் பெண்களையும் பெண் கல்வியையும் கொலை செய்ய விரும்புகிறார்கள்.''

20-ஆம் நூற்றாண்டு திருப்பப்படும் முன்பே சுவாமிஜி பாரதத்தை இதே போல் எச்சரித்தார்: ''ஒவ்வொரு கிராமத்திலும் பெண்களுக்கான பள்ளிகளைத் திறக்கச் சொல்கிறேன்; அவர்களையும் மனிதப் பிறவிகளாக்கும்படி சொல்கிறேன். அவர்களின் நிலைமை உயர்ந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குற்றமில்லாத நெஞ்சம் அச்சமில்லாதது. - மாளிங்கர் பிள்ளைகள் மகத்தானவர்களாக வளர்வார்கள். அவர்களின் மூலம் நாடு மேன்மையுறும்; கல்வி, ஞானம், ஆற்றல், பக்தி ஆகியவற்றில் எழுச்சி ஓங்கும்''.

அந்தத் தீர்க்கதரிசியின் குரலுக்குச் செவி சாய்க்காத குற்றமே இன்று நாம் பல அவல நிலையை எதிர்கொள்ள வேண்டி உள்ளது என்பது இந்தப் பூவின் ஓசை கேட்டாவது உணரப்படுமா?

இதுவே உலக மக்களின் மேன்மையை விரும்பும் நல்லோரின் சிந்தனை. மலாலாவின் குரலில் விவேகானந்தரின் உருவமற்ற குரல் ஒலிக்கிறது.

''கட்டணமில்லா, கட்டாயக் கல்வியை ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கும்படி உலகின் அரசுகளைக் கேட்டுக் கொள்கிறேன். வளர்ந்த நாடுகளை வளரும் நாடுகளின் பெண்களுக்குக் கல்வியை அளிக்கக் கோருகிறேன். நாம் நம்மில் பாதியைப் பின்தள்ளிவிட்டு மற்றவர் முன்னேறுவது, வெற்றி பெறுவது என்பது சாத்தியமில்லை. வலிமையைக் கைக்கொள்ளவும் தமது முழு ஆற்றலை அறிந்து கொள்ள முயலும்படியும் நான் உலக முழுவதுமுள்ள சகோதரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.''

இதையே சுவாமிஜி ''பெண் குலம் சிறக்காமல் உலகத்திற்கு நல்ல காலம் இல்லை. ஒரே இறக்கையுடன் பறவை பறக்க முடியாது'' என்று கூறியுள்ளார்.

இவ்வாறு பெண் கல்வி, பெண் சக்தி ஆகியவற்றை உருக்கமாக உலக அரங்கின் முன் வைத்த மலாலா தன் உரையின் முடிவில்,

''எழுத்தறிவின்மை, வறுமை, பயங்கரவாதம் இவற்றுக்கு எதிராகப் போராடுவோம். நமது எழுதுகோலையும், நூல்களையும் எடுத்துக் கொள்வோம். ஒரு குழந்தை, ஓர் ஆசிரியர், ஒரு நூல், ஒரு பேனா இந்த உலகை மாற்றும் சக்தி உடையது. கல்வியே ஒரே தீர்வு! கல்வியே முதலில் தேவை.''

இச்சிறுமியின் உணர்ச்சிமிக்க, மென்மையான குரலுக்குப் பின்னால், ''நம் பெண்களுக்கு முக்கியமான பல பிரச்னைகள் உள்ளன. எனினும் கல்வி என்ற மந்திரத்தால் தீர்க்க முடியாத பிரச்னையே இல்லை'' என்ற சுவாமி விவேகானந்தரின் கம்பீரக்குரல் கேட்கிறதல்லவா!

- மோகனா சூரியநாராயணன்

கல்வி என்ற மந்திரத்தால் தீர்க்க முடியாத பிரச்னையே இல்லை.
- சுவாமி விவேகானந்தர்

இனிய சொல்லால் இரும்புக் கதவைக்கூடத் திறக்கலாம். - துருக்கிய பழமொழி

ஓர் ஆசிரியையின் ஆசிரிய மாணவி

சுறுசுறுப்பான காலை.
அவசரமாக நான்
பள்ளி புறப்பட்டேன்.
பேருந்தில் சன்னலோரத்தில்
இடம் கிடைக்க ஆனந்தமாய்
அமர்ந்தேன்.
எதேச்சையாய் திரும்பிப் பார்க்க
அட... நிறுத்தத்தில் நீங்கள்!
எத்தனை வருடங்கள்...
அழைக்க வாய் திறக்கும் முன்...
கண்டக்டர் விசில் கொடுக்க
வேகமாய் நகர்ந்தது பஸ்...

எங்கள் டீச்சர்... நீங்கள் 'இந்திராணி'
மிக நன்றாக நினைவிருக்கிறது.
அந்நாட்களில் ஆசிரியர்களுக்கு
சீருடை இருந்ததில்லை....
தினம் ஒரு காட்டன் புடவையில்
தேவதையாய் வருவீர்கள்.
பள்ளி வளாகத்தில்
ஒவ்வொரு முறை உங்களை
நான் கடந்து செல்லும்போதும்
வணக்கம் சொல்வதை
வழக்கமாய் வைத்திருந்தேன்.
உங்களைப் பார்க்கவே,
அவசியமின்றி ஆசிரியர் அறை
செல்வேன்.
அப்போது பத்தாம் வகுப்பில் நான்...
மதிப்பெண்கள், பொதுத் தேர்வு
என்று பயபக்தியுடன் முதல் நாள்
வகுப்புகள் தொடங்கின.
புதுப்புது ஆசிரியர்கள்...
நடத்தப் போகும் பாடத்துடன்
அறிமுகமாயினர்.
தமிழ்ப் பாட வேளை...
என்ன ஆச்சரியம்!
நீங்கள் என் தமிழாசிரியையாய்...
என் நெடுநாளைய கனவு பலித்தது.
அந்தரத்தில் நான் மிதக்க
மனசுக்குள் மழை.
இன்பப் பிரவாகம் என்னுள்
ஊற்றெடுக்க எனக்குள் ஒரு மாற்றம்.
தினம் வரும் உங்களின்
பாட நேரத்திற்காகக் காத்திருந்தேன்.
கற்க கசடற என்றீர்கள்,
பாகாய் இனித்தது.
மனப்பாடப் பாடல் நீங்கள்
வாசிக்கும்போதே என்
மனதில் பதிந்தது.
கம்பரின் ராமாயணத்தை...
வள்ளுவரின் திருக்குறளை...
வில்லிபுத்தூராரின் பாரதத்தை...
சிலப்பதிகாரத்தை,
மணிமேகலையை
எத்தனை அழகாக விவரித்தீர்கள்!
இலக்கணம்-அதுவரையில் எனக்கு
அது ஒரு புரியாத புதிர்.
குற்றியலுகரம், குற்றியலிகரம்
குறள் வெண்பா, யாப்பிலக்கணம்,
என எல்லாவற்றையும்
நிதானமாய் புடம்போட்டீர்கள்.
தொன்மையான தமிழ் உங்கள் நாவில்
தாண்டவமே ஆடியது.
நான் தமிழை ரசித்துப் படித்தேன்
படித்தால் மட்டும் போதுமா?
அழகாக எழுத வேண்டாமா?
என அன்பாய்க் கடிந்து
என் கையெழுத்தை மாற்ற என் மீது
நீங்கள் கஜினி முகமது போல்
படையெடுத்தீர்கள்.விளைவு?
விரல்கள் வில்லாய் வளைய
எழுத்துகள் எனக்கு வளைந்தன.
அலங்கோலமாக இருந்த என்
எழுத்துகள் அலங்காரமாயின.
உடற்பயிற்சி வகுப்பின்போது
அவசியம் விளையாட வேண்டும்.
ஆனால்... நானோ
ஓட முடியாது ஒதுங்கியிருப்பேன்.

நிதானமாகக் கேள்வி கேட்டவருக்குப் பதில் கூறினார்.
''கண்ணனின் கானத்தைக் கேட்டாலே பட்ட மரங்கள் எல்லாம் துளிர்க்கும் என்றேன். ஆனால் புல்லாங்குழல், கண்ணனின் கைகளில் பட்டுக்

ஒரு கூட்டத்தில் கவிஞர் கண்ணதாசன் பேசும் போது, ''கண்ணன் என் மன்னன். அவனது கானம் கேட்டால் பட்ட மரம் துளிர்க்கும்'' என்றார்.
கூட்டத்தில் ஒருவர், ''நீங்கள் சொல்வது நிஜமென்றால் கண்ணனின் கையி



விருக்கும் புல்லாங்குழல்-துளிர்த்

கெட்ட காலத்தில் துன்பம் மனதைக் கலக்கவிடாதே; நல்ல காலத்தில் இன்பம் எல்லையைக் கடக்க விடாதே.- ஹோரெஸ்

நீங்கள் கோபப்பட்டு
பார்த்ததே இல்லை.
நான் அவசியமின்றி
அழுதிருக்கிறேன்.
நீங்கள் அழவே மாட்டீர்களா?
அபத்தமாக நினைத்திருக்கிறேன்.
வியப்பிற்கும் ஒரு நாள் விடை கிடைத்தது.
அழகான உங்களின் கண்களில்
மை கரைய கண்ணீர் கசிந்தது.
ஆண்டு இறுதியில் 'பிரிவு உபசார விழா'
அன்று உங்களின் முகத்தில்
வழக்கமான புன்னகை காணவில்லை.
சோகத்தின் வடிகாலாய்
உங்களின் முகம் தெரிந்தது
தலைமை ஆசிரியருக்குப் பின்...
பேச நீங்கள் வந்து நின்றபோது
அருவியாய் வந்து விழும் வார்த்தைகள்
உங்களின் தொண்டைக் குழியில் சிக்கி
வெளிவராமல் சண்டித்தனம் செய்தன....
சிரமத்துடன் கண்ணீரின் ஊடே நீங்கள்
கூறியது 'வாழ்த்துகள்.... வணக்கம்...'
இன்னும் நினைவிருக்கிறது.
அந்த வாழ்த்துகள்தான் இன்றும்
என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன.

'காலம்' இன்று உங்கள் கார்கூந்தலில்
வெண்கோடுகளை வரைந்திருந்தது.
ஆனால் உங்களின் அழகு மாறவேயில்லை.
நினைவலைகளில் நீந்தி உங்களை
மனக்கண்களால் கச்சிதமாய் படம்
பிடிக்கிறேன்
உங்களுக்கு என்னைத் தெரிகிறதா?
பலவற்றை உங்களிடம் பயின்று
உங்களைப் போல் வர வேண்டும் என்ற
என் முயற்சியின் முதல் படியில் நிற்கும்...
'இன்று நானும் ஒரு டீச்சர்'
ஆனால்... உங்களிடம் சொல்லவில்லை
அவசியம் சொல்ல வேண்டும்.
சொல்வேன்.
மறுமுறை நான் உங்களைப்
பார்த்தால் உங்களிடம் நின்று நிதானமாய்
கேட்க வேண்டும்...
ஒன்றே ஒன்று 'சௌக்கியமா டீச்சர்?'

- அன்புடன்
கே.சித்ரா

ஆனாலும் என்னை
அழைப்பீர்கள்.
ஓடும் மாணவிகளின்
காலஅளவைக் குறிக்கச் சொல்லி
கையில் ஏடு கொடுப்பீர்கள்.

அன்று செப்டம்பர் 5, ஆசிரியர் தினம்.
உங்களுக்கு பரிசளிக்க வேண்டும்.
என் வீட்டுப் பூந்தோட்டத்தில்
அன்று மலர்ந்த சிவப்பு ரோஜாவை
உற்சாகத்துடன் பறித்து...
அவசர அவசரமாய்
பள்ளி சென்று உங்கள் அறையில்
எட்டிப் பார்த்தேன். ஆனால்...
நீங்கள் அங்கில்லை.
ஏமாற்றத்துடன் என் வகுப்பறைக்கு
வர... என்ன அதிசயம்!
எங்கள் வகுப்பில் நீங்கள்...
பட்டாம்பூச்சிகளுக்கு நடுவே
வெண்ணிற தேவதையாய்ப்
புன்னகையுடன் அமர்ந்திருந்தீர்கள்.
வாழ்த்துகளும், பரிசுகளும்
குவிந்து கிடந்தன உங்கள் முன்.
சூழ்ந்திருந்த என் தோழிகளைத் தாண்டி
என் பரிசு மலர் மிக்க சிரமத்துடன்
உங்கள் கையை அடைந்தது.
ஆனால் எஞ்சி அதில் இருந்தது.
இதழ் உதிர்ந்த காம்பில் மகரந்தம்
மட்டுமே...
அதையும் புன்னகையுடன் ஏற்றீர்கள்.
ஆனால் என் மெல்லிய இதயம்
இரண்டாய் பிளந்ததைப் போல்
வலித்தது தெரியுமா உங்களுக்கு?

புன்சிரிப்பே போர்வையாய்க் கொண்ட

திருக்க வேண்டுமே - அதுவும் பட்ட மரம் தானே?'' எனக் கேட்டார்.

கண்ணதாசனை மடக்கி கேள்வி கேட்டவரைப் பார்த்துக் கூட்டத்தினர் ஆரவாரம் செய்தனர். உடனே கண்ணதாசன் கூட்டத்தினரை அடக்கி, கொண்டே இருக்கிறது. அதனால் அதற்கு மீண்டும் பிறவி கிடையாது. நேராக மோட்சம்தான். அதனால்தான் புல்லாங்குழல் துளிர்க்கவில்லை'' என்றார். அதன் பின் கரகோஷமும் ஆரவாரமும் விண்ணைப் பிளந்தன. - வயலூர் இராம. பார்த்திபன்

செய்யாமல் விட்டுள்ள ஒவ்வொரு கடமையும் புதிதாக ஏழு கடமைகளுடன் திரும்பி வரும். - இங்ஸ்லே

ஸ்ரீ டிராவல்ஸின்

புனித யாத்திரைகள்

SENIOR CITIZENS PILGRIMAGE TOUR

சென்னை – டெல்லி – குருஷேத்ரா – ஹரித்துவார் – ரிஷிகேஷ்
மதுரா – விருந்தாவன் – கோகுலம் – ஆக்ரா – அலகாபாத்
சித்ரகூடம் – லக்னோ – நைம்சரண்யம் – அயோத்தியா
புத்தகயா – வாரணாசி – விந்தியாசல் – சென்னை.
பயணத் தொகை: ரூ. 20,000/– + இரயில் / விமான கட்டணம்
AC பஸ், தரமான ரூம்களுடன் தேதிகள்: 1.9.13, 16.10.13, 6.11.13

முதல் முறையாக பஞ்ச துவாரகைகளுடன் வட இந்திய திவ்ய தேச யாத்திரை - 18 நாள்

மதுரா – கோகுலம் – விருந்தாவனம் – நைம்சாரணயம் – அயோத்தியா – முக்திநாத் உட்பட. ரூ. 35,000/– + இரயில் / விமானக் கட்டணம்; தேதி: 2.10.13

5 நாள் அந்தமான் சுற்றுலா

(தரமான விடுதிகளில் A/c ரூம்கள் A/c பேருந்து வசதிகள், உணவு மற்றும் விமானக் கட்டணம் உட்பட) ரூ. 19,900 தேதிகள்: 4.9.13, 18.9.13

ஆந்திர மாநில யாத்திரை

கட்டணம்: ரூ. 7,500/– + இரயில் டிக்கெட் தேதிகள்: 11.9.13

மகாராஷ்டிரா சுற்றுலா

ரூ. 11,900/– + இரயில் கட்டணம் தேதிகள்: 11.9.13, 16.10.13

முக்திநாத் யாத்திரைகள்

முக்திநாத் மட்டும் விமானம் மூலம்

ரூ. 23,000/– + விமானக் கட்டணம்
செப். 21, 28. அக் 5, 12, 19, 26 நவ. 9 – 2013

முழு முக்திநாத்

ரூ. 24,500/– + இரயில் கட்டணம், 15.09.13, 16.10.13

முக்திநாத் மட்டும் (இரயில் மூலம்)

ரூ. 17,000/– + இரயில் கட்டணம் (போக்ரா – முக்திநாத் By Road) 1.9.13, 18.9.13, 9.10.13, 23.10.13, 06.11.13

முக்திநாத் மட்டும் (இரண்டு விமான கட்டணம் உட்பட)

ரூ. 21,000/– + இரயில் கட்டணம்
தேதிகள்: 18.09.13, 9.10.13, 23.10.13, 06.11.13

காசி - கயா அலகாபாத்

ரூ. 6,500 + இரயில் கட்டணம்
தேதிகள்: 03.9.13, 02.10.13, 01.11.13

நவ ஜோதிர்லிங்க யாத்திரை

ரூ. 18,900/– + இரயில் கட்டணம் தேதி: 11.09.13

பஞ்ச துவாரகா யாத்திரை

ரூ. 12,500/– + ரயில் / விமான கட்டணம்.
2.9.13, 15.9.13 (A/c Bus, A/c Rooms)

ஸ்ரீ டிராவல்ஸ்

சென்னை: 194/A, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு
email: sritrave@gmail.com, www.sreetravels.net

சென்னை : 6534 5081 / 082 & 92833 70555
மதுரை : 0452-2340942, 9600156942 / 91
பெங்களூர் : 9481077 426 / 429, Tel: 266201 91 / 95

Shyam

நீதியரசர் சந்துரு பதிலளிக்கிறார்!

கேள்வி : பல சவால்களுக்கு இடையிலும் நீங்கள் எளிமையாகவும் இயல்பாகவும் உள்ளீர்கள். அதற்கு உங்களுக்கு உந்துதலாக உள்ளது எது?

பதில் : நான் 1 முதல் 11-ஆம் வகுப்பு வரை ராமகிருஷ்ண மிஷன் பள்ளியிலேதான் படித்தேன். பண்பும் எளிமையும் இங்குள்ள இறைத் தலைமைகளைப் பார்த்துக் கற்றுக் கொண்டவை.

நம் வாழ்க்கையே ஒரு மிஷனாக இருக்க வேண்டும் என்ற கருத்தும் சுவாமி விவேகானந்தரின் படிப்பினையிலிருந்து கற்றுக் கொண்டவை.

நமக்காக வாழாமல் பிறருக்காக வாழ வேண்டும். எளிமை என்பது அப்படிப்பட்ட அஸ்திவாரத்திலிருந்துதான் வருகிறது.

கேள்வி : பிரச்னைகளைச் சந்திப்பதற்கு நமக்கு எவை தேவைப் படுகின்றன?

பதில்: பிரச்னையில்லாதவர்களே இல்லை. சுவாமி விவேகானந்தர் கூறுவதுபோல் நமக்கு முதலில் பயம் கூடாது.

இரண்டாவது, எதற்காக இந்தச் சேவையைச் செய்கிறோம் என்பதில் சரியான திறனாய்வு வேண்டும்.

மூன்றாவது, நேர்மை.

இம்மூன்றும் இருந்தால் எந்தச் சூழ்நிலையையும் நம்மால் மேற்கொண்டு எதிர்கொள்ள முடியும்.

கேள்வி: நான் அரசுப் பணிக்கு முயற்சித்து வருகிறேன். நான் அங்கு சேர்ந்த பிறகு லஞ்சம் வாங்காமல் பணியாற்ற முடியுமா?

பதில்: லஞ்சம் என்பது நம் சமுதாயத்தில் புரையோடிவிட்ட ஒன்று. அந்தச் சூழ்நிலையிலும் ஒரு பைசாகூட லஞ்சம் வாங்காமல் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்களும், தொழிலாளர்களும், அதிகாரிகளும் அரசுத் துறைகளில் உள்ளனர்.

அவர்களை அவ்வாறு இட்டுச் செல்லும் நேர்மை உணர்வை வளர்க்க வேண்டும். லஞ்சத்தை ஒரு நாளில் ஒழிக்க முடியாது. படிப்படியாகக் குறைக்க வேண்டும். அதற்கான இயக்கத்தை உண்டாக்க வேண்டும். லஞ்சம் என்பது ஒரு சுயநலப் பண்பு. இதை மாற்றிப் பிறர் நலன் எனும் பண்பை மேற்கொண்டு செயல்படும்போது அது மாற வாய்ப்புள்ளது.

கேள்வி: லஞ்சம் வாங்க நம்மைக் கட்டாயப்படுத்தினால்...?

பதில் : ஒருவர் லஞ்சம் பெற வற்புறுத்தப்படுகிறார் என்றால், அதற்கு எதிராக நம் நாட்டில் சட்டங்கள் உள்ளன. புகார் கொடுத்து அவர்களைச் சிறையிலும் தள்ள முடியும். அணுகுமுறையை வேலை செய்யும் சூழ்நிலையை வைத்து நீங்கள்தான் முடிவெடுக்க வேண்டும், ஏனென்றால் லஞ்சம் தருபவர்கள் பலம் வாய்ந்த சக்திகள்.

எனவே அதை எதிர்த்துப் போராட சட்டரீதியோடு உடல் ரீதியாகவும் பலம் தேவை. மக்களைத் திரட்டி, இதற்குத் தீர்வு காணாமல் தனிப்பட்ட முறையில் எதிர்கொள்வது ஒரு தனிமனித சாகசமாகத்தான் அமையுமே தவிர, பிரச்னையைத் தீர்க்காது.

கேள்வி: தண்டனை பெற்றுத் திருந்திய குற்றவாளிகளின் இன்றைய நிலை என்ன?

பதில் : எனக்குத் தெரிந்து தண்டனை முடிந்து திரும்பிய பலரும் எழுத்தாளர்களாகவும் தொழிலதிபர்களாகவும், சேவை புரிவோராகவும், வழக்கறிஞர்களாகவும் இருக்கிறார்கள்.

தவறு செய்தவர்கள் ஏதோ குற்றம் புரிந்தபோதிலும், அவர்களும் திருந்தி வாழும் வகையில் இன்று சூழ்நிலை உள்ளது.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் பலரும் சிறைச்சாலைக்குச் சென்றவர்களே! ராஜாஜி சிறை சென்றாலும் பின்பு கவர்னர் ஜெனரலாகப் பணிபுரிந்தார்.

எனவே சிறைச்சாலைக்குப் போவது என்பது முக்கியமல்ல, எந்தக் காரணத்திற்காகச் சென்றார் என்று பார்க்க வேண்டும்.

குற்றப்பரம்பரை என ஒன்று கிடையாது. குற்றப் பின்னணியே உள்ளது; திருந்துவதற்கான வாய்ப்பு கிடைத்தபோது அவர்கள் திருந்தி வாழ்கிறார்கள்.

கேள்வி : தாங்கள் தீர்ப்பு கூறிய 96000 வழக்குகளில் இளைஞர்கள் தவறு செய்வதற்கு அவர்களுக்கு ஏற்பட்ட தூண்டுதல்கள் யாவை?

பதில் : இன்றைய இளைஞன் செல்போன் பெட்டி, டி.வி. பெட்டி, கணினிப் பெட்டி இவை மூலமாகச் சவப் பெட்டி - இவற்றினுள் தன்னைச் சுருக்கிக் கொள்ளாதிருந்தால் அவனுக்குப் பிரகாசமான எதிர்காலம் உள்ளது. ❖

இரு பொருள்பட பேசுதல் பொய் கூறுவதற்குரிய பாதி வழி. - பொன்

For your requirements, please contact at

AHMEDABAD: [illegible] BANGALORE: [illegible] BHUBANESWAR: [illegible] BHIMAR: [illegible]
CHENNAI: [illegible] CHENNAI: [illegible] COIMBATORE: [illegible]
DELHI: [illegible] DEHRADUN: [illegible] GOA: [illegible] HUBLI: [illegible] JAIPUR: [illegible] KANPUR: [illegible]
KOCHI: [illegible] KOLKATA: [illegible] KOLLAM: [illegible] KOLHAPUR: [illegible] KOTTAYAM: [illegible]
KOTHAGIRI: [illegible] LUDHIANA: [illegible] MANGALORE: [illegible] MUMBAI: [illegible]
NAGPUR: [illegible] NASIK: [illegible] NAGERCOIL: [illegible] PONDICHERRY: [illegible] PORT BLAIR: [illegible]
PUDUCHERRY: [illegible] PUNE: [illegible] RAIPUR: [illegible] RAJAHMUNDRY: [illegible] RAJASTHAN: [illegible]
RAJKOT: [illegible] SALEM: [illegible] SECUNDERABAD: [illegible] SURAT: [illegible]
THIRUVANANTHAPURAM: [illegible] THRISSUR: [illegible] TIRUPATHI: [illegible] TIRUCHY: [illegible]
UTTARAKHAND: [illegible] VADODARA: [illegible] VIJAYAWADA: [illegible] VISAKHAPATNAM: [illegible]

ULTRA TILE PRIVATE LIMITED

[illegible]
Phone: [illegible]
Website: www.ultratile.com Keywords: [illegible] E-mail: info@ultratile.com

ULTRA DESIGNER TILES

நோய் தீர்க்கும் ஸ்ரீதன்வந்திரி பகவான்

ஓம் நமோ பகவதே வாசுதேவாய தன்வந்த்ரயே
அம்ருத கலச ஹஸ்தாய ஸர்வ ஆமயநாசனாய
த்ரைலோக்ய நாதாய ஸ்ரீ மஹாவிஷ்ணவே நம:|

– ஸ்ரீதன்வந்திரி பகவான் துதி

மருத்துவர் மருந்து அளிக்கிறார். கடவுள் குணப்படுத்துகிறார். - இந்த வாசகத்தைப் பல மருத்துவ மனைகளில் காணலாம்.

விஷ்ணு புராணத்தில் ஸ்ரீமந் நாராயணன் 22 அவதாரங்களாக வர்ணிக்கப்படுகிறார். இவற்றில் தன்வந்திரி அவதாரமும் ஒன்று.

பிறவிப்பிணி நீக்கும் மருத்துவர் எனப் போற்றப்படும் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் கோயிலில் ஸ்ரீதன்வந்திரி பகவானுக்குத் தனி சன்னதி உள்ளது.

பாற்கடலைக் கடைந்தபோது இவர் ஐந்தாவதாகத் தோன்றினார். அப்போது ஒரு கையில் அமிர்த கலசமும், இரு கைகளில் சங்கு சக்கரமும், நான்காவது கையில் ஓர் அட்டைப் பூச்சியுடனும் (Leech) காட்சி அளித்தார்.

அட்டைப் பூச்சியின் உணவு விலங்குகளின் ரத்தம். அது ரத்தத்தை உறிஞ்சும்போது ஹெபாரின் (Heparin) எனும் பொருளை உமிழ்கிறது. அது ரத்தத்தைக் குடித்து முடிக்கும் வரை ரத்தம் உறையாதிருக்க உதவும்.

ரத்தக் குழாய்களில் ஓடும் ரத்தம் உறைநிலைக்கு (Blood clot) மாறும்போது ரத்த ஓட்டம் தடைபடும். இதனால் இதயத்தின் இயக்கம் நின்று விடும். இந்த நிலையைத்தான் மாரடைப்பு என்கிறோம்.

மருத்துவர்கள் சோதனை செய்து, இதய அடைப்பிற்கான காரணத்தை அறிந்து நீக்க முயற்சி செய்வார்கள். இதற்கு ஹெபாரின் என்ற மருந்தை உடலில் செலுத்த, அடைப்பிற்குக் காரணமான திட நிலை ரத்தம் பழைய திரவ நிலைக்கு மாறி, அபாய நிலையிலிருந்து மீட்கும்.

ஆயுர்வேத வைத்தியத்தில் ஒரு நோயாளியின் உடலில் எந்த இடத்தில் கெட்ட ரத்தம் உள்ளது என்பதை அறிந்து அட்டைப் பூச்சியைக் கடிக்க வைத்து, கெட்ட ரத்தத்தை உறிஞ்ச வைப்பார்கள் என்று கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட பகுதி நன்கு இயங்க உதவுவது அட்டைப்பூச்சியிலுள்ள ஹெபாரின் ஆகும்.

தன்வந்திரி பகவானின் மந்திரத் துதியைக் கூறி மருந்து கொடுத்தால் நோயாளியின் நோய் விரைவில் குணமடையும். இதை மருத்துவர் அறியும் பட்சத்தில் மருத்துவத் தொழிலில் மேன்மையடைவது மட்டுமல்லாமல், கைராசி மருத்துவர் என்றும் புகழப்படுவார்.

நோயாளிகள் இதைப் பாராயணம் செய்து வர, நோயிலிருந்து விடுபடலாம்.

தன்வந்திரி பகவான் கையில் அட்டைப்பூச்சி மற்றும் சீந்தல் கொடி என்கிற மூலிகையையும் கொண்டு காட்சியளிக்கிறார்.

இந்த மூலிகையுடன் மேற்கூறிய மந்திரத்தையும் கூறி 'யக்ஞம்' செய்தால், பல தீராத வியாதிகளும் குணமாகும் என்பது நம்பிக்கை. – நா. இரமணிசேகர்

விவேகானந்தர் பற்றி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தரைப் பற்றிய ஒரு டிவிடி திரைப்படம்
தமிழ், இந்தி மற்றும் ஆங்கிலத்தில்!
நேரம் 1 மணி 25 நிமிடங்கள் டிவிடி: PAL வடிவம்
அற்புதமான சுவாமி விவேகானந்தரின் வரலாறு அவரது மொழிகளிலேயே அவரே கூறும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

இளைஞரான சுவாமி விவேகானந்தர் ஆக்ரோஷமான இந்தியப் பெருங்கடலை நீந்திக் கடந்து நடுவில் அமைந்த பாறையில் ஏறும் காட்சியுடன் திரைப்படம் துவங்குகிறது. இந்திய சரித்திரத்தை மாற்றி அமைத்த திருப்பங்கள் கொண்ட பயணங்களின் ஒன்று இவ்வாறு தொடங்குகிறது.

சுவாமிஜியின் குழந்தைப் பருவம், இளமை, குடும்பத்தின் வறுமை, குருதேவருடனான அவரது முதல் சந்திப்பு, குருதேவருடரான கருத்து வேற்றுமைகள், குருதேவரின் மகாசமாதி, ராமகிருஷ்ண மிஷனை நிறுவுதல், அவரது பரிவ்ராஜக வாழ்க்கை, அவரது அமெரிக்கப் பயணம் அதன் தொடர்ச்சி என்று படம் நீள்கிறது.

கருத்தாக்கம், கதை, திரைக்கதை அமைப்பு மற்றும் இயக்கம் : கார்த்திக் சரகுர்.

பிரதி விலை ரூ.150/– தபால் செலவு ரூ.50/–

ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை – 600004. ✆ : 2462 1110
வெப்சைட் : www.chennaimath.org email: mail@chennaimath.org

செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான், செய்யத் தெரியாதவன் போதிக்கிறான். - பெர்னார்ட்ஷா

தமிழ்நாடு இளைஞர் முகாம்

எம்.சரவணன்

எங்கும் எதிலும் போட்டி; பரபரப்புடன் இயங்க வேண்டிய கட்டாயம்; எதையும் யோசித்து, நிதானித்துச் செயல்பட முடியாத நிலை; இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமது கல்வி, எதிர்கால எதிர்பார்ப்பு -இவற்றுடன் வளையவரும் இளைஞர்களுக்கான முகாம் சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நடைபெற்றது.

சுவாமி விவேகானந்தரின் 150-வது பிறந்த ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் ஒரு நிகழ்ச்சியாக, ஜூலை 5, 6 மற்றும் 7 தேதிகளில் 'தமிழக இளைஞர் முகாம்' நடைபெற்றது. இதில் 215 பேர் கலந்து கொண்டனர்.

மடத்து மேலாளர் சுவாமி ஆசுதோஷானந்தர் முகாமைத் தொடங்கி வைத்தார்.

வந்திருந்த இளைஞர்கள் பலரும் 'இந்த முகாமிலிருந்து நான் எதிர்பார்ப்பது என்ன?' என்பது பற்றித் தங்கள் கருத்துகளைக் கூறினர்.

முதல் நாள் இரவு சுவாமி விவேகானந்தரின் ரத யாத்திரையின்போது நடிகர் விவேக், விவேகானந்தரைப் பற்றி ஆற்றிய உரை திரையிடப்பட்டது.

மறுநாள் அதிகாலை 5.30 மணிக்கு இளைஞர்கள் ஸ்ரீராமகிருஷ்ணர் சர்வ சமய சமரசக் கோவிலில் சிவ புராணம் ஓதினர். பின், பி.எஸ். உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் உடலை உரமேற்றும் உடற்பயிற்சிகளைச் செய்தனர்.

காலை உணவிற்குப் பின் சுவாமி விவேகானந்தரின் கடிதங்களிலிருந்து ஒரு பகுதி வாசிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 'பக்தஸ்வரா யுவ பஜனை மண்டலி'யின் பஜனை நடைபெற்றது.

ஓய்வு பெற்ற நீதியரசர் கே. சந்துரு அவர்கள் 'சமுதாயத்தை மேம்படுத்த இளைஞர்களே ஏற்றவர்கள்' என்ற தலைப்பில் உரையாற்றினார். சொற்பொழிவைத் தொடர்ந்து இளைஞர்கள் அவரிடம் நீதித் துறையைப் பற்றிச் சில கேள்விகள் கேட்டனர்.

'நல்லவற்றை என்றும் செய்ய முடியும்' என்ற தலைப்பில் திருமதி. கிரண் சசிதரன் உரையாற்றினார். இவர் சார்ந்த தொண்டு நிறுவனம் ஆற்றிய பல சேவைகள் மற்றும் சமீபத்தில் உத்தர காண்ட் மாநிலத்தில் 'இமாலய சுனாமி'யின்போது செய்த சேவைகள் பற்றியும் பகிர்ந்து கொண்டார்.

மதிய உணவுக்குப் பின்னர் கயிறு இழுத்தல், பலூன் விளையாட்டு நடைபெற்றன. இரு குழுக்களுக்கிடையே நடைபெற்ற கயிறு இழுக்கும் போட்டி சுவாரசியமாக இருந்தது.

'கூகுள்' நிறுவனத்தில் பணிபுரிந்த அருண் கிருஷ்ணமூர்த்தியுடன் இளைஞர்கள் கலந்துரையாடினர். சென்னை மற்றும் அதைச் சுற்றிலுமுள்ள நீர்நிலையங்களைத் தூரெடுத்து, அவற்றின் கரைகளைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் அருண். சுமார் 900 தன்னார்வத் தொண்டர்கள் அருணுடன் கைகோர்த்து இந்தச் சேவைகளில் களம் இறங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. ஹரி கணேசன் அவர்கள் இன்று உலகளவில் இளைஞர்களுக்கு உள்ள வாய்ப்புகளைப் பற்றிச் சுவாரசியமாக எடுத்துரைத்தார்.

ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தஜி மகராஜ், 'இன்றைய இளைஞர்களுக்கு விவேகானந்தர் என்ன சொல்கிறார்?' என்ற கருத்தில் உரை

திரு.இறையன்பு ஐ.ஏ.எஸ்.

திருமதி. கிரண் சசிதரன்

எம்.எஸ்.ஜி. ஹரி

அருண் கிருஷ்ணமூர்த்தி

முதுமை அழகைக் கெடுப்பதுபோல, நீதி தவறி நடப்பது செல்வத்தை அழித்துவிடும்.- விதுர நீதி

ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தர்

சுவாமி ஆசுதோஷானந்தர்

நிகழ்த்தினார்.

மாலையில் இளைஞர்களுடன் மடத்தின் துறவிகள் கலந்துரையாடியதில் அவர்களது சந்தேகங்கள் பலவும் நிவர்த்தியாயின.

மாலை ஆரத்திக்குப் பின்னர் சுவாமி ஆத்மசிரத்தானந்தர், 'இளைஞர்களின் நோக்கில் எது ஆன்மிகம்?' என்பது பற்றிச் சுவைபடப் பேசினார்.

இரவு குழு நாடகங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு குழுவினரும் ஆறு நிமிடம் தங்களது கருத்தை, பின்னணிக் குரல், உணர்ச்சிகரமான நடிப்பு, பாடல் முதலியவற்றுடன் அற்புதமாக வெளிப்படுத்தினர்.

மரங்களின் அழிவு, பிளாஸ்டிக்கின் தீமை, மதுப் பழக்கம், இளைஞர் முகாம் மற்றும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கைச் சம்பவம் போன்ற கருத்துகளில் ஒவ்வொரு நாடகமும் தொழில்முறை கலைஞர்களைப் போன்ற நடிப்புடன் நேரம் போவது தெரியாமல் ரசிக்க வைத்தது.

நீதியரசர் சந்துரு

மறுநாள் காலையில் கோவிலில் 'கீதை பாராயணம்' நடைபெற்றது. பின்னர் பள்ளிவளாகத்தில் சூரிய நமஸ்காரப் பயிற்சி வழங்கப்பட்டது. காலை உணவிற்குப் பின் ராமகிருஷ்ணானந்தர் அரங்கில் சுவாமி விவேகானந்தரின் நூலின் ஒரு பகுதி படிக்கப் பெற்றது. தொடர்ந்து சுவாமி ஆத்மஞானந்தர் பக்திப் பாடல்கள் பாடினார்.

டி.ராசிகேசவன்

திரு.இறையன்பு ஐ.ஏ.எஸ். 'இளைஞர்கள் எதை வாசிக்க வேண்டும்?' என்ற தலைப்பில் இளைஞர்களின் படிக்கும் ஆவலைத் தூண்டும் விதமாக மிகச் சிறப்பாக உரையாற்றினார்.

பின் திரு.டி.ராசிகேசவன் இளைஞர்களிடையே நினைவுத்திறனை வளர்த்துக் கொள்ளும் வழிவகைகளைக் கூறினார். பார்வைத்திறன் அற்ற இவர், செய்து காட்டிய சில நினைவுத்திறன் சோதனைகள் அனைவரையும் வியக்க வைத்தன.

மதிய உணவிற்குப் பின் பள்ளியில் தொடர் விளையாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. உறி அடித்தல், குழிக்குள் பந்து தள்ளுதல், கூடையில் பந்து போடுதல், குண்டு எறிதல், கயிறு ஏறுதல் போன்ற பல தொடர் விளையாட்டுக்களையும் ஒவ்வொரு குழுவினரும் உற்சாகமாக விளையாடினர்.

விளையாட்டு, யோகா, நாடகம், குழு ஆக்கம் போன்ற விஷயங்களில் ஒவ்வொரு குழுவினரும் காட்டிய முனைப்பும், ஈடுபாடும், தனித்திறமையும் பரிசீலிக்கப் பட்டு பாராட்டப்பட்டன.

இளைஞர் முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது. பின் 'இனி நான் செய்யப் போவது?' என்கிற தலைப்பில் ஒவ்வொரு குழுவினரும் ஒருவரையொருவர் விஞ்சும் வகையில் எடுத்துரைத்தனர்.

திருச்சி நேஷனல் கல்லூரியிலிருந்து சுமார் 20 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள், 'அடுத்த இளைஞர் முகாமிற்கு எங்கள் கல்லூரியிலிருந்து மட்டும் 100 பேர் வரை கட்டாயம் பங்கேற்போம்' என்று உறுதி கூறினர்.

முகாமில் கலந்து கொண்ட இளைஞர்கள் அனைவரும் தமது பிரச்னைகள், சவால்கள் மற்றும் பிரார்த்தனைகள் ஆகியவற்றை, கொடுக்கப்பட்ட படிவத்தில் எழுதி ஸ்ரீராமகிருஷ்ணர் கோவிலில் சமர்ப்பித்தனர்.

முகாமின் நிறைவுரையில் ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தஜி மகராஜ், பங்கு கொண்ட அனைவரும் நிச்சயம் பயனடைந்திருப்பார்கள் எனவும், அவர்கள் இவற்றை பழக்கத்தில் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும் என்றும் கூறினார். ❖

கஷ்டம் அனுபவிக்கும்போது துயரப்படுபவன் போல நடந்து கொள்ளாதே. - மார்கஸ் அரேலியஸ்

இளம் விஞ்ஞானியும்

இளம் விஞ்ஞானி தினேஷ்குமார்

இன்றைக்கு நம் நாட்டில் தலைமைப் பண்பிற்கு எந்த அளவிற்குப் பற்றாக்குறை இருக்கிறதோ, அதைவிட அதிக அளவிற்கு வாகன எரிபொருள் பற்றாக்குறை நிலவுகிறது.

ஒவ்வொரு முறை பெட்ரோல் விலை ஏறும் போதும் நடுத்தர வர்க்க மக்களின் இதயத் துடிப்பு எகிறுகிறது.

இவ்வளவு பெரிய நாட்டில் லட்சக்கணக்கான வாகனங்கள் அந்நிய நாட்டு எரிபொருளை நம்பி இருப்பது புத்திசாலித்தனமான நிலையா?

ஆட்சியாளர்கள் இதைச் சரியாக யோசிக்காவிட்டாலும் நம் இளைஞர்கள் இதைப் பற்றி யோசிக்கிறார்கள் என்பது வரவேற்கத்தக்கது.

வடசென்னை முத்தமிழ் நகரில் செல்வன் ஆர். தினேஷ்குமார். செயின்ட் ஜோசப் இன்ஜினியரிங் காலேஜில் எம்.இ. அப்ளைடு எலக்ட்ரானிக்ஸ் படிப்பவர்.

இவர் சூரிய சக்தியைக் கொண்டு இயங்கும் ஒரு காரை வடிவமைத்துள்ளார். நம் நாட்டில் அபரிமிதமாகக் கிடைக்கும் சூரிய ஒளியைச் சரியாகப் பயன்படுத்தினால் நமது மக்கள் மிகவும் பயன் அடைவார்கள்.

இந்த காரின் சிறப்பம்சங்களுள் சில:

1. எரிபொருளுக்கான செலவு எதுவுமில்லை.

2. சூரிய சக்தி கிடைக்காதபோது பெட்ரோல் மற்றும் பேட்டரி மூலமாகவும் இயக்க முடியும்.

3. பெட்ரோல் மற்றும் டீசல் வாகனங்களால் புகை மாசுக்கள் குவிகின்றன. ஆனால் இந்தச் சூரிய சக்தி காரானது சிறிதும் மாசு தராதது.

பொறுப்புமிக்க இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் புதிய காரைக் கண்டுபிடித்துள்ள தினேஷ்குமாருக்கு உத்வேக சக்தி எங்கிருந்து கிடைத்தது?

அவரே கூறுகிறார்: 'சுவாமி விவேகானந்தர்தான் என் ஆராய்ச்சிக்கும் மேற்கொண்டு நான் சேவை செய்வதற்கும் ஊக்கசக்தியாக விளங்குகிறார்.' தினேஷ் குமாரைப் பாராட்ட : 98400 58897.

இப்படியும் ஓர் அப்பா!

திருப்பூர், ஜெயந்தி மெட்ரிகுலேசன் பள்ளி. மற்ற வருடங்களைவிட இந்த வருடம் கூடுதல் அட்மிஷன் வருகிறது; காரணம், இதுவரை நடைபெறாத வகையில் இந்த ஆண்டு பத்தாம் வகுப்பு 100% தேர்ச்சி.

அதற்குக் காரணங்கள் பல. என்றாலும் அந்தப் பள்ளித் தலைமையாசிரியையின் 'ஒருமுகப்பட்ட கவனம்' சாதித்தே காட்ட வேண்டும் என்ற அக்னியை மூட்டி இன்று பிரகாசிக்கிறது. அவரது 'அக்னி மூலம்' எங்கு என்று பார்ப்பதில் ஒரு ஈர்ப்பு எனக்கு ஏற்பட்டது.

தலைமையாசிரியை புஷ்பலதாவின் தந்தை தன் பிள்ளைகளை வளர்த்த விதம் - வீரிய விதையாக-இந்த வெற்றிக்குப் பின்னே புதைந்து கிடக்கிறது.

அது பற்றி புஷ்பலதாவே ஓர் அருமையான சம்பவத்தைச் சொன்னார். 'அப்பான்னா இப்படியில்ல இருக்கணும்' என்று இயல்பாக மனம் உச்சரித்தது.

புஷ்பலதா அப்போது சிறுமி. அவருக்கு ஒரு சகோதரர். அவர்கள் ஊட்டியிலுள்ள 'படுகர்' இனத்தவர்கள். இறைவனும் இயற்கையும் அவர்களுக்கு இரு கண்கள்.

இந்துக்கள் குடியிருந்த அவர்களது பகுதியில், திடீரென்று மதமாற்றம் செய்து பிழைக்கும் கிறிஸ்தவ மிஷனரிகள் நுழைந்தார்கள். அவர்களது பிரச்சாரம் ஏற்கனவே இந்துக்களிடம் இருந்த 'கடவுள் பக்தி என்ற 'சாரத்தை' உறிஞ்சுவதைப் பார்த்தார் அப்பா.

ஒரு நாள் இரண்டு பிள்ளைகளையும் அழைத்தார்: ''நீங்கள் வேற்று மதத்து நல்ல சிந்தனைகளைக் கிரகித்து, நம் சொந்த மதத்தில் வளர்ந்தீர்களானால் உங்களை மெச்சுவேன். மாறாக, நம் மதத்தை விட்டு அந்த மதத்தில் சேர விரும்புவது கூடாது. அவ்வாறு செய்வது எப்படித் தெரியுமா?

''என் கண்முன்னே நீங்களே உங்கள் தாயை இன்னொருவனுக்குக் கட்டிக் கொடுப்பதுபோல்'' என்றார் கோபமாக.

இந்த அக்னியே புஷ்பலதா என்ற தலைமையாசிரியையின் மாறாத கவனம். அதுவே அவருக்கு வற்றாத சக்தியை வழங்கி வருகிறது.

தன் தந்தை தனக்குத் தந்த 'லட்சியத்தில் உறுதி' என்ற பண்பைத் தானும் பெற்று தன் பிள்ளைகளுக்குத் தந்துள்ளார் புஷ்பலதா. ஆம்.

கடவுள் பக்திக்கு அடுத்த கடமை அறவழியில் செல்வம் தேடுவதே.- முகம்மது நபி

இளம் மெய்ஞ்ஞானியும்

ஜெயந்தி மெட்ரிக் பள்ளியின் முதல் மதிப் பெண் பெற்ற மாணவி அவரது மகள்தான். (482/500)

STUDY FROM HOME!!

வேளச்சேரியைச் சேர்ந்த 6 வயது சஷாங்கன் பள்ளிக்குச் செல்ல முரண்டு பிடித்தான். அவனுக்கு என்னவாயிற்று? வீட்டிலேயே இருக்க விரும்புகிறானா? இல்லை. பள்ளிக்குச் செல்லத் தான் விரும்புகிறான். செல்லவும் செய்கிறான். ஆனால்...?

ஒரு நாள் சஷாங்கன் தன் அப்பாவிடம், ''அப்பா, நீங்கள் ஆபீஸ் வேலைகளை வீட்டிலிருந்தபடி (Work from Home) செய்றீங்க. அது மாதிரி நானும் வீட்டிலிருந்த படியே (Study from Home) படிக்கிறேனே?'' என்று கேட்டான்.

''ஏண்டா அப்படிச் சொல்ற?''

சஷாங்கன் ஆதங்கத்துடன், ''நான் வாரத்துக்கு ரெண்டு நாள் ஸ்கூலுக்குப் போனா போதும்பா. ரெண்டு கிளாசிலே சொல்ல வேண்டியதை டீச்சருங்க ஒரு வாரம் சொல்றாங்க'' என்றான்.

தந்தை திணறிப் போனார். நம் இளம் மாணவர் களின் அறிவுத்தாகத்தை வளர்க்கும் முறையில் நம் கல்விமுறை சுவையாக என்று மாறுமோ?

இப்படியும் ஒரு பெற்றோர்...!

சம்ஸ்கிருத மொழியையும் ஹிந்து சமய சம்ஸ்கார அறிவுகளையும் பரப்புவதற்காக ஏற்பட்டது 'சம்ஸ்கிருத பாரதி' என்ற அமைப்பு.

28.7.2013 அன்று 'சமஸ்கிருத பாரதி'யின் முழு நேர ஊழியர்களான ஸ்ரீராகவும் அவரது மனைவி நீலாவும் (பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன) என்னைச் சந்தித்தார்கள். அவர்கள் தங்களது 4 வயது மகனை அழைத்து வந்திருந்தனர்.

துறுதுறுவென்று இருக்கும் அவனைப் பார்த்தால் எல்லோருக்குமே மீண்டும் ஒருமுறை குழந்தையாக மாற மாட்டோமா என ஆசை வரும். (படம்)

சற்று நேரம் பேசிய பிறகு அவர்கள் என்னிடம், ''மகனின் படிப்பு சம்பந்தமாக உங்களிடம் பேச வந்துள்ளோம். இவனை எந்தப் பள்ளியிலும் சேர்க்க நாங்கள் விரும்பவில்லை. பள்ளியில் சேர்ந்து என்ன கற்றுக் கொள்ள முடியுமோ, அதைவிட அதிகமான அறிவுத் திறனைத் தாய் தந்தையராகிய நாங்கள் வழங்க முடிவெடுத்துள்ளோம்'' என்று கூறினர்.

குழந்தையின் தாய், ''இன்று பிரைமரி குழந்தைகளுக்கு, குழந்தை நிலையில் கிடைக்க வேண்டிய ஆனந்தமும் விளையாட்டும் கிடைப்பதில்லை. குழந்தைகள் தங்களை வாலிபர்களாக நினைக்கத் தூண்டப்பட்டு வளர்க்கப்படுகிறார்கள். ஆதலால் சில வருடங்களாவது எங்கள் மகன் நமது பாரம்பரிய சிறப் பான சம்ஸ்காரக் கல்வியைப் பெற வேண்டும். அதற்காக என்னவெல்லாம் செய்யலாம் என்பதைத் தெரிந்துகொள்வ தற்காக வந்துள்ளோம்'' என்று அந்த இளந்தாய் கூறினார்.

நான் ஆச்சரியத்தில் ஆனந்தப்பட்டேன். பிறகு நாங்கள் மூவருமாகச் சேர்ந்து சிந்தித்தோம்.

முடிவில், ''உங்கள் மகன் இன்னும் சிறிது வளர்ந்த பிறகு, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் காலையில் வந்து பூஜைக்கான கைங்கர்யம் செய்யலாம்'' என்றேன்.

மேலும், 'பள்ளிப்படிப்பு மட்டும் முக்கியமல்ல; தன்னம்பிக்கையை அவனுக்கு ஊட்ட வேண்டியது தாய் தந்தையின் மிக முக்கியமான கடமை. அதோடு, மகனை இப்படி வித்தியாசமாக வளர்ப் பதில் உற்றார், ஊரார் கூறப்போகும் விமர்சனங்களையும் தாங்கிக் கொள்ளும் தைரியம் உங்களுக்கு வேண்டும்' என்று கூறினேன்.

பிறகு வேதம், தேவாரம் மற்றும் திவ்யபிரபந்தம் ஆகிய வற்றை ஸ்ரீராகவ்-நீலா தம் பதியினரின் மகன் கற்பதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆலோசித்தோம்.

மனிதனை மனிதனாக்கும் - மனிதனைப் புனிதனாக்கும் கல்வியைத் தேடி உண்மையான உள்ளங்கள் ஏங்கித் தவிக்கின்றன. அப்படிப்பட்ட இளம் உள்ளங்களுக்குத் தாய் தந்தையர்களே சரியான குருவாக அமைவது தெய்வ அருளே.

அந்த ஓர் அருமையான வாய்ப்பு அந்தக் குழந்தைக்குக் கிடைத்திருக்கிறது. அதை அவன் நன்கு பயன்படுத்தி உண்மையான ஒரு மெய்ஞ் ஞானியாக மலர்ந்திட பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரை வேண்டிக் கொள்வோம்.

ஸ்ரீராகவைப் பாராட்டவும், 'சம்ஸ்கிருத பாரதி' பற்றி அறியவும் 94437 22007. ❖

காலை காபி, 3 வேளை சைவ உணவு தங்கும் வசதி ஏசி/நான் ஏசி ரயில் பயணம் 3 Tier இருக்கை கற்றுலாக்கள்

1. 28-09-2013 (வெள்ளிக்கிழமை) மற்றும் 28-10-2013 (திங்கள்கிழமை) 11-11-2013 முதல் மதுரை - ஆக்ரா - திரிவேணி - காசி - கயா - கல்கத்தா உள்பட 9 நாட்கள் — 6500/-

2. 24-09-2013 (வெள்ளிக்கிழமை) மற்றும் 24-10-2013 (திங்கள்கிழமை) 07-11-2013 முதல் மதுரை - ஆக்ரா - டெல்லி - அமிர்தசரஸ் - வாரிந்தாவன் - ரிஷிகேஷ் - திரிவேணி - காசி - கயா - புத்தகயா - கல்கத்தா - puri - கோணார்க் உள்பட 14 நாட்கள் — 10,500/-

3. 24-09-2013 மற்றும் 24-10-2013 மற்றும் 07-11-2013 முதல் மதுரை - ஆக்ரா - டெல்லி - குருக்ஷேத்திரம் - கண்டிகர் - சிம்லா - குலு - மணிகரன் - குலு - மனாலி - ரோஹ்தாங்பாஸ் - டெல்லி உள்பட 12 நாட்கள் — 10,500/-
* இந்தியன் அமிர்தசரஸ் - ஜம்மு - கட்ரா - வைஷ்ணவ தேவி உள்பட 15 நாட்கள் — 12,990/-

4. 24-09-2013 மற்றும் 24-10-2013 முதல் puri - புவனேஸ்வர் - கோணார்க் - கல்கத்தா - பாலுர்கா - கோகுல் உள்பட 12 நாட்கள் — 10,990/-

5. 24-09-2013 மற்றும் 24-10-2013 கடலூர்/சீர்காழி - காசி - ஹரித்வார் - ஹிமாச்சல் - முக்திநாத் - லாசிரிசாப் - கொரக்பூர் - டெல்லி உள்பட 16 நாட்கள் — 14,990/-

மாதந்தோறும் சிங்கப்பூர், மலேஷியா, தாய்லாந்து, பட்டாயா சுற்றுலா உண்டு

6. மாதந்தோறும் ஆந்தமான் சுற்றுலா! வண்டி 24 - மைசூர் வழி தேவாலா பாக் - கொழுமலை தொடங்கி - காடுகளும் தொழிற்சாலை - மினி 700 - மீன் அருங்காட்சியகம் - ஆதிவாசிகள் பிரதேசம் - வாரிசின் கேவ் கூடுக்கரை - ஜாலி தீவு - ஸ்கூபா தீவு - கோரல் தீவு - 8 நாட்கள் உணவு, தங்கும் வசதி, முன்பதிவு கட்டணம், படகு கட்டணம் உள்பட மெட்ராஸ் - விமான கட்டணம் தனி — 6,500/-

சன் டிராவல்ஸ்
Prop. K. சிதம்பரம், B.Sc., B.Ed.,
செல் : 90421 66668.
மதுரை : 15, கதிரேசன் கதிரேசன் தெரு, மேல் மாசி வீதி, இரயில் நிலையம் எதிரில், மதுரை - 625 001. Ph : 2341133, 3914139
சென்னை : 20, நடேசன் தெரு, சிவா விஷ்ணு கோவில் சுரங்கம், தி.நகர், சென்னை-17. Ph : 24359184, 65645 59184
கும்பகோணம் : ரோஜா பேப்பர்ஸ் எதிரில், கொழுமம் பாலம் தெரு, முதல் மாடி, விஜயலட்சுமி திரையரங்கு எதிர் தெரு, கும்பகோணம். Ph : 3433555, 98437 32391
திருச்சி : நல்லிகா M.S. கமிஷன் மார்ட் பக்கம் சுரங்கம், 34 AB ரோடு, திருச்சி. Ph : 94888 32782
ஈரோடு : சுமுகானந்தா 47-A, விஜயகுமார், அரசுமருத்துவமனை, ஈரோடு. Ph : 94887 89427
மதுரைக்கிளை : முத்துராமன் ஸ்ரீ மல்லிகார்ஜுனா ஜுவல்லர்ஸ் முனிசாலை. Ph : 93613 23763

ஓம் ஜெய் கங்கா மாதா ஸ்ரீ ஜெய் கங்கா மாதா

இந்தியன் ரயில்வே சிறப்பு தனி ரயிலில்

IRCTC

இமயத்திலிருந்து வங்கக் கடல் வரை
கங்கை நதியின் பயணம்
தீபாவளி கங்கா ஸ்நானம் யாத்திரை



தேவப்பிரயாகை - ஹரித்வார் - அலகாபாத்
காசி - கயா - கொல்கத்தா - கங்காசாகர்

புறப்படும் நாள் 26-10-2013 | 13 நாட்கள் | Pkg Cost 3AC Rs. 28450 SL. Rs. 21850

ரயில் கட்டணம் சைவ உணவு சுற்றுப்பயணக் பேருந்து தங்கும் வசதி

டிராவல் டைம்ஸ் Govt. of India Ministry of Tourism Recognized

CHENNAI : 14/6, Venkatnarayana Rd, T.Nagar. Ph : 24342166, 9790926956, 8754580852
KOVAI ✆ 2236669, 9345796778 MADURAI ✆ 4391228, 9790921212
Bangalore ✆ 25537772, 9663877788 E-mail : info@railtourism.com www.railtourism.com

ஆங்கிலேய ஆட்சியின்போது மெகாலே கூறினார்:

'நாம் (ஆங்கிலேயர்கள்) இந்தியர்களை மாற்ற வேண்டும்; அவர்கள் உடல் ரீதியாக மட்டும் இந்தியர்களாக இருக்க வேண்டும்; ஆனால் மனதளவில் அவர்களை ஆங்கிலேயர் போலவே மாற்றிவிட வேண்டும். இந்தியாவின் தொன்மையான கல்விமுறையையும் பாரம்பரியத்தையும் மாற்றுவோம்...'

இந்தியர்களாகிய நாம், நம் அறியாமையாலும் பாரம்பரியப் பெருமிதம் இன்மையாலும், கவனமின்மையாலும் மெகாலேயின் இத்திட்டத்தை இன்னும் முழுமையாக முறியடிக்கவில்லை.

இந்நிலைக்கு நாம் எந்தளவு பொறுப்பு என்பதை அறிய ஒரு சுய அலசல் செய்து கொள்வோம்.

இன்று புறத்தோற்றத்தில் நாம் இந்தியர்தான். ஆனால் அகத்தளவில் நம்முள் பாரதப் பரிமாணங்கள் உள்ளனவா?

உலகிற்கே ஆன்மிகத்தோடு, விஞ்ஞானத்தையும் கற்றுத் தந்தவர் நாம். நமது பிள்ளைகள் இன்று சம்பாதிக்கும் வழிகளைப் பெருக்கும் கல்வியையே கற்கிறார்கள்!

குடும்பங்களில், மனித உறவுகளில், செல்வத்தைச் சேர்ப்பதில், சேர்த்த செல்வத்தைத் தனக்கும் பிறருக்கும் பயனுடையதாக்குவதில் - இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் நாம் இந்தியராக விளங்குகிறோமா?

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் கிரிக்கெட் நடந்தால் மட்டும் நமக்குத் தேச பக்தி வருகிறது.

சீனா நமது எல்லைக்குள் நுழைந்து நம்மை அச்சுறுத்தும்போதுகூட நாம் விழித்தெழுவதில்லை.

'பாரத நாடு பழம்பெரும் நாடு, பாருக்கெலாம் திலகம்' என்றார் பாரதியார். சுவாமி விவேகானந்தரோ, 'பாரதத்தின் புதல்வர்கள் வேதகால ரிஷிகளின் வழி வந்தவர்கள்' என்றார். இன்று இந்த மேன்மையை நம் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மூலமாக நாம் அறிந்து கொள்ள முடிகிறதா?

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவசியமான



சிறந்த முதல் 15 படைப்புகளுக்கு தலா ரூ.150 வீதம் 15 பரிசுகள்

கேள்வி ஒன்று வருகிறது: பிறந்துவிட்டோம் இந்தியராக! வளர்கிறோமா, வாழ்கிறோமா இந்தியராக?

விவேகானந்தப் பயிற்சியாக இந்த மாதத்தில் 28 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

அவற்றைக் கவனமாகப் படித்து **ஆம்** / **இல்லை**; **சரி** / **தவறு** என்ற பதிலைத் தாருங்கள்.

இந்தப் பயிற்சிகளை முடித்து, இவை தொடர்பாக நீங்கள் செய்த வேறு நல்ல, பாராட்டத்தக்கச் செயல்களையும் எழுதி **அக்டோபர் 7-க்குள்** எங்களுக்கு அனுப்புங்கள். நன்கு எழுதிய சிறந்த 15 பேருக்குத் தலா ரூ.150/- பரிசாக வழங்கப்படும்.

உங்கள் படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், 31, ஸ்ரீராமகிருஷ்ண மடம் சாலை, சென்னை - 4.

மாணவ-மாணவிகளுக்கு/இளைஞர்களுக்கு

1. குரு அல்லது ஆசிரியர் தனது அறிவை மாணவனுக்கு வழங்குவதும், அவ்வாறு பெற்ற மாணவன் கற்ற பின் குருதக்ஷிணையை மனமுவந்து தருவதும் நமது மரபு.

காசு இறைத்தால்தான் இன்று கல்வி நிலையங்கள் கதவைத் திறக்கின்றன. இந்த முறை, எந்தளவுக்கு நம் பாரம்பரியத்தை வளர்க்கும் கல்வியாக இருக்கும்?

2. 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திரை கடல் ஓடி உலக வாணிபம் மேற்கொண்டவர்கள் நம் முன்னோர்கள். 'வண்மையின்மை (வள்ளல் தன்மையின்மை) ஓர் வறுமையின்மையால்' என்பார் கம்பர்.

ஆனால் இன்று **Foreign MBA** என்றால் உயர்ந்தது என்று நினைத்து, நம் நாட்டு வணிக, வாணிப வல்லுனர்களைத் தாழ்த்தாமல் இருப்போமா?

3. 'ஸஹநாவவது, ஸஹநௌ புனக்து' என்று ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து கற்பது நமது பாரம்பரியக் கல்விமுறை.

இன்றோ, **I teach, you listen** என்று ஆசிரியரும் **I pay, you teach** என்று மாணவரும் ஒரு வியாபார ஒப்பந்தப்படி இருப்பது, நம் பாரதீயப் பண்பாடா?

பிறந்துவிட்டோம் இந்தியராக! வளர்கிறோமா, வாழ்கிறோமா இந்தியராக?

4. ஆயகலைகள் 64-யும் அநாயசமாகப் படித்தவர்கள் நமது முன்னோர். அதற்கு அவர்கள் முதலில் தங்கள் மனதின் சக்தியைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள். ஆதலால் எந்தத் துறையிலும் ஆழமாகக் கற்க அவர்களால் முடிந்தது.

மனதின் ஆற்றல்களை வளர்த்து மனவலிமை, மனஒருமை வழங்காத இன்றைய கல்வி பாரதீய மரபுக் கல்வியா?

5. **Examination** என்றாலே **Exam-I-Nation** என்று பிரித்துப் பார்த்தனர் நம் முன்னோர். 'நான் **Exam** எழுதுவது என் முன்னேற்றத்திற்காக மட்டுமல்ல. நான் உயர்ந்தால் என் நாடும் உயர வேண்டும்' என்பதற்காகவே முன்பெல்லாம் தேர்வு எழுதப் பட்டது. 'நான் கற்பது என் தாய்நாட்டைக் காப்பதற்காக' என்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் கூறினார்.

இன்றைய தேர்வுகளில் மாணவர்கள் தங்கள் சுயநல வெற்றிகளை மட்டுமே கொண்டாடுகிறார்கள். மாணவனின் 'நான்' தாறுமாறாக வளரும்போது நாடும் தடுமாறுமா? இல்லையா?

6. மனதிற்குச் சாந்தத்தையும் உற்சாகத்தையும் தந்தது நமது பாரம்பரிய இசை.

இன்றோ காட்டு இரைச்சலுக்கும், அலறல்களுக்கும் தானே நம் பிள்ளைகள் ஆடுகிறார்கள். இப்படி ஆடுபவர்கள் இந்தியர்களாக வளர முடியுமா?

7. கண்முன்னே உள்ள பெற்றோரிடம் கரிசனமாக 'சாப்பிட்டீங்களாப்பா?' என்று கேட்கத் தவறுகிறார் ஓர் 'இணையதள வாசி'. ஆனால் முன்பின் அறியாத யார் புகைப்படத்தையோ முகநூலில் (**Facebook**) பார்த்துப் போலியாக நலம் விசாரிக்கிறாரே? இது இந்தியப் பண்பாடா?

8. 'இந்தியாவின் வீழ்ச்சிக்குப் பெண்களைப் புறக்கணித்ததே காரணம்' என்றார் சுவாமி விவேகானந்தர். நம் வீரத்தாய்மார்கள், மங்கையர்க்கரசி, ராணி மங்கம்மாள் போன்றவர்களைப் பற்றி அறிந்து கொண்டு 'ஈவ் டீசிங்' போன்ற கொடுமைகளை எதிர்க்கும் இளம் இந்தியர்தானே நீங்கள்?

9. தனியே உள்ள பெண்ணைச் சீண்டி அவளது நிம்மதியை இழக்க வைப்பவர் உங்களுடன் பயணித்தால், மற்ற பயணிகளுடன் சேர்ந்தோ, தனித்தோ அதைத் தடுக்கும் அளவுக்குப் பெண்மையைப் போற்றினால் நீங்கள்தான் வீர இந்தியர். நீங்கள் வீரமான இந்தியரா?

10. மேலை நாகரீகம் என ஒரே ஜீன்ஸையே 'அழுக்குத் தெரியாது' என்று பல நாட்கள் போடுவது, நேரங்கெட்ட நேரத்தில் குளிப்பது, பகலில் அதிகம் உறங்குவது போன்ற நம் கலாச்சாரத்திற்கு எதிரானவற்றைச் செய்வது ஏதோ வீரச் செயல் என்ற நினைப்பதால் நம் பண்பாடு வளருமா?

எல்லோருக்கும்...

11. பற்றுக்கோலின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தேரையே ஈந்தான் பாரி வள்ளல்! இன்று சகமனிதன் ஒருவன் தெருவில் மயக்கமுற்றுக் கிடந்திருந்தாலும் கண்டுகொள்ளாமல் இருந்தால் நாம் உண்மை இந்தியர்களா?

12. 'உயிர் போனாலும் பொய் கூற மாட்டேன்' என்றான் ஹரிச்சந்திரன்.

பொய்யைச் சர்வசாதாரணமாகச் சொல்லிக் குடும்பத்தில் அப்பா அம்மாவை ஏமாற்றுவது, வியாபாரத்தைப் பெருக்கப் பொய் மூட்டையை அவிழ்த்துவிடுவது போன்றவற்றைச் செய்தால் நாம் இந்தியர்களாக வளர்வோமா?

13. உலக அழகிப் (**Miss World**) பரிசுகளை இந்தியாவிற்கு ஏன் அடிக்கடி வழங்குகிறார்கள்? அதன் மூலம் நம் நாட்டை அழகு சாதனப் பொருள்களுக்கான மிகப் பெரிய ஒரு சந்தையாக மாற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு நீங்கள் ஆதரவு தர வேண்டுமா?

14. மக்கள் தொகையில் 28 சதவிகிதத்திற்கும் மேல் இன்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள்;

56% மேல் சத்துணவு வறுமைக் கோட்டுக் கீழேயும் வாழ்வதாகச் செய்தி படித்துப் பச்சாதாபப்படுகிறோம்.

இந்நிலையில் உங்களது வீட்டு வைபவங்களில் வீணாகும் பொருள்களைத் தடுக்கும் பொறுப்புள்ள இந்தியரா நீங்கள்?

15. 'அரபு நாடுகளில் இந்துக்கள் கோவில் கட்டி வழிபடுகிறார்கள்' என்று பெருமிதப்படும் நாம், நம் உள்ளூர்க் கோயிலில் நித்திய பூஜைக்கு வழியுள்ளதா என்று பார்க்கிறோமா?

16. பெற்றவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் நன்றி செலுத்தும் நம் பண்பாட்டை மறந்து, '**Mother's Day, Father's Day**' என்று வருடத்தில் ஒரு நாள் மட்டும் உதட்டளவில் பேசி நினைவு கூர்வதே போதும் என்ற நாகரீகத்திற்கு நீங்களுமா அடிமை?

17. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று முழங்கினார் பாரதியார். உழவுக்கும், தொழிலுக்குமான 'வளர்ச்சித் திட்டங்கள்' நம் நாட்டின் வளங்களைச் சுரண்டுவதாக உள்ளது இக்கால நிலை. இது பாரதத்திற்கு நல்லதா?

18. சுற்று வட்டாரத்தில் என்றோ இறந்தவர்களைக்கூட அறிந்து வைத்திருந்தது அந்தக் காலம்.

ஆனால் இன்று அடுத்த வீட்டில் இருப்பவர்களின் முகம்கூட அறியாமல் உள்ளோம். இதுவா நம் பண்பாடு?

19. பிராணாயாமம், பிள்ளையாரைப் பிரார்த்தித்து தலையில் குட்டிக் கொள்வது, தோப்புகரணம் போன்றவை விஞ்ஞான ரீதியானவை என மேல்நாட்டாரே இன்று வியக்கிறார்கள். இது போன்ற நல்ல பழக்கங்களைத் தொடரும் இந்தியரா நீங்கள்?

20. விதையில்லாத மாதுளை, பப்பாளி இவற்றை வசதியாக உண்பதற்காக 'ஜெனடிக் இன்ஜினியரிங்' என்ற தொழில் நுட்பம் வந்துள்ளது. இதற்கான விதைகளை வெளிநாட்டிலிருந்து வாங்கி நம் நாட்டு விவசாயத்தை அழிக்கும் போக்கு பற்றி சிந்திக்கிறீர்களா? இவற்றின் பின்னுள்ள சதியைப் புரிந்து கொண்டுள்ள இந்தியரா நீங்கள்?

21. 'அமெரிக்காவைப் பார்; ஜப்பானைப் பார்! அங்கெல்லாம் இப்படியில்லை' என அங்கலாய்ப்பதை விட்டு, இங்குள்ள குறைகளுக்கு நாமும் ஒரு காரணம் என்று உணர்ந்து கொண்டு ஏதாவது செய்யத் தொடங்குவீர்களா?

22. இன்று சாதிப் பிரச்னை தலைவிரித்தாடுகிறது. அல்லது யாரோ அதை விரித்தாடச் செய்கிறார்கள்.

ஆனால் 'சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்தமென்போம்; நீதி நெறியினின்று பிறர்க்கு உதவும் நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்' என்று மனித வாழ்வின் மேன்மைக்கும் இழிவிற்கும் இலக்கணம் தந்த ஔவையாரின் கோட்பாட்டைப் புரிந்து கொண்டால் சாதிகள் நம் சமூகத்திற்கு நன்மையே செய்யும்.

இதை ஏற்றுக் கொண்ட இந்தியரா நீங்கள்?

நமது குடும்பங்களின் நலத்திற்காக...

23. அன்று நமது கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் தியாகம், விட்டுக்கொடுத்தல் இயல்பாக இருந்தன. இன்றோ தனிக் குடும்பங்களில் ஏட்டிக்குப் போட்டி என்ற நிலைதான். இதில் நாம் இந்தியர் என்று பெருமைப்பட்டுக் கொள்ள முடியுமா?

24. எல்லாவற்றையும் ஏற்றுக்கொள் என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் பலர்.

தங்கள் மதத்தைப் பற்றியும், தங்களது சமயத் தலைவர்கள்,

பிறந்துவிட்டோம் இந்தியராக; வளர்கிறோமா, வாழ்கிறோமா இந்தியராக?

பிறந்துவிட்டோம் இந்தியராக; வளர்கிறோமா, வாழ்கிறோமா இந்தியராக?

கடவுளர்கள் பற்றியும் யார் என்ன இழிவாகச் சொன்னாலும் சொரணையின்றி, 'சமய சமரசமே நாம் வேண்டுவது' என்று போலித்தனமாக 'செக்குலரிசம்' பேசுவதா பாரதப் பண்பாடு?

25. கணவன் மனைவியிடையே சிறிதாகத் தொடங்கும் பிரச்னைகளுக்குவிட்டுக்கொடுத்தலைப் பற்றிக்கூறி அவர்கள் இணைந்து வாழ வழிவகுத்தனர் நம் முன்னோர்.

இன்றோ இருவரின் விருப்பங்களும் அதிகமாகி வேதனைகளும் கூடி வருகின்றன. இந்த நிலையில் விட்டுக்கொடுக்கும் பண்பு நம்மை விட்டுவிடுகிறது. இதைத் தடுத்தால் நாம் சிறந்த இந்தியராக ஆக முடியுமா? முடியாதா?

26. பெற்றோருக்குச் சேவை செய்வதற்காகக் கடவுளையே வாசலில் காக்க வைத்தார் நமது முன்னோர்களுள் ஒருவர். இன்றோ பெற்றவர்களை முதியோர் இல்லத்திற்கு அனுப்பிவிட்டு, ஆடம்பர வாழ்க்கை வாழ்வது நம்மை உண்மையான இந்தியராக்குமா?

27. ஒரே கடவுளை வணங்கும் சிலர், தங்கள் புனித நூல், தங்கள் கடவுள் தவிர, மாற்று சமயக் கருத்துகள் பற்றித் துளியும் கேட்க விரும்புவதில்லை.

இதர மக்களின் நல்ல விஷயத்தில்கூட அவர்களுக்குச் சகிப்புத் தன்மை இல்லாதிருப்பதா இந்தியப் பண்பாடு?

28. தந்தை சொல்லைத் தட்டாத ராமரும், தந்தையின் விருப்பத்திற்காகத்தன்ராஜ்யத்தையேதுறந்தபீஷ்மரும்வாழ்ந்த நாடு இது. நமது சில இளைஞர்கள் இன்று தங்கள் தந்தையிடம் கூட சாதாரணமாகப் பேசுவதில்லை. நாம் இந்தியர்தாமா?

உங்கள் படைப்புகள் எங்களுக்கு அக்டோபர் 7-க்கு முன்பு வர வேண்டும்.

பெயர் :

பள்ளி / வீட்டு முகவரி :

போன் :

ஜூலை மாத விவேகானந்தப் பயிற்சியில் பரிசு பெற்றவர்கள்

திருமதி. பி. ஜெயசித்ரா
ரங்கா பைனான்ஸ்
கடைவீதி, ஆத்தூர்-636102.

திரு. T.M.பத்மநாபன்,
ரமணா நகர்,
பெரம்பூர்,
சென்னை - 11.

செல்வி T. வினோதினி,
அரசினர் சித்தா மருத்துவக்
கல்லூரி, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி - 627 002.

திருமதி. கஸ்தூரி லோகநாதன்
விகர்கி ஜெம் பிளாட்,
வெங்கடாபுரம், அம்பத்தூர்,
சென்னை-53.

செல்வன் கி.சி.புவனேஷ் கண்ணா
ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயா
மெட்ரிக்.மேல்நிலைப்பள்ளி,
பூந்தோட்டம், விழுப்புரம்.

செல்வி பி.பவித்ரா
லேடி சிவஸ்வாமி பெண்கள்
மேல்நிலைப்பள்ளி,
மயிலாப்பூர், சென்னை - 4.

செல்வி B. ஐஸ்வர்யா
விவேகானந்த வித்யாலயா
மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
விழுப்புரம்.

செல்வி வி.லாவண்யா,
ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயா
குருகுலம் மெட்ரிக். மே.நி.
பள்ளி, உளுந்தூர்பேட்டை.

செல்வி S.சங்கீதா
லேடி சிவஸ்வாமி பெண்கள்
மேல்நிலைப்பள்ளி,
மயிலாப்பூர், சென்னை - 4.

செல்வி த.ஹேமலதா
ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயா
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
விழுப்புரம் - 605 602.

செல்வன் D.B.ஐயப்பன்,
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்
வித்யாலயா ஆண்கள் மேல்
நிலைப்பள்ளி, செங்கல்பட்டு.

செல்வி கிர்த்திகா
க.கா.மி.அரசு.மே.நி.பள்ளி,
சுல்தான்பேட்டை,
புதுச்சேரி - 605 110.

செல்வி S.சிவகாயத்ரி,
விவேகானந்த வித்யாலயா
மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
விழுப்புரம்.

செல்வன் S.அர்ஜுன்,
பஜனை கோயில் தெரு,
புழுதிவாக்கம்,
சென்னை - 91.

செல்வி ச.கோமதி,
ராம்தயாள் கெம்கா
விவேகானந்த வித்யாலயா,
திருவொற்றியூர், சென்னை-19.

செல்வன் ஏ.விஜய்
பி.எஸ்.மேல்நிலைப்பள்ளி,
மயிலாப்பூர்,
சென்னை-4.

செல்வன் மு. சிவராம்,
சிங்காரப்பேட்டை அஞ்சல்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

செல்வி ந. சிநேகா,
ஹிந்து சீனியர் செகண்டரி பள்ளி,
இந்திரா நகர், அடையார்,
சென்னை.

சைவ சமயக் கலைக் களஞ்சியம்

(பத்துத் தொகுதிகள்)

பத்துத் தொகுதிகளும் A4 அளவில், உயரிய தரமில், பல வண்ண அளவில் (Multi Colour), 7200 பக்கங்களில் அமைந்துள்ளன. 3 ஆயிரம் வண்ணப் படங்களும், 1200 சிறப்புத் தலைப்புகளும் (டாப்பிக் சென்டர்), ஆயிரக் குறுஞ்சுத்திகள், பேரகராதிகள், சைவ அறிஞர்களின் ஆசிரியர், வாழ்க்கை, அனுபவம், ஆன்மிக முயற்சிகளுடன் இக்களஞ்சியம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

உலகளவில் 5 ஆயிரம் ஆண்டுக்கால சைவ - வரலாறும் பெருமிதங்களும் - 220 அறிஞர்களின் முயற்சியில் ஆய்ந்து பதிவு செய்யப் பெற்றுள்ளன. இதுவரை சைவம் குறித்து, இந்தளவு விரிவான நூல் தொகுதி ஒன்றும் வெளிவந்ததில்லை என்று அறிஞர் உலகம் பாராட்டும் பெற்றிருக்கிறது. தமிழில் அமைந்த ஓர் இணையத் - தளக் கருவூலம் இது.

சைவ - சமயக் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளும் ரூ.15,000.00 (பதினைந்தாயிரம்) மட்டுமே.

விற்பனை விலை (இந்தியாவில் மட்டும்) குறிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கு வெளியே விலை 500 US டாலர் ஆகும்.

நூல்களைப் பெற விரும்பினால் உரிய தொகையை

'தெய்வச் சேக்கிழார் பதிப்பகம்' (அல்லது) "SAINT SEKKIZHAAR PATHIPPAGAM"

என்ற பெயரில், காசோலை (அ) DD ஆக எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப தங்கள் முகவரி, தொலைபேசி எண் விபரங்களுடன் அனுப்பிக் கலைஞியத் தொகுதிகளைப் பெற்றுப் பயனடைய அன்புடன் வேண்டுகின்றோம்.

SBI, Chennai - 90, C/A எண் 32681140572 (SBIN 0003274)இல் உரிய தொகையைப் பணமாற்று முறையில் செலுத்தியும் நூல்களைப் பெறலாம். நூல்கள், பதிப்பகச் செலவில் தங்கள் இல்லத்து முகவரிக்கு அஞ்சல் துறைப் பதிவுப் பார்சலாக அனுப்பி வைக்கப் பெறும். மேலும் விரிவான தகவல்களை, எமது www.saivam.co.in வெப்சைட்டில் பெறலாம்.

முகவரி : தெய்வச் சேக்கிழார் பதிப்பகம், 71/12, விநாயகர் தெரு, கலைஞர் நகர், பெரம்பூர், தபா, சென்னை - 600 011, தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0091 - 044-24816666, 94440 21113, 94440 96666. E-mail: nayanmar_63@yahoo.co.in

இந்திய மேதாவிகள் கருத்து

உலகின் குரு இந்தியா!

மஹா அலெக்சாண்டரை அவரது மக்கள் மகத்தானவர் என்று அழைத்திருக்கலாம். ஆனால் இந்தியர்கள் அவ்வாறு அழைக்கவில்லை.

அலெக்சாண்டர் இந்தியாவுக்கு ஏன் வந்தார்?

உலகத்தை வெல்ல வேண்டும் என்ற முழக்கத்துடன் அவர் புறப்பட்டார். உலகிலேயே சக்தி வாய்ந்த நாட்டை ஜெயிக்க வேண்டும் அல்லவா, அதுதான் வளமிக்க-உலகின் மையமாக இருந்த- இந்தியாவை முதலில் குறிவைத்து வந்தார்.

உண்மையில் அவரது வீரமிக்க சிப்பாய்களில் பெரும்பாலானோர் இந்தியக் கூலிப் படையினர். ஆதலால்தான் அவரால் இந்தியாவை அடைய முடிந்தது. இந்திய எல்லை வந்ததும் இந்தியக் கூலிப்படையினர், ''நாங்கள் எங்கள் நாட்டு மக்களுடன் போரிட மாட்டோம், நாங்கள் திரும்பிப் போக விரும்புகிறோம்'' என்றார்கள்.

அலெக்சாண்டர், ''ஆயுதங்களை விட்டுவிட்டு நீங்கள் திரும்பிப் போகலாம்'' என்றார். அவர்கள் சென்றதும் தன் தளபதிகளிடம், ''அந்த மக்கள் என்னுடன் போரிட்டால் நான் இந்தியாவை வெல்ல முடியாது. ஆகவே அவர்கள் அனைவரையும் கொன்றுவிடுங்கள்'' என்று கூறினார்.

அக்கூலிப்பட்டாளம் குடும்பத்தோடு கொலை செய்யப்பட்டது. இவரையே மஹா அலெக்சாண்டர் என அழைத்தனர்!

அவர் இந்தியாவின் எல்லைப் பகுதிக்கு வந்த போது அவருக்குத் தொடர்ந்து தோல்விகளே கிடைத்தன. அந்த நிலையில் அவர் திரும்ப நேரிட்டபோது 'நான் தோற்றுவிட்டேன்' என்று கூற முடியவில்லை. ஆகவே நான் ஜெயித்து, ஜெயித்த ராஜ்யத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டேன் என்று கதை கட்டிவிட்டார்.

இதில் உண்மை என்னவென்றால் கிரேக்க வரலாற்று ஆசிரியர்களில் பலர் அவர் மோசமாகத் தோல்வியடைந்து திரும்பிவிட்டதாகவே கூறுகிறார்கள். அவர் வென்றதாக யார் சொல்கிறார்?

அலெக்சாண்டரின் சொந்த வரலாற்று ஆசிரியன் ஒருவன்தான் அவ்வாறு சொல்கிறான். அவன் கட்டிய கட்டுக் கதைகளில் இதுவும் ஒன்று.

நான் இந்த உதாரணத்தைக் குறிப்பிடக் காரணம், இந்திய க்ஷத்திரியர்கள் போரிடும் திறமை எந்த அளவிற்குச் சிறந்திருந்தது என்றால், நம் பாதுகாப்பான மண்ணிற்குள் எவருமே நுழையத் துணியவில்லை. நாம் நம் பாரம்பரியத்திலிருந்து என்று நழுவினோமோ, அப்போதே எல்லாம் வலுவிழந்தது. எண்ண ஆற்றல் வலுவிழந்தது, உயிர்ச்சக்தி வலுக்குன்றியது. இவையே அந்நிய படையெடுப்புகளுக்கு வழிவகுத்துக் கொடுத்தன.

திருப்புமுனை : அந்தக் காலகட்டத்தில் சிறிது சிறிதாக ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. படையெடுப்புகளின் ஊடே நமது வேர்களை மீண்டும் காண்பதற்கான போராட்டம், அதிர்வு, விழிப்புணர்வு தோன்றியது. இதுதான் இப்போது நாம் இருக்கும் இந்தக் கால மாற்றம்.

நாம் ஏன் வீழ்ச்சியுற்றோம்? ஏன் இவ்வளவு நலிந்து போனோம் என்பதை முழுமையாக உள் நோக்கிப் பார்க்கும் படலம் துவங்கியது.

கடந்த காலகட்டத்தில் இந்திய மனம் தலையெடுக்க விடாமல் அழுத்தி வைக்கப்பட்டது. பொருந்தாத வெளிநாட்டுக்கல்வி முறை நம் மீது திணிக்கப்பட்டது. வெளிநாடு சார்ந்த பண்புகள் புகுத்தப்பட்டன. மனதைச் சிதறடிக்கச் செய்யும் பெரும் பாதிப்புக்கு இந்தியா உள்ளானது.

இந்திய மனதின் பண்புக் கூறுகளுக்கும் ஐரோப்பிய மனதின் பண்புக் கூறுகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை ஸ்ரீஅரவிந்தர் குறிப்பிடுகிறார். ஐரோப்பிய மனதானது இயல்பாகவே துண்டுகளை

சென்னை ஐ.ஐ.டி.யில் 31.3.2012 அன்று 'விவேகானந்தா வாசகர் வட்டம்' நடத்திய கருத்தரங்கில் ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்த **சிரத்தாலு ரானடே** ஆற்றிய உரை.

அவசரப்படுவதால் வழக்கத்தைவிடத் தாமதமே உண்டாகும்.- போவீ

யும் வடிவங்களையும் மட்டுமே நோக்குகிறது, அத்துடன் நின்று விடுகிறது.

இந்திய மனமோ இயல்பாகவே முழுமையை, பூர்ணத்தை, முழுக்காட்சியைப் பார்க்கிறது. அதன் சாரத்திற்குள் செல்ல விழைகிறது. இது நீங்களோ, நானோ செய்ததல்ல, நம் முன்னோர்கள் செய்தது. அவர்களின் ஞானக்கொடையால், உத்வேகத்தால் நாம் பயன் பெற்று வருகிறோம்.

இது நமக்குள் இயல்பாகவே உள்ள ஓர் ஈடுபாடு, நாம் ஏற்படுத்திக் கொண்டதல்ல. இயல்பான ஒரு மனப்பாங்கு. உங்கள் சொந்த ஜீவநிலைக்குத் திரும்பினால், சுய சிந்தனை மார்க்கத்திற்குத் திரும்பினால், சொந்த வாழ்க்கையோடு தொடர்பு கொள்ளும் வழிக்குத் திரும்பினால் நீங்கள் நிறைவு பெறுவதோடு வெற்றியும் பெறுவீர்கள்.



நாகரீகத்தில் உங்களது ஸ்வதர்மத்தை உங்கள் இயல்பான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதன் மூலமே நீங்கள் வளர்வீர்கள்.

நாகரீகத்தில் ஸ்வதர்மமானது எதைக் குறிக்கிறது?

மூலத்திற்குச் செல்லுங்கள். மூலத்தைப் பார்க்கும் போதும் இதை ஏன் செய்கிறீர்கள்? அதை ஏன் செய்கிறீர்கள்? என்று கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தால் நீங்கள் உள்ளொளியைக் காண்பீர்கள்.

தனிப்பட்ட முறையில் நான் எனக்குள் என்னையே கேட்டுக் கொள்கிறேன். நான் யார்? நான் சிந்திக்கும், உணரும் நபர் மட்டுமல்ல, இந்த எண்ணம் எங்கிருந்து வருகிறது? எனது எண்ணங்களிலிருந்து பின்னோக்கி நிற்கும் தகுதி எனக்கு எங்கிருந்து வருகிறது? நான் ஏன் இங்கே இருக்கிறேன்? நவீன விஞ்ஞானம் கற்பிப்பது போல நான் தற்செயலாகத் தோன்றிய ஒரு விளைவா? ஏதோ ஒரு பரமாணு விழுந்ததால் நாம் இங்கே இருக்க நேரிட்டதோ?

இது உண்மையென்றால், வாழ்க்கையின் ஒரே அர்த்தம் ஒவ்வொரு நொடியையும் முழுமையாகப் பயன்படுத்தி அனுபவிப்பதுதான். எதிர்காலம் எக்கேடு கெட்டால் என்ன? என்று மேற்கத்திய கலாச்சாரம் கூறுகிறது.

மனித வரலாற்றில் இது போன்ற மிக நாசம் விளைவிக்கும் நாகரிகம் வேறு ஏதும் காணப்படவில்லை. இன்று நாம் பார்க்கும் குளறுபடிகள் - நாடுகள் அழிக்கப்படுவது, நதிகள் மாசுபடுத்தப்படுவது, மனித உயிர்கள் அழிக்கப்படுவது, மனித சிசுக்கள் விஷமிட்டுக் கொல்லப்படுவது, வேண்டுமென்றே செய்யப்படும் இந்த அநியாயங்கள் யாவும் இன்றைய சுகத்தை மட்டும் பார்த்து, நாளைய எதிர்காலத்தைப் பற்றிச் சற்றும் கவலைப்படாத ஒரு நாகரிகத்தின் பயங்கர விளைவுகளே.

நமது தேசிய மரபுகளில் அடுத்த தலைமுறைகளைப் பற்றிச் சிந்திக்கக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. நீங்கள் இன்று எடுக்கும் எந்த முடிவிலும் ஏழு தலைமுறைக்கும் அது என்ன விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்று சிந்திக்க வலியுறுத்தப்படுகிறது.

உலகத்தின் எதிர்காலம் அந்தக் குறுகிய கால சிந்தனையில் அடங்கவில்லை. இந்த அடிப்படை மீதுதான் இந்திய நாகரிகம் அமைக்கப்பட்டுள்ளது.

யுகசந்தியின் நுழைவாயிலில் : நாம் ஒரு யுக சந்தி - யுகங்களின் சேர்க்கையில் ஒரு நுழைவுப்பாதை வழியாகக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். இதில் ஒரு யுகம் மறைந்து புதிய யுகம் தொடங்கியுள்ளது. இதில் பழைய யுகத்தில் உருவான அனைத்தும், பழைய தோற்றங்கள் யாவும் சிதறி அழிந்துவிடும். நீங்கள் மீண்டும் அந்த வடிவங்களைக் காண முடியாது.

ஆனால் ஒன்று மட்டும் நினைவில் இருக்கட்டும். நமது நாகரீகம் தோற்றங்களின் மீதல்லாமல், மூல ஆதாரங்கள் மீது நிறுவப்பட்டது.

நாம் மூலத்திற்குத் திரும்பிச் சென்றால் அந்த வடிவங்களை மீண்டும் உருவாக்கிக் கொள்ளலாம்.

ஒருக்கால் பழைய வடிவங்களுக்கு உயிரூட்டலாம் அல்லது புதிய உருவத்தை உருவாக்க முயன்றால் அவர்கள் வடித்த அதே உருவங்கள் இன்றைய உண்மை நிலைக்கேற்ப வெளிப்படுத்தப்படுவதை உணர்வோம். அதற்கு நாம் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் ஆழமான அஸ்திவாரத்தை நோக்கிச் செல்ல வேண்டி வரும்.

மேற்கத்திய நாகரீகத்தைக் கண்ணை மூடிப் பின்பற்றும் தவறினைச் செய்ய வேண்டாம்.

உதாரணமாக, நாம் பிரிட்டிஷ் அரசியல் அமைப்பை காப்பியடித்தோம். ஒரு மனதாக அன்றி, 300 நபர்கள் கொண்ட ஒரு குழு, வெட்டி ஒட்டித்

செல்வச் செருக்கு உடைமையோடு, உள்ளத்தையும் அடிமானம் வைக்கச் செய்யும். - மாக்ஸிம் கார்க்கி

தைத்த துணியாக நம் அரசியல் சட்டம் உள்ளது.

அது நம் தேசிய ஆதார வேர்களைப் பின்பற்றி உருவாக்கப்படவில்லை. நாம் எதற்காக இங்கு உள்ளோம்? நம் தேசியத்தின் அர்த்தம்தான் என்ன? என்ற கேள்விகள் அதில் பரிசீலிக்கப்படவில்லை.

இதன் விளைவாக, இந்தியாவிற்குப் பயன்படாத ஒரு பாராளுமன்ற மாதிரியிலான ஜனநாயகத்தை ஏற்படுத்தியுள்ளோம். 60 ஆண்டுகள் கடந்துவிட்டன. நாம் இன்னும் குழப்பத்தில்தான் உள்ளோம்.

'இந்தியா உலகிற்கே குருவாக வழிகாட்டியாக ஆகும் என்பது விதிக்கப்பட்டுள்ளது' என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். அந்த விதி நமக்காகக் காத்திருக்கிறது, நம்மை நெருக்குகிறது. ஆனால் நாமோ நிழல்களையும், போலி வேடங்களையும், பொய் வாக்குறுதிகளையும் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம்.

இந்த மாற்றம் ஒரு புரட்சியாக மலர வேண்டும். வேறுவிதமாகச் சொன்னால், நமது சுதந்திர இயக்கம் அரைகுறையாக நின்றுவிட்டது.

இன்றைய அரசியல் முறைப்படி பிரதம மந்திரி உங்களாலும் என்னாலும் தேர்ந்தெடுக்கப்படாமல் அரசியல் சட்டத்திற்குப் புறம்பான ஓர் அதிகார அமைப்பால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவரும் மக்களுக்குச் சேவை செய்வதற்குப் பதிலாக மக்களை ஆளத் தொடங்குகிறார்கள்.

சுதந்திர இயக்கம் முற்றுப் பெற்றுவிட்டதா?: இன்று ஆட்சிமுறையை முற்றிலுமாக மாற்றி அமைக்கப்படக்கூடிய விதத்தில் சீர்த்திருத்தங்கள் ஏற்பட்ட பின்னரே சுதந்திர இயக்கம் முற்றுப் பெறும்.

பொருளாதார வளர்ச்சி அமைப்பும், கலாசாரக் கட்டமைப்பும் சீரமைக்கப்பட வேண்டும். பத்திரிகை சுதந்திரம், சமூகச் சுதந்திரம், தொலைக்காட்சிச் சுதந்திரம் என்ற பெயர்களில் வெளிநாட்டுப் பாதிப்புகள் நம்மைக் கட்டிப் போட்டுள்ளன.

நம் இயல்பு எது என்பதைச் சுதந்திரமாக வெளிப்படுத்த நமக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. அதிலும் குறிப்பாக, இந்திய மனதின் சுதந்திரத்தை, வெளிப்படுத்த சந்தர்ப்பமே கிட்டவில்லை.

இன்றுள்ள கல்விமுறை, தகவல்களைக் கிளிப் பிள்ளை மாதிரி திருப்பிச் சொல்கிற பயிற்சியில் தொடங்கி, நம்மை மாயைக்குள் தள்ளுகிறது.

ஆக்க சக்தியை வளர்க்க விடுவதில்லை, தனித்தன்மையையும் வளர்க்கவில்லை, நமது உள்ளுறை இயல்பான சுபாவத்தையும் வளர்க்கவில்லை.

இவை யாவும் இருந்தால்தான் இந்தியா உலகத்தின் குரு என்ற விதிக்கப்பட்ட அந்தஸ்த்திற்கு அருகில் நெருங்க முடியும்.

இந்த மாற்றங்களுக்கெல்லாம் எது அஸ்திவாரமாக உள்ளதோ, அதில் நமது பிரக்ஞை, அடையாளம், நோக்கம், உயிர்மூச்சு இவற்றை உணர்வதற்கான

★ ஆகஸ்ட் 2013 இதழில் எழுச்சி மிகு அருணிமா, எவரெஸ்டை எட்டியது வியப்பே!

தற்கால அரசியல் தலைவர்கள் செய்யத் தவறிய பலவற்றில் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் தனது ஒப்பற்ற அணுகுமுறையால் உயரிய இடத்தில் உள்ளது. ஒவ்வொரு தமிழனும் நன்றி கூற வேண்டும்.

-ம.வே. வரதராஜன், சென்னை.

★ 'இயற்கைச் சீற்றத்திலும் இறைகருணை' கட்டுரை படித்தேன். வேறு எந்த தினசரி, வார இதழ்களிலும் வெளிவராத அரிய செய்திகள் படித்தேன். பரவசமானேன். -இராம. பொன்னுச்சாமி, திருச்சி-1.

★ நம்பிக்கை பள்ளிகள் – என்னைக் கவர்ந்தன. வித்யா மந்திர், சேலம் – சாய்சுதர்சனி தன் தாய்க்குச் செய்த பணிவிடை அவளது அன்பை மட்டும் அல்ல, அவளது வீர நெஞ்சத்தையும் காட்டுகின்றன. கார்த்திக் வித்யாலயாவில் நடுநிலைப் பிள்ளைகளும் பிரைமரி பிள்ளைகளும் கலந்து உறவாடுவதைப் படித்தபோது அழ. வள்ளியப்பாவின் பாடல் நினைவுக்குவருகிறது. -எச்.கிருஷ்ணமூர்த்தி, சென்னை.

★ ருத்ர தீர்த்த புஷ்கரணியில் தீர்த்தமாடி பக்தியுடன் ஸ்ரீகுருவாயூரப்பனைப் பிரார்த்திப்பதால் உடல்நலம் குன்றியவர்கள் நோய்களிலிருந்து விடுபட்டுக் குணமடைந்து அருள் பெறுவார்கள் என்ற தகவலும் படக்கதை மூலம் அறிய முடிகிறது.

-ஆர். வரதராஜன், பெங்களூரு.

★ 'நீராதாரங்களைக் காக்க நீங்களே ஆதாரம்' என்ற விவேகானந்தப் பயிற்சி எங்களது மாணவ – மாணவியருக்கு மிக முக்கியமாக அறிவுறுத்தப்பட்டது. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு வாளியில் நீரை நிரப்பி அதில் டம்ளரைக் கொண்டு நீரை எடுத்து கைகழுவப் பயிற்சி தந்தோம்.

- முதல்வர், விவேகானந்த வித்யாலயா, விழுப்புரம்.

★ பேசும் புல்லாங்குழல் என்ற சிறுகதையின் முதல் வரியே மிகவும் ஈர்த்தது. புல்லாங்குழல், சுவாமிஜியைப் பற்றிப் பேசியதால், அதன் இனிமை மேலும் கூடுகிறது. வித்தியாசமான கோணத்தில் இக்கதையை எழுதி ரசிக்கச் செய்துவிட்டீர்கள்!

- பவித்ரா, கோவை.

எவரும் அளவுக்கு அதிகமாய் வேலை செய்வதில்லை, ஆனால் அளவுக்கு மீறி கவலைப்படுகிறார்கள். - வெதரெல்

அடிப்படைத் திருப்பம் உள்ளது. நமது நாகரிகத்தின் அஸ்திவாரத்தில் உள்ள ஆன்மிக உணர்வுடன் நாம் மீண்டும் இணைவதற்கான திருப்பமும் உள்ளது.

இந்த உள்ளுறை மாற்றங்களைச் செய்யாமல் நாம் சமூகம், பொருளாதாரம், கல்வி, ஆட்சிமுறை இவற்றில் மாற்றங்களைக் கொண்டு வர முடியாது. ஆகவேதான் உட்புற விழிப்புநிலை மூலமே நமக்குள் புரட்சி தொடங்க வேண்டும்.

அது நமது மனதிற்கும், ஆற்றல்களுக்கும், செயல் பாடுகளுக்கும் புதிய தெம்பு ஊட்டி, புதுமைப் படைப்புக்கு ஊக்குவிக்கும். இந்த உண்மையை நாம் எதிர்கொள்ளத் தயங்கக் கூடாது.

தேசிய வாழ்க்கை முழுவதுமாக நவநிர்மாணம் செய்யப்பட வேண்டும். ஆனால் அதை நிர்மாணிப் பதற்கு நமக்கு ஆன்மிக அஸ்திவாரம் தேவை.

ஒவ்வொரு வழியிலும் நாம் முயற்சியும் செயலும் மேற்கொண்டு அதை ஆழமான உள்ளுணர்வுடனும் எதிர்பார்ப்புடனும் இணைத்துவிட வேண்டும்

வடமொழியில் ஒரு பிரபலச் சொற்றொடர் உண்டு. 'சித்தே வாசி க்ரியாயாம் ச சாதூனாம் ஏக ரூபதோ' - 'சாதுக்களிடம் எண்ணம், சொல், செயல் இவை யாவும் ஒன்று போலவே இருக்கும்'.

அந்த ஒருமித்த தன்மை நமது ஆழ்ந்த ஈடுபாட் டைக் குறிக்கும். நாம் அதை எட்ட வேண்டும். நான் ஏற்கனவே கூறியபடி இந்திய ஆன்மிகத்தின் ஆழமான வேர்கள் நமது உயிரணுக்களில் நிறைந்துள் ளன. ஒரு கணம் நாம் சித்தத்தை அடக்கினால் நம்மை உயிர்ப்பிக்கும் அந்த மூலத்தை நம் இதயத்தின் ஆழத்தில் உணரலாம்.

ஸ்ரீஅரவிந்த ஆசிரமத்தின் ஒரு தத்துவப் பேரறிஞர் இங்கிலாந்துக்கு விஜயம் செய்த சமயம் அங்குள்ள அன்பர்கள் அவரைக் கேட்டனர்: 'இந்திய நாகரிகம் அல்லது பண்பாட்டின் சிறப்பு அம்சம் என்ன?'

அதற்குப் பேராசிரியர் கூறினார்: 'உங்களால் சிந்திக்காமல் அசையாமல் ஒரு நிமிடம் அமைதியாக அமர முடியுமா?'

கேட்டவர் 'என்னால் முடியாது' என்றார்.

பேராசிரியர், 'எந்த இந்தியனும் அவ்வாறு செய்ய முடியும்' என்றார்.

இது ஒரு நல்ல கருத்துப் பதிவு. ஏனெனில் சம நிலை அல்லது பேச்சற்ற நிலை அல்லது அடங்கும் தன்மை, உள்நோக்கித் திரும்பி உள்ளே ஆழத்தில் உள்ளதைத் தெரிந்து கொள்ளும் திறன் இயல்பாகவே நமக்குள் உள்ளது.

அதை நாம் புரிந்து கொண்டு வளர்க்காது விட்ட தால் அது துருப்பிடித்துள்ளது. அதை முழு உணர்வு டன் வளர்க்க முயன்றால் நாம் எளிதில் அதனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இது ஏதோ நாம் செய்த சாதனையின் காரணமாக ஏற்படுவதல்ல, நாம் வளர்க்கப்பட்ட, ஆழ்ந்த உள்ளுறை கலாசாரப் பண்புகளில், புனித பாரதப் பூமியின் அற்புதச் சூழலில் நமது முன்னோர் நமக்கு விட்டுச் சென்றுள்ள அரிய பொக்கிஷம் இது.

வாய்ப்பைத் தக்க வைத்துக் கொள்வோம்!:

இத்தகைய கலாச்சாரத்தில் பிறக்க நாம் கொடுத்து வைத்துள்ளோம். அதை உணராவிட்டாலோ, தீவிர முயற்சி எடுத்து அதனைப் பயன்படுத்திக் கொள்ளா விட்டாலோ நமக்குள்ள வாய்ப்பு நழுவிவிடும்.

அடுத்து, சாதாரணமாகத் தெரிந்தாலும் எளிய நடைமுறைக்கேற்ற ஒரு நல்ல வழியைக் கூறுகி றேன். உலகுடன் தொடர்பை விடுவித்துக் கொண்டு மனதிலும் இதயத்திலும் சஞ்சலமேதுமின்றி நிச்சல னமாக இருந்து உள்ளுறை ஆழ்ந்த எண்ணங்களை உணர தினமும் ஐந்து நிமிடம் ஒதுக்குங்கள்.

அந்தப் பேரின்ப நிலையைச் சொற்களாலோ, எண்ணங்களாலோ உங்களால் விரித்துரைக்க முடி யாமலிருக்கலாம். ஆயினும் உங்களுக்குள் ஆழப் பகுதியில் அதை உணரலாம். உங்கள் ஜீவன் முழு வதையும் அதற்குள் மையப்படுத்தி அந்த மையத்தி லிருந்து உலகம் முழுவதையும் உற்று நோக்குங்கள்.

எஞ்சிய அந்த நாள் முழுவதும் எண்ணத்திலும் சொல்லிலும் செயலிலும் முடிந்த அளவு அந்த மையத்தோடு இணைந்திருக்க முயலுங்கள். நாம் அனைவரும் இந்த அளவு செய்ய முடிந்தாலும் புரட்சிக்கு வித்திடப்பட்டதாக அமைந்து விடும்.

அப்போது உலகம் முழுவதும் இந்தியாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும். இந்தியா தனக்கு விதிக்கப்பட்டுள்ள ஜகத்குரு-உலகத்தின் வழிகாட்டி என்ற உன்னத ஆசனத்தில் அமரும்.

தமிழாக்கம் : க.ஜெயராமன்

உங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஓர் உன்னதப் பரிசு வழங்குங்கள்!

சுவாமி விவேகானந்தரின் 150-வது பிறந்த ஆண்டை முன்னிட்டு, பக்தர்களும் அன்பர்களும் தங்களது உறவினர்களையும் நண்பர்களையும் விஜயத்தின் சந்தாதாரர்களாக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். மேலும், சந்தாதாரர்களாகிய நீங்கள் உரிய காலத்தில் உங்களின் சந்தாவைப் புதுப்பித்து, ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் தொடர்ந்து உங்களுக்குச் சேவையாற்றிட உதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பத்திரிகையைத் தொடர்ந்து பெற, உங்கள் சந்தாவை உடனே அனுப்பவும். தங்களது முகவரியில் மாற்றம் இருப்பின், அதை ஒரு மாதத்திற்கு முன்பே எங்களுக்குத் தெரிவிக்கவும். எல்லாக் கடிதங்களிலும் தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ✆:24621110. Ext:215

- சந்தா காரியாலயம்

மனம் இரு பக்கமும் கூர்மையுள்ள கத்தி. அதை நிதானமாக உபயோகிக்க வேண்டும். - மாந்தேன்

ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்

email : srivijaytravels@yahoo.com

50 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் - இந்த வருட புனித யாத்திரை

24.10.2013	**தீபாவளி கங்கா ஸ்நானம் காசி யாத்திரை :** 12 நாட்கள் கொண்டது : பூரி, புவனேஸ்வர், கோனாரக், காசி, கயா, அலகாபாத், அயோத்யா, நைமிசாரண்யம் ஆகியவை. கட்டணம் ரூ. 10,500/-
7.11.2013	14 நாட்கள் கொண்ட பஞ்சதுவாரகாயாத்திரை: அகமதாபாத், டாக்கூர் துவாரகா, பேட் துவாரகா, ஹரிசித்தி மாதா, போர்பந்தர், புஷ்கர், மாத்ரு கயா, அம்பாஜி, மவுண்ட் அபு, சோம்நாத், ஸ்ரீநாத் துவாரகா, காங்குரொலி, கோமதி துவாரகா ஆகியவை. கட்டணம் ரூ.12,300/-.
12.11.2013	14 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை: மும்பை, நாசிக், பஞ்சவடி, திரியம்பகேஸ்வர், சீரடி, சனி சிங்கனாப்பூர், நாகநாதம், பண்டரிபுரம், பரளி, பீமாசங்கர், மகாகாளேஸ்வர், ஓங்காரேஸ்வர், வைத்தியநாதம், குஷ்னேஸ்வர், உஜ்ஜையினி,அஷ்ட கணபதிகள் ஆகியவை. கட்டணம் ரூ. 12,200/-.
12.11.2013	6 நாட்கள் கொண்ட சீரடி, மந்திராலயம், பண்டரி பூர், சோளாபூர் ஆகியன. கட்டணம் ரூ. 6,000/-
23.1.2014	4 நாட்கள் கொண்ட மந்திராலய யாத்திரை : நெல்லூர், ஸ்ரீசைலம், மந்திராலயம், மகாநந்தி, அஹோபிலம் ஆகியன. (2x2) புஸ்பேக். கட்டணம் ரூ. 5,000/-
28.1.2014	14 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை: மும்பை, நாசிக், பஞ்சவடி, நாகநாதம், திரியம்ப கேஸ்வர், சீரடி, சனி சிங்கனாப்பூர், பண்டரிபுரம், பரளி, பீமாசங்கர், மகாகாளேஸ்வர், ஓங்காரேஸ்வர், வைத்தியநாதம், குஷ்னேஸ்வர், உஜ்ஜையினி, அஷ்ட கணபதிகள் ஆகியவை. கட்டணம் ரூ. 12,800/-.
1.2.2014	14 நாட்கள் கொண்ட பஞ்சதுவாரகாயாத்திரை: அகமதாபாத், டாக்கூர் துவாரகா, பேட் துவாரகா, ஹரிசித்தி மாதா, போர்பந்தர், புஷ்கர், மாத்ரு கயா, அம்பாஜி, மவுண்ட் அபு, சோம்நாத், ஸ்ரீநாத் துவாரகா, காங்குரொலி, கோமதி துவாரகா ஆகியவை. கட்டணம் ரூ.12,800/-.
17.2.2014	4 நாட்கள் கொண்ட மந்திராலய யாத்திரை : நெல்லூர், ஸ்ரீசைலம், மந்திராலயம், மகாநந்தி, அஹோபிலம் ஆகியன. (2x2) புஸ்பேக். கட்டணம் ரூ. 5,000/-
3.3.2014	12 நாட்கள் கொண்ட காசி யாத்திரை : பூரி, புவனேஸ் வர், கோனாரக், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, கொல்கத்தா, நைமிசாரண்யம் ஆகியவை கட்டணம். ரூபாய் 10,300/-

குறிப்பு : யாத்திரையில் கலந்து கொள்பவர்கள் அட்வான்ஸ் செலுத்தி பெயர், வயதுடன் முன்பதிவு செய்து கொள்ளவும்.
காலை காபி, டிபன், 2 வேளை சாப்பாடு, தங்கும் இடவசதி, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு அனைத்தும் கம்பெனிக்கு உட்பட்டது.

தங்கள் வீட்டில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் மிகச் சிறப்பான முறையில் கேட்டரிங் காண்ட்ராக்ட் முறையில் செய்து தருகிறோம்.

நகரத்தார் மலர்

35 ஆண்டுகளாக வெளிவரும் சமூக கலை இலக்கிய மாத இதழ்

சுற்றுலாப் பிரிவு

மலேசியா சிங்கப்பூர் சுற்றுலா

99404 55254, 97897 66700

New No. 59, Canal Bank Road, II nd Floor, R.A.Puram, Ch-600028.

மறைகளும் ஞானிகளும் போற்றிய விநாயகர்

விநாயகரைப் பற்றித் தகவல்களைச் சொல்லாத ஞானிகளும் சாஸ்திரங்களும் இல்லை எனலாம்.

பல பேரறிஞர்களும் ஞானிகளும்கூட எந்தவொரு செயலும் நன்கு நிறைவேற விநாயகரையே வேண்டி நின்றனர். அவ்வாறு விநாயகரைப் போற்றிய பல கருத்துகளின் தொகுப்பு இதோ:

ஓம் க³ணாணாம் த்வா க³ணபதிக³ம் ஹவாமஹே
கவிம் கவீனாம் உபமச்ரவஸ்தமம்|
ஜ்யேஷ்டராஜம் ப்³ரம்ஹணாம் ப்³ரஹ்மணஸ்பத³
ஆ ந: ச்ருண்வன் னூதிபி⁴: ஸீத³ ஸாத³னம்
மஹாகணபதயே நம:|| **-ஸ்ரீருத்ரம் - மந்த்ரம் 7**

தேவர் கூட்டத்திற்குத் தலைவராதலால் கணபதி என்று பெயர் பெற்றவரே! உம்மைப் போற்றுகிறோம். நீர் அறிஞர்களுள் பேரறிஞர்; ஒப்பற்ற புகழ் படைத்தவர்; முதன்மையானவர்களுள் தலைசிறந்தவர்; வேதங்களுக்கு நாயகர். எங்கள் பிரார்த்தனைகளைக் கேட்டு எங்களைக் காக்க விரைந்து வந்தருளுங்கள்! மகாகணபதியாகிய உமக்கு நமஸ்காரம்!

வாகீ³சாத்³யாஸ் ஸுமநஸ: ஸர்வார்தா²நாம்|
உபக்ரமே யம் நத்வா க்ருதக்ருத்யா: ஸ்யு: தம்
நமாமி க³ஜாநநம்||

பிரம்மா முதலிய தேவர்களும் எல்லாப் பணிகளின் தொடக்கத்தில் எவரை வணங்கி நலம் பெறுகிறார்களோ அந்த யானைமுகனை வணங்குகிறேன்.

அலிகுலவ்ருத க³ண்ட³ம் பா⁴லசாலீந்து³ க²ண்ட³ம்
க³லமிலத³ஹிதுண்ட³ம் பூ⁴ரிஸிந்தூ³ர சுண்ட³ம்|
ப⁴ஜத³தி⁴கத³ ஷண்ட³ம் ஸர்வதே³வ ப்ரசண்ட³ம்
ப்ருது² லலலிதபிண்ட³ம் நௌமிதம் வக்ரதுண்ட³ம்||

-சுக்ல யஜுர்வேத உபாகர்ம பத்ததி

கன்னத்தில் தேனீக்கூட்டமும் நெற்றியில் நிலாத் துண்டும் கழுத்தில் பாம்பும், துதிக்கையில் நிறையச் செந்தூரமும், திருவடியில் பக்தர் குழாமும், மென்மையும் அழகுமுள்ள பெரும் உடலும் வளைந்த துதிக்கையும் கொண்டு எல்லா தேவர்களையும் மிஞ்சிய வீரருமானவரைத் துதிக்கிறேன்.

அப்ரபோ³தா⁴ந்ய தா²போ³த⁴ விக்⁴நஸங்க⁴ நிபீடி³த:|
மந: கரோமி விக்⁴நேச த்வத்பத³த்³வந்த்³வவந்த³நே||

-பிரம்ம ஸூத்ர சங்கர பாஷ்ய-ருஜு விவரண உரை

விக்னேசுவரரே! சாஸ்திரங்களை அறிய முற்பட்ட எனக்கு அவை புரியாததாலும் தவறாகப் புரிவதாலும் தொடர்ந்து தடையுற்றிருக்கிறேன். ஆதலால் தங்களின் திருவடிகளை வணங்குகிறேன்.

சரணஸ்மரணரத்³யஸ்ய கர்துமல்போ(அ)பி கல்பதே|
கார்யம் புருசது⁴ர்யாணாம் நமாமஸ்தம் விநாயகம்||

-பாமதீ திலகம்

சிறந்தவர்களால் மட்டும் நிறைவேற்றத்தக்கப் பணியைத் தன் திருவடி ஸ்மரணத்தால் அற்பனும் செய்து முடிக்கிற திறமையைத் தரும் விநாயகரை வணங்குவோம்.

நமஸ்தஸ்மை க³ணேசாய ஜ்ஞான விஜ்ஞான
தா³யிநே|
யஸ்யாநலாயதே நாமாவித்³யாரண்ய விதா³ஹநே||

-பட்டகோபீநாதரின் ஸம்ஸ்கார ரத்னமாலா

சுய அறிவும் நூலறிவும் தருபவர், அறியாமையாகிய காட்டைப் பொசுக்குவதில் அக்னியானவர், அந்த கணேசருக்கு நமஸ்காரம்.

யதா³லம்போ³ த³ரம் ஹந்தி ஸதாம்
ப்ரத்யூஹஸம்ப⁴வம்|
ததா³லம்பே³ த³யாலம்ப³ம்லம்போ³த³ரபதா³ம்பு³ஜம்||

-ஸ்ரீசங்கர பகவத்பாதரின் ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸார ஸங்கிரஹம்

நல்லோருக்கு நேர்கிற சிறுமையையும் பயத்தையும் போக்கி, கருணையால் நழுவாமல் தாங்கிக் கொள்கிற லம்போதரரின் திருவடித் தாமரையைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கிறேன்.

பி⁴ந்தா²நமேநாம்ஸி து³ராஸதா³நி
ப்ரத்யூஹவர்க³ப் ப்ரப⁴வாநி தாநி|
ராஜா நமாகா³த பரம்பராயாம்
ஆராது³பாஸே கி³ரிஜாபி⁴ஜாதம்||

-ஆநந்தகிரியின் நியாய நிர்ணயம்

இடையூறுகளை அணிவகுத்து நேரும்படிச் செய்கிற-வேறு வகையில் அழிக்க இயலாத - பாவ வினைகளைச் சிதறச் செய்பவர், விக்கின வரிசைகளிடையே ஆட்சி புரிபவர், மலைமகள் நன்மகன், அவரை அருகில் அமர்ந்து வழிபடுகிறேன்.

யம் ப்³ரம்ஹ வேதா³ந்த விதோ³ வத³ந்தி
பரம் ப்ரதா⁴நம் புருஷம் ததா²ன்யே|



கெட்ட காலத்தை எப்படிப் பொறுத்துக் கொள்வது என்று நல்ல காலத்தில் சிந்திக்க வேண்டும். - டெரன்ஸ்

ஒற்றைக் கல்லில் சுவாமி விவேகானந்தரின் சிலை

'ஒரு சிறந்த கருத்தை எடுத்துக் கொண்டு செயல்படு' என்ற சுவாமி விவேகானந்தரின் அருளுரைக்கு இணங்க, ஸ்ரீராமகிருஷ்ண ஆஸ்ரமம், பெய்லூர் மடம் பக்தியுடன் சுவாமிஜியின் 150-வது பிறந்த ஆண்டில் அவரது 100 அடி உயர, ஒரே கல்லில் செதுக்கப்பட்ட திருவுருவச் சிலையை நிறுவும் மிகப் பெரிய லட்சியத்தில் முனைந்துள்ளது.

2500 டன் எடை கொண்ட இந்தச் சிலைதான் உலகிலுள்ள மிகப் பெரிய ஒற்றைக்கல் சிலைகளிலேயே சிறந்ததாகப் பல வகைகளிலும் அமையும்.

நவீனத் தொழில்நுட்ப உதவியோடு 150 சிற்பிகள் 15 மாதங்கள் இப்பணியில் ஈடுபட உள்ளனர். கல் அகழும் பாறையிலிருந்து (ஜர்க்காலா), சிலை அமையும் திருத்தலம் வரை (கர்க்காலா) 14 கி.மீ. தூரத்திற்குச் சாலையமைத்து, ஜெர்மன் நாட்டு மிகப் பெரிய நவீன இயந்திர உதவியுடன் சிலை பீடத்தில் தூக்கி நிறுத்தப்படும். இதற்குத் தேவைப்படும் இரும்பின் அளவு மட்டுமே 1000 டன் என்பது இதன் பிரம்மாண்டத்தைக் கூறும்.

சுவாமிஜியின் ஆற்றல்மிக்க இச்சிலையின்பால் இளைஞர்கள், பெரியோர்களின் கவனத்தை ஈர்த்து, அதைச் சுற்றிலும் அமைய உள்ள நமது பாரம்பரியமிக்க கல்வி, பண்பாட்டு மையத்தினை நோக்கித் திருப்புவதே இம்மகா திட்டத்தின் நோக்கம். இந்த மையத்தில் நுழைபவர்களுக்கு வாழ்க்கையையே மாற்றி அமைக்கவல்ல சுவாமிஜியின் கருத்துகளில் மூழ்கும் அனுபவம் கிடைக்கும்.

அதன் மூலம் சுயநலமிக்க, நேர்மையற்ற, போட்டி, பொறாமைகளில் சிக்கித் தவித்து, நின்று நிதானிக்க நேரமில்லாமல் பரபரக்கும் இன்றைய மக்களின் ஓட்டத்தை நிறுத்தி, மனநிறைவும் முழுச் சுதந்திரமும் அளிக்கவல்ல சுவாமி விவேகானந்தரின் அறிவுப் புதையலின் பக்கம் அவர்களைத் திருப்ப முடியும்.

இத்திட்டம் எந்தவொரு மதத்தையோ, நம்பிக்கையையோ சார்ந்ததல்ல. உறங்கிக் கிடக்கும் ஆன்மாவை விழிப்புறச் செய்யும் தூண்டலே இந்த முயற்சி. இப்பணிக்கான பாறையை அகழ்தல், சிலை வடித்தல், பீடம் அமைத்தல், சாலையமைத்துச் சிலையை ஏற்றி வருதல், நிறுவுதல் ஆகியவற்றின் உத்தேசச் செலவு ரூ.49.5 கோடி. பணி துவங்கப்பட்ட காலம் : டிசம்பர் 2012.

சிலையின் ஒரு சதுர அடி பரப்புக்கான செலவு ரூ.33,333/- புனிதத் தலத்தின் ஒரு ச.அ. பரப்புக்கான செலவு ரூ.5,555/-. ஒன்றோ அல்லது பல சதுர அடிப் பரப்புக்கான செலவையோ அல்லது உங்களால் முடிந்த தொகையையோ அளித்து இந்தப் புனிதப் பணியில் பங்கு பெறுங்கள்.

நீங்கள் அளிக்கும் நன்கொடைகளை ஆன்லைன் மூலம் Sri Ramakrishna Ashrama, Bailur S.B. A/C. No. 320635 83333, IFSC Code : SBIN0000945, swiftcode SBININBB146 - State Bank of India, Udupi Branch, Karnataka என்ற கணக்கில் செலுத்தலாம். www.rkashrambailurmath.org என்ற எமது வெப் சைட் மூலமாகவும் செலுத்தலாம்.

வரைவுக் காசோலை அல்லது காசோலைகளை 'Sri Ramakrishna Ashrama, Bailur' என்ற பெயரில் எழுதி அனுப்பலாம். நன்கொடைகளை அனுப்பிய பின்பு, இ-மெயில் மூலமாகவோ, தபால், தொலைபேசி, எஸ்.எம்.எஸ், மூலமாகவோ எமக்குத் தகவல் தெரிவித்தால் பின்பற்ற வசதியாக இருக்கும்.

நன்கொடைகளுக்கு இந்திய வருமான வரிச் சட்டப்பிரிவு 80 G யின் கீழ் வரிவிலக்கு உண்டு.

For further details contact :
SWAMI VIVEKANANDA GLOBAL MONUMENT COMMITTEE,
Sri Ramakrishna Ashrama
(Bailur Math),
Swami Vivekananda Marg,
Village Yerlapady, Post Govindoor,
Via Bailur, Karkala - 574 102.
Udupi Dist., Karnataka.
Ph : +9198807 05858, 82776 54495
e-mail: office@rkashrambailurmath.org

With best compliments :
URC GROUP
URC Developers
URC INFOTEC

விச்வோத்^{3}க^{3}தே: காரணம் ஈச்வரம் வா
தஸ்மை நமோ விக்^{4}நவிநாயகாய||

பரம்பொருள், உலகின் மூலப் பொருள், எல்லாவற்றிலும் உள்ள ஆத்மா, உலகம் தோன்றக் காரணமானவர், மேலும் ஈச்வரன் என்று வேத முடிவை உணர்ந்தவர்களால் வர்ணிக்கப் பெறும், விக்னங்களை அடக்கி வழிபடுத்தும் பெருமானுக்கு வணக்கம்.

க^{3}ணேசோவ: பாயாத் ப்ரணமத க^{3}ணேசம்
ஜக^{3}தி^{3}த^{3}ம்
க^{3}ணேசேந த்ராதம் நம இஹ க^{3}ணேசாய
மஹஸே|
க^{3}ணேசாந் நாஸ்த்யந்யத் த்ரிஜக^{3}திக^{3}ணே
சஸ்ய மஹிமா
க^{3}ணேசே மச்சித்தம் நிவஸது, க^{3}ணேச
த்வமவ மாம்||

-பாஸ்கரராயரின் ஸ்ரீமஹாகணபதி ஸஹஸ்ர நாமபாஷ்யம்

கணேசர் உங்களைக் காக்கட்டும். கணேசரை வணங்குங்கள். கணேசரால் இவ்வுலகம் பாதுகாக்கப்படுகிறது. கணேசர் என்ற பேரொளிக்கு வணக்கம்.



ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்
PURE GHEE SWEETS
பாண்டி பஜார், சென்னை PH:24317345
அசோக் நகர், அண்ணா நகர், மயிலாப்பூர்

கணேசரைத் தவிர்த்து வேறு ஒன்றுமில்லை. மூவுலகிலும் கணேசரின் பெருமை பரவியுள்ளது. கணேசரிடம் என் மனம் நிலை பெறட்டும். கணேசரே, நீர் என்னைக் காப்பாற்றுவீர்!

(வடமொழியில் பெயர்ச் சொல்லிற்கான ஏழுவிபக்திகளும் ஸம்போதன விபக்தியும் இதில் வரிசையாக இடம் பெற்றுள்ளன.)

கண்ட^{2}ஸ்ரவத் ஸ்வச்ச
மத^{3}ப்ரவாஹக^{3}ங்க^{3}: கடாக்ஷார்க
ஸுதாயுதச் ச|
ஜிஹ்வாஞ்சலே கு^{3}ப்த வஹத் ஸரஸ்வதீ
யுதோऽயமாபா^{4}தி க^{3}ஜப்ரயாக^{3}: ||

-ஸ்ரீசந்திரசேகர பாரதீ சுவாமிகள் - சிருங்கேரி

கணேசர் என்றொரு பிரயாகை துலங்குகிறது. அங்கே கன்னங்களில் வழிந்தோடுகிற மத நீரோட்டமாகிற கங்கையும் கருணை வெள்ளமாகிற யமுனையும், நாக்கில் மறைந்தோடுகிற சொற்றொடர் பொழிவாகிற சரஸ்வதியும் கூடுகின்றனர்.

- தொகுப்பு : எம்.பைரவசுப்பிரமணியம்

நூல் அறிமுகம்

★ ஜெய் ஹனுமான்

அழகிய வண்ணப் படக் கதை. பக்கம் 134 - விலை ரூ.200/- **ஆசிரியர்: சுவாமி ராகவேசானந்தர்**

ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 600 004.✆ : 24621110

★ காசியில் கோயில்கள் (காசி காண்டம்)

ஸ்காந்த புராணத்திலுள்ள காசி காண்டத்தில் கூறப்பட்டுள்ள காசியில் உள்ள பல கோயில்கள் பற்றி விவரிக்கும் நூல். பக்கம் 304 - விலை குறிப்பிடவில்லை.

ஆசிரியர்: லலிதா வி, க்ருஷ்ணவேணீ ஹரிராம்

ஸ்ரீபுவனேஸ்வரி அவதூத வித்யா பீடம், கிழக்கு 7-வது தெரு, புதுக்கோட்டை - 622 001.

★ ஞான வித்தகர் வாரியார் வரலாற்றுப்பா

கிருபானந்தவாரியாரின் வாழ்க்கையை விவரிக்கும் வரலாற்றுப்பா நடையிலான கவிதைத் தொகுப்பு. பக்கம் 314 - விலை ரூ.180/- **ஆசிரியர்: நெ.ப. சுந்தரேசன்**

சமுதாயப் பொருளாதாரத் தொண்டு மன்றம் செய்யாறு உள்ளூர்க்குழு, மணிமேகலை மெடிக்கல்ஸ், 1-கே, வைத்தியர் தெரு, திருவத்திபுரம் - 604407. தி.மலை மாவட்டம். ✆ :04182-222 503.

★ ராமாயண நவாஹம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை 9 நாட்களில் விளக்கிய சிறப்புரைகளின் தொகுப்பு. பக்கம் 286/-. விலை குறிப்பிடவில்லை.

ஒரு குழந்தையை அன்புடன் கொஞ்சினால் அதன் பெற்றோர் நமக்கு அறிமுகமில்லாவிடிலும் தங்கள் பிரியத்தைக் காட்டுவது இயல்பு.

அது போல் ஜகத்துக்கே பெற்றோரான பார்வதி, பரமேஸ்வரரின் அருளை நாம் அடைய வேண்டுமென்றால், அவர்கள் இருவரின் அன்பே உருவானவர் கணபதி. அவர் மூலம் இறைவனின் அருளையும் சக்தியையும் பெறலாம் என்பது பொருத்தமே.

- காஞ்சிப் பெரியவர்

ஆசிரியர்: - ஸ்ரீசுவாமி ப்ரஹ்மயோகானந்தா

யோக சாந்தி குருகுலம், 25, சக்ரபாணி தெரு விரிவு, மேற்கு மாம்பலம், சென்னை - 33.

★ தமிழ்ச் சித்தர் மரபு

18 சித்தர்களில் தமிழ்ச் சித்தர் மரபு, சித்தர்கள் யார், அவர்களின் சிறப்பியல்புகள் என்ன என்பதுபோன்ற பல கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கும் 8 கட்டுரைகள். பக்கம் 348 - விலைரூ.160/- **ஆசிரியர்: முனைவர் டி.என். கணபதி**

ரவி பப்ளிகேஷன்ஸ், 'ராஜ்கமல்', 45 (21), 4-வது அவின்யூ, அசோக் நகர், சென்னை - 83. ✆ : 2489 7396, 2489 2779.

★ ஷீரடி சாயிபாபா

ஷீரடி சாயிபாபாவின் சுருக்கமான வரலாறு. பக்கம் 90 - விலை ரூ.58/- **ஆசிரியர்: ஆர்.வி.பதி**

எஸென்ஷியல் பப்ளிகேஷன்ஸ், 167 ஏ, போலீஸ் கந்தசாமி வீதி, ஒலம்பஸ், ராமநாதபுரம், கோயம்புத்தூர் - 641045. ✆ :0422-2323228.

★ திருநெல்வேலிக் கோவில்களில் சைவ வைணவ ஒற்றுமைகள்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நவதிருப்பதிகள், சிவாலயங்களில் காணப்படும் ஒற்றுமைகளை ஆராய்ந்து எழுதப்பட்டுள்ள நூல். பக்கம் 112 - விலை ரூ.50/-. **ஆசிரியர்: ந.து. ராமகுமார்**

மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை-17. ✆ :2434 2926. ❖

கடந்து போன விஷயங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கண்ணீரை வீணாக்காதீர்கள். - பூரிபிடிஸ்

அவர் அதையும் நமக்காகச் செய்கிறார்!

கரு உரு

''சேவை செய்ய வேணாம்னு நான் உங்களைச் சொல்லல்லை. ஆனா நம்ம பிஸினஸிலே கூடுதல் கவனம் தந்தா, நம்ம பொருளாதார நிலை வளருமில்லே?'' என்று நீலா ஹரிஹரனிடம் கேட்டாள்.

களைத்து வந்திருந்த ஹரிஹரன் மனைவியை நோக்கினார். 'நான் செய்து வந்த சேவையைப் பார்த்துத்தான் இவள் என்னை விரும்பி மணந்தாள்; இன்று இப்படி மாறிவிட்டாளே!' என எண்ணியபடி உண்ண ஆரம்பித்தார்.

ஒரு நடுத்தரக் குடும்பத்தின் நாயகன் ஹரிஹரன். நடுத்தரமான சிந்தனைகள் உடையவள் நீலா.

''நீலா, இன்னைக்கு மட்டும் ஒரு பத்துப் பள்ளிகளிலே ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் இதழ் நடத்தும் 'விவேகானந்தர் தின'த்தைக் கொண்டாட ஏற்பாடு செஞ்சோம்...'' என்றார் ஹரிஹரன் உற்சாகமாக,

''உங்கள மாதிரியே பத்துப் பேர் உடன் வந்தாங்களா?'' என்று கேட்டாள் லேசான அதிருப்தியுடன்.

''ஆமா.... நீலா, நான் பிஸினஸ்லே கவனம் வைக்கல்லேன்னு நீ நினைக்கிறியா?''

''கொஞ்சம் அதிகமா கவனிங்கன்னு சொல்றேன்''

''பிஸினசும் பாக்குறேனே நீலா. ஆனா சுவாமி விவேகானந்தரின் 150-வது பிறந்த ஆண்டான இந்தக் காலகட்டத்திலே எங்கேயும் சுவாமிஜியோட 'பிரஸன்ஸ் (சாந்நித்தியம்)' கூடுதலா இருக்கு. அதனாலதான் 'சக்தி பெற சுவாமிஜியை முழங்கு'ன்னு ஒவ்வொரு பள்ளியிலும் விவேகானந்தருக்கு விழா எடுக்கச் சொல்லி வர்றோம். அவரது பொன்மொழிகளை இளைஞர்களின் மனங்களில் பதிய வைக்கிறோம். நீலா, பிஸினஸ் எப்போ வேணும்னாலும் செய்யலாம், சம்பாதிக்கலாம். ஆனா....''

நீலா விரக்தியாகக் கணவனைப் பார்த்தாள்.

''சுவாமிஜியோட வீரமொழிகளை மாணவர்கள் சேர்ந்து முழங்கும்போது ஏற்படும் விவேகானந்தரோட அதிர்வலைகள் அந்தந்தப் பள்ளிகளுக்குப் புது 'பவரை'த் தரும். சமுதாயத்துக்குப் புது ஊக்கத்தைக் கொடுக்கும்...'' என்று ஹரிஹரன் தொடர்ந்தார்.

நீலா கணவனின் உற்சாகத்தைப் பொருட்படுத்தாத குரலில், ''நான் ஒண்ணு கேட்டா தப்பா நெனக்க மாட்டீங்களே? சேவை செய்றதாலே உங்களுக்கு என்ன நன்மை கெடைக்குது?'' என்று கேட்டாள்.

ஹரிஹரன் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் சமாளித்தபடி, ''விவேகானந்தர் பெயரில் நாங்க ஊருக்குச் சேவை செய்றது, நமக்கு என்ன நன்மை கிட்டும்னு எதிர்பார்த்து இல்லை'' என்றார்.

''பின்னே?''

''சுயநலத்தை விட்டு சேவை செய் என்கிறார் சுவாமிஜி. எல்லாரும் சுயநலமாகச் சொந்த வேலைகளை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தா அந்தச் சமுதாயம் சீக்கிரமே நொடிஞ்சி போகும். இப்போ நம்ம சமுதாயம் அப்படித்தான் ரொம்ப சிரமப்படுது''

இவ்வாறு கூறிவிட்டு, சேவை செய்தால் என்னென்ன நன்மை கிடைக்கும் என்பதைப் பல உதாரணங்களுடன் விளக்கிக் கூறினார் ஹரிஹரன்.

எல்லாம் கேட்டுவிட்டு நீலா, ''என்னமோ, என் கேள்விக்கு நீங்க சரியா பதில் சொல்லல்ல'' என்று கூறிவிட்டுப் படுக்கச் சென்றுவிட்டாள்.

ஹரிஹரன் புரண்டு புரண்டு படுத்தார். தூக்கம் வரவில்லை. அவளிடம் சேவை பற்றி அவ்வளவு சொல்லியும் கடைசியில் அப்படிச் சொல்லிவிட்டுப் போய்விட்டாளே என்று தவித்தார்.

'ஆமாம், சேவை செய்வதால் எனக்கு என்ன நன்மை கிடைக்கிறது?' இந்தக் கேள்வி மனதைக் குடைய ஆரம்பித்தது. என்ன இது? இது மனைவியின் கேள்வி மட்டுந்தானா? அல்லது எனக்கான விடையை நானே உணராமல் உள்ளேனா?

சோர்வானாலும் சஞ்சலம் வந்தாலும் சுவாமிஜியைப் படிப்பது ஹரிஹரனின் வழக்கம். நூலை விரித்தார். விரிந்தது விவேகானந்தரின் வரலாறு.

அமெரிக்கா, லாஸ் ஏஞ்சலிஸ். 1900, பிப்ரவரி. சுவாமி விவேகானந்தர் இரண்டாம் முறையாக அமெரிக்கா சென்று பல வேதாந்தச் சொற்பொழிவுகளை ஆற்றி வந்தார்.

பக்தர்களுக்கு குருவாகவும், அறிவுஜீவிகளுக்கு அறிவை வழங்கும் ஆசானாகவும், நலம்விரும்பிகளின் நீண்ட கால நண்பனாகவும், குழந்தைகளுக்கு ஒரு தாயாகவும் இருந்து வந்தார் சுவாமிஜி.

அமெரிக்காவில், சுவாமிஜியை மிகவும் நேசித்தவர்களுள் மீட் சகோதரிகளின் குடும்பம் மிக முக்கியமானது. தந்தை, தாய், மூன்று சகோதரிகள் என்று அனைவரும் சுவாமிஜியைத் தங்களது குடும்பத்தின் ஓர் அங்கத்தினராகவே கருதினர்.

அவர்களுள் நடு சகோதரியான திருமதி. ஆலிஸ் மீட் ஹேன்ஸ்ப்ரோ ஓர் அருமையான படைப்பு.

சுவாமிஜிக்குச் சில மாதங்களே அவர் சேவை செய்தாலும் அவர் பெற்ற நிறைவு அலாதியானது.

சிகாகோ சொற்பொழிவு செய்த ஆன்மிகப் பெருந்தகை தங்கள் வீட்டில் வந்து தங்குவார் என்று அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

வாராது வந்த மாமணியான சுவாமிஜியின் தொண்டிற்குத் தன் பங்காக ஹேன்ஸ்ப்ரோ உடல் உழைப்பு, நேரம், முழு ஈடுபாடு என்று பலவும் நல்கி, பக்தியுடன் சேவை செய்தார்.

சுவாமிஜி உரையாற்ற ஏற்பாடு செய்வது, அதற்கான அரங்கு, வரும் ஆட்களைக் கவனித்துக் கொள்வது, சுவாமிஜியின் உயரிய கருத்துகளை உலகிற்கு வழங்கச் செய்வது - இந்த வகையில் ஹேன்ஸ்ப்ரோ சுவாமிஜியின் அருமையான ஒருங்கிணைப்பாளர்.

இந்தியாவின் நலத்திற்காக சுவாமிஜி நிதி திரட்டினார். வரும் பணத்தை அவர் ஹேன்ஸ்ப்ரோவிடம் தந்து விடுவார். அதனால் ஹேன்ஸ்ப்ரோ சுவாமிஜியின் நேர்மையான கணக்காளர்.

சுவாமிஜியின் உரை பற்றிய பத்திரிகை விளம்பரம், உரைக்குப் பின்வரும் 'கவரேஜ்', அவரது பேட்டிக்கான ஏற்பாடு போன்ற பணிகள் செய்வதில் சுவாமிஜிக்கு அவர் ஒரு தேர்ந்த காரியதரிசி.

அதோடு, பலர் சுவாமிஜியை ஏமாற்றிவிடுவதுண்டு. அப்போது அந்த ஆதங்கத்தை அவர் அமைதியான ஹேன்ஸ்ப்ரோவிடம்தான் காட்டுவார். 'எனக்கு மிகவும் பிரியமானவர்களைத்தானே நான் கடிந்துகொள்ள முடியும்' என்பார் சுவாமிஜி ஒரு சிறுவனைப் போல.

இவை தவிர, சுவாமிஜியின் ஆடைகளைத் தினமும் தயார்ப்படுத்தி வைப்பது, முக்கியமாக அவருக்காகச் சமைப்பது, அவரைக் காண வருபவர்களுக்கு உணவோ, தேநீரோ பரிமாறுவது என்று சுவாமிஜிக் காகப் பம்பரமாகச் சுற்றினார் ஹேன்ஸ்ப்ரோ.

உலக மக்களின் நன்மைக்காக விவேகானந்தர் ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருந்தபோது அவருக்காக, அவரது அன்றாடத் தேவைகளுக் காக நன்கு உழைத்தார் ஹேன்ஸ்ப்ரோ.

'வேலை செய்' என யாரையும் விரட்டும் சுவாமிஜியே ஒருமுறை, 'ஹேன்ஸ்ப்ரோ, நீ பேய் போல் வேலை செய்கிறாய்!' என்றார்.

ஹேன்ஸ்ப்ரோ பல பணிகளைச் செய்ய முடிந்ததற்கு சுவாமிஜியின் ஓர் உபதேசமே காரணம்:

'ஒன்றைச் செய்யும்போது அதில் முழு இதயத்தையும் ஈடுபடுத்து; உன்னை எதுவும் தடுக்க முடியாது.'

சுவாமிஜியுடன் இருந்தது, தனது குடும்பத்திற்கு ஓர் ஒப்பற்ற ஆன்மிக அனுபவமாகக் கருதினார் ஹேன்ஸ்ப்ரோ.

'ஏசுநாதரே எங்கள் வீட்டில் வந்து எங்களுடன் தங்கியதுபோல் உணர்ந்தோம்' - இது ஹேன்ஸ்ப் ரோவின் நம்பிக்கை.

தமக்காகப் பணி புரியும் ஒருவருக்காக சுவாமிஜி என்ன செய்வார்?

ஒரு நாள் ஹேன்ஸ்ப்ரோ ஏனோ உற்சாகம் இழந்து சோர்ந்திருந்தார். அதைக் கண்ட சுவாமிஜி, ''வா, அமர், நாம் இருவரும் தியானிப் போம்'' என்றார்.

''நோ சுவாமிஜி, நான்

கஷ்ட காலத்தில்தான் கடவுளின் நினைவு வருகிறது. - காந்தியடிகள்

ஸ்ரீசாரதா ஆஸ்ரமம்

ஸ்ரீ சாரதா சேவாலயா

விவேகானந்த நகர், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை,
புதிய எடைக்கல், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் - 606 107.
போன்: 89030 06955 செல் : 94431 21452
இணையத்தளம்: www.srisaradaashram.org e-mail : ashram@srisaradaashram.org

இளகும் உள்ளங்களுக்கு ஓர் எளிய வேண்டுகோள்!

கிராமப்புற ஏழைச் சிறுமிகளுக்கான ஓர் அன்பாலயம்

பேரன்புடையீர்! வணக்கம்.

நமது ஸ்ரீசாரதா ஆஸ்ரமம் கடந்த சில வருடங்களாக "ஸ்ரீசாரதா சேவாலயா" என்ற இலவச விடுதியை கிராமச் சிறுமிகளுக்கான ஓர் அன்பு இல்லமாக நடத்தி வருகிறது. குக்கிராமத்தில் வசிக்கும் வசதியற்ற மிக ஏழ்மையான 150 கிராமச் சிறுமிகள் சேவாலயத்தில் தங்கி, கல்வி பயின்று வருகின்றனர்.

கிராமத்துச் சிறுமிகள் பல்வேறு வேலைகளில் ஈடுபட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில்... படிப்பென்பது பகற் கனவாய் ஆகிவிடுகிறது.

இதற்கு ஒரு விடிவெள்ளியாக ஸ்ரீசாரதா ஆஸ்ரமம் பலரும் தயங்குகிற கிராமப்புறச் சிறுமியர் கல்விப் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

உதவும் உத்தம மனம் கொண்டோர், கீழ்க்கண்ட வகைகளில் தங்கள் நல்ல உணர்வுகளை உதவிகளாக மாற்றி அளிக்கலாம்!

	50 சிறுமிகளுக்கு	75 சிறுமிகளுக்கு	100 சிறுமிகளுக்கு	150 சிறுமிகளுக்கு		
காலைச் சிற்றுண்டி	ரூ. 450/-	ரூ. 675/-	ரூ. 900/-	ரூ. 1,350/-	ஒரு சிறுமிக்கு ஓராண்டு கல்வி உதவி	ரூ. 1,400/-
மதிய உணவு	ரூ. 900/-	ரூ. 1,350/-	ரூ. 1,800/-	ரூ. 2,700/-	ஒரு சிறுமிக்கு ஓராண்டு பராமரிப்புச் செலவு (உணவு, உடை, கல்வி)	ரூ. 15,000/-
இரவு உணவு	ரூ. 600/-	ரூ. 900/-	ரூ. 1,200/-	ரூ. 1,800/-	சேவாலயம் ஒரு மாதப் பராமரிப்புச் செலவு	ரூ.85,000/-
ஒரு நாள் உணவு	ரூ. 1,950/-	ரூ. 2,925/-	ரூ. 3,900/-	ரூ. 5,850/-	ஒரு சிறுமியின் ஒரு வருட மருத்துவச் செலவு	ரூ. 500/-
ஒரு மாத உணவு	ரூ. 58,500/-	ரூ. 87,750/-	ரூ. 1,17,000/-	ரூ. 1,75,500/-		

தங்களின் திருமண நாள், குடும்பத்தினர் பிறந்த நாள், தாங்கள் புதிய தொழில் தொடங்கிய நாள், முன்னோர்களின் நினைவு நாள் மற்றும் இதர பண்டிகை நாட்களில், சேவாலயக் குழந்தைகளுக்குத் தாங்கள் அளிக்கும் தொகையோ, பொருளோ எதுவாயினும் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்தச் சேவைப் பணிக்காக உதவும் நல்ல இதயம் கொண்டவர்களுக்கு மகத்தான புண்ணியம் கிடைக்கிறது. புண்ணியத்துடன் இறையருள் சேரும்போது அது "குடும்பக் கவசமாக மாறி" பல வகைகளில் பாதுகாக்கிறது. இது ஆத்ம திருப்திக்கான ஒரு வழியாகும்.

தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீசாரதா ஆஸ்ரமம், உளுந்தூர்பேட்டை" (Sri Sarada Ashram, Ulundurpet) *என்ற பெயருக்கு செக்/டிடி/எம்.ஓ. மூலம் அனுப்பும்படி கோருகிறோம்.*

நன்கொடைகளுக்கு 1961 இந்திய வருமான வரிச் சட்டம் 80 G பிரிவின்படி வரி விலக்கு உண்டு.

இறைவன் பணியில்,
ஸ்ரீசாரதா ஆஸ்ரம சகோதரிகள்

தியானமே செய்ததில்லை'' என்றார் ஹேன்ஸ்ப்ரோ பரபரப்புடன். சுவாமிஜி ஒரு தந்தைக்குரிய வாஞ்சையுடன், ''அதனால் என்ன! வந்து என் பக்கத்தில் உட்கார். நான் தியானிக்கிறேன்'' என்றார்.

சுவாமிஜியின் அருகில் அமர்ந்து ஹேன்ஸ்ப்ரோ கண்களை மூடினார். ஒரு கணம்தான், அவர் எங்கேயோ மிதப்பதுபோல் உணர்ந்தார்; பயத்துடன் விரைந்து கண்களைத் திறந்து சுவாமிஜியைப் பார்த்தார்.

காவியுடையில், பத்மாசனத்தில், கர மலர்களைச் சேர்த்து மடி மீது வைத்து, விழி பாதி மூடிய நிலையில் சுவாமிஜி ஒரு செப்புச்சிலையாக தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

தனக்கும் இப்படி தியான நிலை சித்திக்குமா? என்று ஹேன்ஸ்ப்ரோ ஒரு கணம் ஏங்கினாரோ!

மற்றொரு நாள் சுவாமிஜி தியான வகுப்பு நடத்தினார். அதற்காகப் பல அன்பர்கள் ஹேன்ஸ்ப்ரோவின் வீட்டிற்கு வந்திருந்தனர். சுவாமிஜியின் திருமுன்பு அமர்ந்து தியானிக்கும் அனுபவமே தனிதான். அதனை அவரே கூறுகிறார் :

'தியான வேளையில் நான் என் மனதை ஓர் ஆனந்த நிலைக்கு உயர்த்துகிறேன். பிறகு அதே நிலையை உங்கள் (அன்பர்கள்) மனதிலும் உருவாக்க முயற்சி செய்கிறேன்'.

சுவாமிஜி தியான வகுப்பு நடக்கும் கூடத்திற்குச் செல்வதற்காகத் தமது அறையில் இருந்து புறப்பட்டார்.

தினமும் ஹேன்ஸ்ப்ரோ சுவாமிஜிக்காகச் சூப் ஒன்றைத் தயாரித்து வைத்துவிட்டு, வகுப்பில் கலந்துகொள்வார். அந்தச் சூப் தயாரிக்க ஓரிரு மணி நேரம் ஆகும். அன்று அவரால் வேலையை முடிக்க இயலவில்லை.

வகுப்பிற்குக் கிளம்பிய சுவாமிஜி ஹேன்ஸ்ப்ரோவிடம், ''என்ன, நீ தியானத்திற்கு வரவில்லையா?'' என்று கேட்டார். வகுப்பிற்கு வர முடியாததைச் சொன்னார் ஹேன்ஸ்ப்ரோ. ஒரு கணம் சுவாமிஜி, தனக்காக, தனது சக்திக்கு மீறி சேவை செய்யும் அந்தக் கர்மயோகியைக் கவனித்துப் பார்த்தார்.

'சீடன், குருவின் தேக நலனைப் பாதுகாத்தால், குரு, சீடனின் ஆன்ம நலனைப் பாதுகாக்கிறார்' என்கிறது சநாதன தர்மம். அதை, மனதில் கொண்டு சுவாமிஜி, ''பரவாயில்லையம்மா. நீ எனக்காக வேலை செய்கிறாய்; நான் உனக்காகத் தியானிக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஆறுதலாக ஏதோ கூறுகிறார் என எண்ணி ஹேன்ஸ்ப்ரோ தனது வேலையில் மும்முரமானார். ஆனால் ஆச்சரியம்!

வெளியில் பரபரப்பாகப் பல வேலைகள் செய்து கொண்டிருந்தாலும், தனக்குள் அதுவரை அனுபவித்தறியாத ஓர் ஆற்றல், அக அமைதி, எல்லையற்ற ஆனந்தத்தை உணர்ந்தார் அவர். வகுப்பு முடியும்வரை ஹேன்ஸ்ப்ரோ இந்தத் தியான அனுபவத்தில் இருந்தார். சுவாமிஜி உண்மையில் தனக்காகத் தியானம் செய்தார் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

சுவாமிஜியும் ஹேன்ஸ்ப்ரோவும்

அதன் பிறகு, ஹேன்ஸ்ப்ரோவின் பக்தி தீவிரமானது. தமது கடைசிக்காலம் வரையிலும் சுவாமிஜியின் புனித நினைவுகளில் திளைத்து வந்தார் அவர்.

பிற்காலத்தில் இதை நினைவுகூர்ந்த ஹேன்ஸ்ப்ரோ, ''அன்று மட்டுமல்ல, இன்றும் அவர் எனக்காகத் தியானம் செய்து கொண்டிருக்கிறார் என்பதை நான் என்றும் உணர்கிறேன்'' என்றார்.

திடீரென கண்விழித்த ஹரிஹரன் ஒரு கணம் இன்ப அதிர்ச்சியில் திக்குமுக்காடிப் போனார். 'பெட் சுவிட்சை' அழுத்தினார். 'டேபிள் பேன்' சுற்றிக் கொண்டிருந்தது.

அந்தக் காற்றில் ஹரிஹரன் இரவு வாசித்துக் கொண்டிருந்த நூலான 'சுவாமி விவேகானந்தர் - 2 - ஆம் பாகம் பக்கம் 356 விரிந்து கிடந்தது.

உடனே ஹரிஹரன் புத்துணர்வுடன் விழித்தார். சுவாமிஜியின் சிந்தனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும் முன்பு தனக்குள் அவற்றை நன்கு கிரகித்துக்கொள்ள, தியானத்தில் அமர்ந்தார்.

'வேலை செய்யுங்கள், நான் உங்களுடன் உள்ளேன். நான் மறைந்த பிறகு என் ஆன்மா உங்களுடன் வேலை செய்யும்' என்ற சுவாமிஜியின் தெய்விகக் குரல் அவரது இதயத்தில் ஒலித்தது! ❖

சீடன், குருவின் தேக நலனைப் பாதுகாத்தால், குரு, சீடனின் ஆன்ம நலனைப் பாதுகாக்கிறார்.

பிறர் துயர் கண்டு வருந்துதல் மனித குணம், அதை நீக்குதல் தெய்வ குணம். - ஒரு மகான்

வி.நாராயணன்

துன்பங்களாகிய கருவிகளின் மூலம், இறைவன் நம்மை மேலான காரியங்களுக்காகத் தயார் செய்கிறான். - பெரியோர் வாக்கு

சுய முன்னேற்றப் பகுதி

வள்ளுவர் வழியில் மேல்நாட்டு மேலாண்மை

லண்டனில் 2003-இல் அதிநுட்ப மேலாண்மை கலந்தாய்வு வல்லுனர்களின் (Strategic Management Consulting Experts) ஒரு மாநாடு நடைபெற்றது. அதில் உலகின் தலைசிறந்த 16 வல்லுனர்கள் கலந்து கொண்டு 10 செயல்முறைச் சிந்தனை வழிகளைப் பற்றிக் கூறினர். அவை வருமாறு:

1. ஒரு செயலைத் திட்டமிட்ட பின் உடனே செய்ய வேண்டும்.

2. சூழ்நிலைக்கு ஏற்பச் செயலின் வேகம் அமைய வேண்டும்.

3. செயலின் பலனை நோக்கிச் செயல்திட்டம் அமைய வேண்டும் (Result Focused Planning).

எங்கு செயல்முறை முக்கியமோ, அங்கு செயற்படுமுறை நோக்கித் திட்டம் அமைய வேண்டும் (Process Focused Planning).

4. லாபம் தரும் சந்தையில் பெரும் பங்கு பெறுவதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும். அதற்கு முழு ஈடுபாட்டுடன் அனைத்துப் போட்டி நிறுவனங்களையும் வெல்லத் திட்டமிட வேண்டும்.

5. ஒரு செயலைத் திட்டமிட எல்லாக் கோணங்களிலும் ஐயமின்றி ஆராய்ந்திட வேண்டும்.

6. ஒரு செயலைத் திட்டமிடச் செயலின் நோக்கம், தடங்கல்கள், செலவுகள் மற்றும் வெற்றியில் கிடைக்கும் லாபம் முதலியவற்றை ஆராய வேண்டும்.

7. Bench Mark செயற்படுமுறையினைவிட, செயலின் தேவை மற்றும் நோக்கம் சார்ந்த செயற்படுமுறை வேண்டும்.

8. உண்மையான தேர்ந்தெடுக்கும் வழிகள் Real options செயல்திட்டங்களில் மிக அவசியம்.

9.போட்டியாளர்களை நமது கூட்டாளிகளாகச் செய்தலே மதிநுட்பம்.

10. சிறிய நம்பத் தகுந்த போட்டி நிறுவனங்களை நல்ல விலைக்கு வாங்கி இணைத்துக் கொள்ளுதலே லாபத்திற்கு வழி.

இந்த 10 செயல்வழிகளை அந்த மாநாட்டின் முதல்வர் Bob Garrat ஒரு சிறு நூலாய் 2004-இல் வெளியிட்டார். இதனை ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நிறுவன தலைவர்கள் படித்துப் பாராட்டினர்.

2007-ஆம் ஆண்டு ஐரோப்பாவில் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டது. அதிலிருந்து தப்பியவர்கள் மேற்கூறிய இச்சிந்தனையைச் செயலாக்கியவர்கள் மட்டுமே. எனவே 2009-ல் எல்லா மேலாண்மைப் பாடங்களிலும் இச்சிந்தனைகள் கட்டாயப் பாடமானது.

நம் முன்னோரும் இப்படிப்பட்ட தொலைநோக்கு பொருளாதாரச் சிந்தனையினைக் கொண்டிருந்தனர். 2000 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் 'வினை செயல்வகை' எனும் அதிகாரத்தில் இச்சிந்தனைகளைப் பதிவு செய்தார்.

இப்படி பாரதம் பல சிறந்த நூல்களைப் படைத்துள்ளது. ஆனால் நாமோ குறை பல உள்ள மேலை வழிகளைக் கற்கிறோம். அதனால் வளர்ச்சியின்றித் தவிக்கிறோம்.

சுவாமி விவேகானந்தர் சொன்னபடி, நாம் நமக்குள் அனைத்தும் இருப்பதை உணர்ந்து தைரியமாய் செயல்பட்டால் வெற்றியும் சிறப்பும் சேரும் என்பதில் ஐயம் இல்லை.

வள்ளுவரின் பொருளாதாரச் சிந்தனைகளின்படி, முன்னேறிய சில நிறுவனங்களைப் பார்ப்போம்.

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

பொருள் : ஒரு செயலைச் செய்வதற்குத் தேவை நல்ல திட்டம் மற்றும் துணிவு. துணிவானது நல்ல திட்டத்தால் வளரும். துணிவை வளர்க்கும் திட்டத்தைத் தீட்டிய பிறகு அதனைச் செயல்படுத்தத் தாமதிப்பது பெரும் தீமை.

உதாரணம் : ஜெராக்ஸ் நிறுவனம் 1970-இல் இல்லக் கணினியினைக் (Personal Computer) கண்டுபிடித்தது. ஆனால் IBM நிறுவனம் எதிர்த்ததும் ஜெராக்ஸ் நிறுவனம் தயங்கி நின்றது.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஆப்பிள் நிறுவனத்தின் நிர்வாகி ஸ்டீவ் ஜாப்ஸ் ஜெராக்ஸ் நிறுவனத்தைக்

காண வந்தார். அவர் இல்லக் கணினியினைக் கண்டு வியந்தார். ஜெராக்ஸ் நிறுவனத்தை ஊக்குவித்தார்.

ஆனாலும் அந்த நிறுவனம் தன் தயக்கத்தை விட வில்லை. அதனால் கடைசிவரை கணினியினைத் தயாரிக்க இயலவில்லை. மேலும் நகல் எடுக்கும் கருவி தயாரிப்பில் தனக்கு இருந்த முதலிடத்தையும் நாளடைவில் இழந்தது. தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார நிலை இருந்தும் திட்டத்தைச் செயற் படுத்த தாமதித்ததால் ஜெராக்ஸ் தன் நிலை இழந்தது.

முதன் முதலில் கைபேசியினை உருவாக்கி விற்றது மோடாரோலா நிறுவனம். ஆனால் அது புதிய மாடல்களை அறிமுகம் செய்யத் தயங்கியது. அது தனது பழைய மாடல் விற்காது என்று பயந்தது.

முடிவில் அது திவாலானது. காரணம் நல்ல முடி வுகளைச் செயற்படுத்துவதில் காட்டிய தாமதம். ஆப்பிள் நிறுவனம் புதுக் கண்டுபிடிப்புகளைக் காலம் தாழ்த்தாது அறிமுகம் செய்து வெற்றி கண்டது.

தூங்குக தூங்கிச் செயற்பால, தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

பொருள் : எதை நிதானமாகச் செய்ய வேண்டுமோ, அதை நிதானமா கச் செய். எதை விரைவாகச் செய்ய வேண்டுமோ, அதைச் சீக்கிரம் செய்.

ஸ்டீவ் ஜாப்ஸ்

உதாரணம் : Google இன்டர்நெட் மார்க்கெட்டில் நுழைந்தது. முதலில் கூகுளின் அழைப்பைப் பெற்றவர்கள் மட்டுமே மின்னஞ்சல் கணக்கைத் துவங்க முடியும் என்று நிபந்தனை வைத்தது. பிறகு கேட்பவர்க்குக் கணக்கைத் துவங்க அனுமதித்தது.

நல்ல நிலை அடைந்த பிறகு அது விளம்பரம் செய்து நுகர்வோரைப் பெருக்கிக் கொண்டது. முதலில் தேடுகளத்தில் இறங்கியது. பிறகு மின்னஞ் சல், பிகாஸா எனப் படிப்படியாகக் களத்தில் தனது டிஜிடல் தொழில்நுட்பத் திறனைக் காட்டியது.

2008-ல் 2000 இலவச மின்னஞ்சல் கணக்குகளை இணைய தளங்களைத் தாக்கும் ஒரு கூட்டம் (Hacker's Forum) உடைத்துவிட்டது. உடனடியாக கூகுள் BSD சர்வருக்கு மாறியது. இரு வழிப் பாது காப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இவ்வாறான விஷயத்தில் விரைவாகச் செயலாற்றியதால் கூகுள் தன்னை முதலிடத்தில் இருத்திக் கொண்டது.

Yahoo எல்லா வித இன்டர்நெட் மென்பொருள் களையும் ஒரு சேர அறிமுகம் செய்தது. ஆகவே எதிலும் அதனால் முதன்மை பெற முடியவில்லை. 2008-ல் யாஹூ எஸ்.டி. சர்வரிலிருந்து மைக்ரோ ஸாப்ட் ஐ ஐ எஸ் சர்வருக்கு மாறியது.

இதனை எதிர்த்து இணைய தளங்களைத் தாக்கும் கூட்டம் 1000 இலவச மின்னஞ்சல் கணக்குகளை உடைத்துவிட்டது. யாஹூ அமைதி காத்தது. முன்பு அதிரடியாகக் களமிறங்கிய யாஹூ தொடர்ச் சியாக நிகழ்ந்த சில தோல்விகளால் அமைதியாக, படிப்படியாகக் காரியம் செய்ய முடிவு செய்தது.

இந்த முடிவு தவறானது. 1000 உடைக்கப்பட்ட கணக்குகள் 4,00,000-ஆக உயர்ந்தன. 42 கோடி நுகர்வோரை 2008-ல் பெற்றிருந்த யாஹூ நான்கு ஆண்டுகளில் 13 கோடி நுகர்வோரை இழந்தது.

ஒல்லும் வாயெல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

பொருள் : எங்கு நமது செயல்முறை செல்லுமோ அங்கு அவ்விதமே செய்ய வேண்டும். அவ்வாறு நமது செயல்முறை செல்லாத இடத்தில் அதற்கேற்ப வழிமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

விளக்கம் : நம்பிக்கையோடு பிஸா ஹட் (Pizza Hut) நம் நாட்டில் காலடி வைத்தது. வெளிநாட்டுப் பொருள்களை விரும்பி வாங்கும் இந்தியர்கள் பிஸா வைத் திரும்பியும் பார்க்கவில்லை.

இந்தியர்கள் சுவைக்கு அதிக முக்கியத்துவம் தருபவர்கள் என்பதை பிஸா ஹட் உணர்ந்தது. எனவே சுவைகள் பல சேர்த்து, பிஸாவைப் புதிய வடிவத்தில் தயாரித்தது. இன்று நம்மவர்கள் பிஸாவை நன்கு ருசி பார்க்கின்றனர்.

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

பொருள் : ஒன்றைத் தொடங்கி, இடையில் கைவிடுவதும், பகையை ஒழிக்கத் தொடங்கி, இடையில் கைவிடுவதும், தீயை அணைக்கத் தொடங்கி, முற்றிலும் அணைக்காமல் விடுவதற்குச் சமமாகும்.

விளக்கம் : விஐபி சூட்கேஸ் மிகவும் பிரபலமாய் இருந்த காலம். அமெரிக்கன் டூரிஸ்டர் உள்நுழைய திட்டம் போட்டுக் கொண்டிருந்தனர். வி.ஐ.பி. அனைத்து வகையான நுகர்வோரையும் அமெரிக்கன் டூரிஸ்டரிடம் போகாது தடுத்தனர்.

இன்றளவும் போட்டியாளர்களின்றி நல்ல முறை யில் வி.ஐ.பி. நிறுவனம் நடந்து கொண்டிருக்கிறது.

பொருள் கருவி காலம் வினையினொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

பொருள்: ஒன்றைச் செய்யும் முன் ஐந்து விஷயங் களை நன்கு ஆராய்ந்து தெளிய வேண்டும். அவை:

1) நிதித் தேவை மற்றும் செயலின் நோக்கம்,
2) தேவைப்படும் உபகரணங்கள்,
3) தேவைப்படும் நேரம் மற்றும் ஏற்ற காலம்,
4) செய்யப்படுமுறையும் அதன் பயனும்,
5) தேவைப்படும் இடம் மற்றும் சூழல்.

நாம் அவசியம் என்று நினைக்கும் எத்தனையோ பொருள்கள் உண்மையில் நமக்கு ஒரு பயனும் அளிக்காதவை. - பாரதீப் பழமொழி

The symbol of trust™
Since 1932

Your Trust Our Pride

Over 76 years of experience | 5 crore customers | 148 outlets | Thousands of Smart Guides | Financial Supermarket

In making Peerless a trusted household name for over 76 years.

At Peerless, we understand you better - your changing needs and ambitions. Which is why we have brought you your own financial supermarket, Peerless Smart Money. Offering a wide range of products including savings, life insurance, general insurance, mutual fund and credit cards in tie up with leading global brands. Distributed by Peerless and its subsidiaries.

Peerless™
SMART MONEY
Your Financial Supermarket
Savings ● Life Insurance ● General Insurance ● Mutual Fund ● Credit Card

(Life/General Insurance policies are distributed through Peerless Developers Limited, a wholly owned subsidiary of the Peerless General Finance and Investment Co. Ltd. (PGFI), as the Corporate Agent of Max New York Life Insurance Co. Ltd. and Iffco-Tokio General Insurance Co. Ltd. duly regulated by the Insurance Regulatory and Development Authority. Peerless Smart Money is a service trade-mark of PGFI. Insurance is a subject matter of solicitation. Mutual Fund investments are subject to market risk. Please read the offer documents carefully before investing.)

The Peerless General Finance & Investment Company Limited, Peerless Bhawan, 3 Esplanade East, Kolkata 700 069
Ph: 033 22483247, Website: www.peerless.co.in, sms 'smart' to 575756. Call toll-free helpline 1800 345 1932

Peerless™
Smart Financial Solutions

3050.2008

விளக்கம் : Microsoft, Google, Hot Mail, Rediff Mail, Yahoo, Linked In, Wayne போன்ற நிறுவனங்கள் தங்களது உச்சத்தினை எட்டிக் கொண்டிருந்த காலம்.

பேஸ்புக் உள்ளே நுழைய ஆரம்பித்தது. அது தனது இருப்பை நிலைநிறுத்த 'ஒருங்கிணைந்த பொருள்செயல் திட்டம்' -Integrated Financial & Operational Strategy ஒன்றை வெளியிட்டது.

இது குறள் கூறிய ஐந்து விஷயங்களை உள்ளடக்கியது. இக்குறள் வழி நின்ற பேஸ்புக் இன்று தனக்கென ஓரிடத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றது.

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

பொருள் : ஒரு செயலைச் செய்யும் முன் மூன்று விஷயங்களை நன்றாக ஆராய்ந்து தெளிய வேண்டும். 1. செயலின் நோக்கம், 2. செய்யும்போது ஏற்படக்கூடிய இடையூறுகள் மற்றும் அதைக் களையும் முறைகள், 3. செயலை இடையூறுகள் தாண்டி முடிக்கும்போது ஏற்படும் பெரிய பயன். அதாவது,

★ செயலைச் செய்யும்போது தடங்கல்களை எதிர்பார்த்தே நாம் செய்ய வேண்டும். ★ செயலின் நோக்கத்தை எந்த நிலையிலும் கை விடக் கூடாது. ★ தடைகளைக் கடந்த பிறகு பெரிய பயன் வர வேண்டும். இல்லையேல் அதைச் செய்ய வேண்டாம்.

விளக்கம் : 3M நிறுவனம் ஒட்டும் பொருள் (Adhesives & Gums) தயாரிப்பில் முதலிடத்தில் இருந்தது. அந்நிலையைத் தக்க வைத்துக் கொள்ள கறை படியாத ஓர் ஒட்டும் பொருளை அது கண்டுபிடித்தே தீர வேண்டும் என்னும் நிலை.

ஒரு பொருளைக் கண்டுபிடிக்கப் பல கோடி ரூபாய் செலவாகும். மேலும் பல முறை தோல்வி காண வேண்டும். ஆனால் கண்டுபிடித்தால் நூறு ஆண்டுகளுக்கு 3M முதலிடத்தில் இருக்கும். எனவே 3M தனது ஆராய்ச்சியினைத் தொடங்கிற்று.

அப்படிப்பட்ட ஒட்டும் பொருளைக் கண்டுபிடித்தது. ஆனால் அப்பொருள் வலிமை குன்றி இருந்தது. பெருத்த நஷ்டம் என்று அனைவரும் புலம்பித் தவித்தனர். ஆனால் இந்த ஆராய்ச்சியின் நிதிப் பொறுப்பாளர் அமைதியாக இருந்தார்.

அவர் ஒரு முக்கியமான பத்திரத்தில் சுவடின்றி எழுத ஒரு ஸ்டிக் நோட்டாக இப்பொருளைப் பயன் படுத்தலாம் என ஆலோசனை வழங்கினார்.

தடைகளையும் தோல்விகளையும் எதிர்பார்த்துச் செய்ததால் இன்று 3M முதலிடத்தில் நிற்கிறது.

Amazon நிறுவனம் புத்தக விற்பனையில் சாதனை படைத்திருந்தது. அதனை ஆப்பிள் நிறுவனம் இ-புக் தயாரித்து தரக் கோரியது. உடனே Amazon தானே இ-புக்குகளையும் அதனைப் படிக்க ஒரு கருவியினையும் தயாரித்து விற்கலாம் என்று முடிவெடுத்தது.

அதற்கான கண்டுபிடிப்புகளுக்கு எவ்வித தடையோ, தோல்வியோ வர வாய்ப்பே இல்லை என்று அறிவித்தது. சில கோடிகளைச் செலவு செய்து Kindle eBook Reader கண்டுபிடித்தது.

ஆனால் கின்டில் பாட்டரி பேக்கப் இல்லாது போகவே அதனை யாரும் விரும்பவில்லை. ஆப்பிள் ஐபாட் முதலிடத்தில் நிற்க, கின்டில் முதல் 10 இடத்தில்கூட இல்லாது போனது.

தடைகளை எதிர்நோக்காது போனால் இதுதான் கதி என்று மற்றவருக்குப் பாடமானது.

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

பொருள் : பழகிய யானையைக் கொண்டு காட்டு யானைகளைப் பிடிப்பது ஒரு தந்திரம்.

அது போல ஒரு செயலைச் செய்து மற்றொரு செயலை முடித்துக் கொள்வது நன்று.

விளக்கம் : ஆப்பிள் நிறுவனம் ஐ-பாட்-ஐக் கண்டுபிடித்தது. அது வேலை செய்ய பாட்டு, படம், விளையாட்டுக்கள் முதலியன தேவை. அவற்றை வாங்கி ஐ-பாட்-ல் சேர்க்க ஐ-டியூன்ஸ் எனும் மென்பொருளையும் கண்டுபிடித்தது.

ஐ-டியூன்ஸ் வேலை செய்ய ஆப்பிளின் கணினி தேவை. ஐ-பாட்-டினால் கணினியின் வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டது ஆப்பிள்.

ஆங்கிலேயர்கள் நம்மை அடிமை செய்ய நமது பண்டைய அறிவுக் கருவூலங்களை வெறும் மொழி, மதம் என்பதில் புகுத்தி நம்மைப் பிரித்தும், தாழ்வு செய்தும் ஆண்டனர். நாமும் கட்டுண்டோம்.

இன்றோ ஆங்கிலேயர்கள் இல்லை. ஆனாலும் அடிமைத்தனத்தை இழக்காது இருக்கிறோம். இந்த நிலை மாற நாம் நாமாக வேண்டும்.

ஹார்வர்ட், ஆக்ஸ்போர்ட் கற்றுத் தரும் மேலாண்மை நுட்பங்களை வள்ளுவர் அமைச்சியல் என்னும் இயலில் - பத்து அதிகாரங்கள் இயற்றி - 100 குறள்களுக்குள் மிகவும் எளிய நடையில் நமக்கு என்றோ தந்துள்ளார்.

இனியாவது நமக்குள் இருக்கும் மேலாண்மைச் செல்வங்களை உணர்ந்து சிறப்போடு வாழ்வோம்.❖

பிரமுகர்களைப் புகழ்வது அவர்களுடன் பழக்கம் உண்டு என்று காட்டிக் கொள்வதற்காகவே! - லா புரூயர்

தமிழ் பேசினால் தண்டனை!

1942 போராட்டத்தில் நான் சிறையிலிருந்து விடுதலை அடைந்ததும் சென்னை தியாகராய நகரில் தமிழ்ப்பண்ணை என்ற புத்தக வெளியீட்டகம் துவக்கினேன்.

அப்போது பல தலைவர்களும் தொண்டர்களும் சிறையில் இருந்தார்கள். அவர்களை எல்லாம் விடுதலை செய்து தேசத்தில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டையைத் தகர்க்க வேண்டும் என்ற கருத்துடன், 'பூட்டை உடையுங்கள்' என்று ஒரு நூல் வெளியிட்டேன்.

இத்தலைப்பைப் பார்த்த ஆங்கில அரசு சிறைப்பூட்டை உடைக்கத் தூண்டுகிறேன் என்று கூறி என்னைக் கைது செய்தது.

இத்துடன் "வங்காளப் பஞ்சம்", "ஜப்பான் வருவானா?" என்ற நூல்களை வெளியிட்டதற்காகவும் கைது செய்யப்பட்டேன்.

வழக்கு எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடைபெற்றது. மாஜிஸ்ட்ரேட் ஒரு தெலுங்கர், பெயர் கோடீஸ்வர ராவ், சுத்தமாகத் தமிழ் தெரியாது.

'பூட்டை உடையுங்கள்' என்று அவருக்கு Break open the lock என மொழிபெயர்த்துக் கொடுத்துவிட்டார்கள்.



சின்ன அண்ணாமலை

மாஜிஸ்ட்ரேட், "எதுக்கு மேன் ஜெயில் பூட்டை உடைக்கச் சொன்னே?" என்று கேட்டார்.

நான் அவருக்குப் பணிவுடன், "பூட்டை உடையுங்கள் என்பதற்கு நான் கொள்ளும் அர்த்தம் Resolve the dead lock என்பதாகும்" என்றேன்.

அவர் அதை ஒப்புக் கொள்ளாமல் 'பூட்டை' என்றால் 'Lock?', 'உடை' என்றால் 'Break' என்று அர்த்தம் செய்து சொன்னார். சர்க்கார் வக்கீலும் என்னைக் கைது செய்த இன்ஸ்பெக்டரும் மாஜிஸ்திரேட்டுக்குத் தலையாட்டினார்கள்.

உடனே நான் "Kicked the bucket என்றால் இறந்து போனான் என்று அர்த்தமே தவிர 'பக்கெட்டை உதைத்தான் என்றா சொல்வது?' '' என்றேன். கோர்ட் சிரித்தது.

மாஜிஸ்ட்ரேட்டும் சிரித்தபடி, "வேறு ஏதாவது சொல்ல வேண்டுமா?" என்று கேட்டார்.

உடனே நான், "நீங்கள் தெலுங்கர், உங்களுக்குச் சரியாகத் தமிழ் தெரியவில்லை. என்னைக் கைது செய்த இன்ஸ்பெக்டரோ கன்னடக்காரர். அவருக்கும் தமிழ் தெரியாது. கேஸ் நடத்த வந்த சர்க்கார் வக்கீலோ மலையாளி. நான் வெளியிட்டிருக்கும் புத்தகமோ தமிழ்ப் புத்தகம். ஆகவே தமிழ் தெரிந்தவர்கள் இந்த வழக்கை நடத்த வேண்டுமென்று விரும்புகிறேன்" என்றேன்.

மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கோபம் வந்துவிட்டது. "வாட் டமில் - டமில்" என்று கூறி ஆறு மாதம் சிறைத் தண்டனை என்று தீர்ப்பு வழங்கிவிட்டார்.

என்னைக் கைது செய்த இன்ஸ்பெக்டரே என்னிடம், "காரியத்தைக் கெடுத்து விட்டீர்களே! மாஜிஸ்ட்ரேட் மூன்று மாதம்தான் தண்டனை கொடுப்பதாக இருந்தது. ஆனால் நீங்கள் தமிழ் கிமிழ் என்று பேசி ஆறு மாதம் வாங்கிக் கொண்டீர்கள்" என்று அனுதாபப்பட்டார்.

நான் சென்னை சிறைக்குப் போனதும் அங்கிருந்த பேராசிரியர் என்.ஜி.ரங்காவிடம் மாஜிஸ்ட்ரேட் விஷயம் சொன்னேன்.

அவர் அமைதியாகக் கூறினார்:

"தாய்நாட்டுப் பற்றுக்காக மூன்று மாதம், தாய்மொழிப் பற்றுக்காக மூன்று மாதம். ஆக ஆறு மாதம் சரிதான்".

- சின்ன அண்ணாமலை எழுதிய

'சொன்னால் நம்பமாட்டீர்கள்' புத்தகத்திலிருந்து

எனக்கென்ன பைத்தியமா?

18-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு அரசில் ரிஷிலு என்ற மந்திரி இருந்தார். அவரிடம் ஒருமுறை பிரெஞ்சு எழுத்தாளர் பௌலன் ஒரு தர்ம நிலையத்திற்காக நன்கொடை கேட்டார்.

ரிஷிலு மறுத்துவிட்டார். ஒரு நாள் இருவரும் ஓர் ஓவியக் கண்காட்சியில் சந்தித்துக் கொண்டனர்.

''அந்த அறையில் உங்கள் ஓவியத்தைப் பார்த்தேன்'' என்றார் பௌலன்.

''உடனே அதனிடம் ஏதாவது நன்கொடை கேட்டிருப்பீர்களே?'' என்று கிண்டலடித்தார் ரிஷிலு.

''எனக்கென்ன பைத்தியமா? ஓவியம் உங்களைப் போலவே இருந்ததால் பயன் இருக்காது என்பதுதான் தெரிந்ததாயிற்றே'' என்று பதிலடி தந்தார் பௌலன் சிரித்தபடி.

-'கோபி' ஜி.கே.எஸ். மூர்த்தி

Published by Swami Jeevananda on behalf of Sri Ramakrishna Math Trust from No. 31, Ramakrishna Math Road, [illegible] Printed by [illegible] at Sri Sai Graphics Pvt. Limited, No. 40, Peters Road, Royapettah, Chennai - 600 014.
Managing Editor : Swami Gautamananda.

தெய்வ அருளால் தோன்றிய திருப்பெருந்துறை

படம் : சங்கர் கதை : மோகனா சூரியநாராயணன்





6 பக்தர்களின் குறையைத் தீர்த்து வைக்க பரமன் பழுத்த ஓர் அடியாராகத் தோன்றினார்.



பிராமணப் பிள்ளைகளின் வேதாத்யயனம் சிறப்பாக நடைபெற்றது.

7 காலம் கடந்தது.கௌமார பாண்டியன் அரசனானார். சிவபுரத்தின் அருகில் இருந்த குறுநிலத்தை ஆண்ட வலிமை மிக்க மன்னன் லுண்டாக்கன் அரசரின் நட்பைப் பெற்றான். அவன் சிவபுரத்து நம்பிமார்களைச் சந்தித்தான்.



சூதறியாத அவர்கள் லுண்டாக்கனிடம் பத்திரங்களைக் கொடுத்தனர். அதன் மூலம் அவன் சிவபுரத்தைத் தன் நிலத்துடன் வஞ்சகமாக இணைத்துக் கொண்டான்.

9
அர்ச்சகர்களே! சிவபுரம் உங்களுக்கு வழங்கப்பட்டதற்கான ஆதாரம், சாட்சி, ஊர் பற்றிய அனுபவம் ஏதேனும் இருந்தால் அதைக் காட்டி நிருபிக்க வேண்டும்.
அரசே! ஆதாரம் முன்னரே இவரால் தந்திரமாகக் கவர்ந்து கொள்ளப்பட்டது. இவரிடம் உள்ள அச்சத்தினால் எவரும் சாட்சி கூற முன்வர மாட்டார்கள். என் செய்வோம்?
10
லுண்டாக்கரே, சிவபுரம் உமது என்பதற்கு ஆதாரம், அனுபவம் ஏதாவது உண்டா?
அரசே ! தொன்று தொட்டுவரும் எமது பரம்பரை ஆட்சியே ஆதாரம். அங்கு இரண்டு பனையளவு ஆழம் வெட்டினாலும் நீர் ஊறாது. எனது அனுபவம்.
11
நம்பிமார்களே! உங்களை மீண்டும் கேட்கிறேன். ஏதாவது அனுபவம் சொல்லுங்கள்.
நீதி தவறாத மன்னரே! சிவபுரத்தில் எங்கு வெட்டினாலும் வெட்டுவாய் தோறும் நீர் ஊறும்.
ஆ, பண்டிதர் இப்படிக் கூறி விட்டாரே! இங்கு சிறிதும் நீர் ஊறாதே, எப்படி இதை நிரூபிப்பது?
12
பண்டிதரே! நீங்கள் சொல்வது உண்மையா?
ஆஹா! இனி சிவபுரம் எனதுதான்.
இது முக்காலும் சத்தியம்.

13 பாண்டியன் அர்ச்சகர்களை முன்னே அனுப்பிவிட்டு, லுண்டாக்கனுடன் சிவபுரத்திற்குச் சென்றார். பண்டிதர் மனதிற்குள் சிவபெருமானிடம் மன்றாடிக் கொண்டிருந்தார்.

14 லுண்டாக்கன் வேண்டுமென்றே மேட்டுநிலத்தில் வெட்டினான். ஆனால் அங்கும் நீர் பீறிட்டெழுந்து அவன் முகத்தில் தெறித்தது.

15 வெட்டுமிடமெல்லாம் நீர் ஊறி, இந்த சிவபுரமே ஒரு பெருந்துறையாய் விளங்குகிறதே! ஆஹா, இது திருவருள்தான். இப்போது என்ன சொல்கிறீர் லுண்டாக்கரே?

அரசே! என் பேராசையை மன்னித்துவிடுங்கள். இந்தத் திருப்பெருந்துறையை நம்பிமார்களே அனுபவிக்க வேண்டும் என்ற இறையாணைக்கு நான் தலைவணங்குகிறேன்.

16 388-வது அந்தணராகத் தாமே எழுந்தருளியதால் இந்தத் தலத்தின் சுவாமியான ஆன்மநாதசுவாமிக்கு 'முன்னூற்றொருவர்' என்ற பெயரும் உண்டு. இறைவன் திருவருளால் சிறப்புப் பெற்ற இந்தத் திருத்தலத்தில் சேவை செய்ய நந்தியம்பெருமானே திருவாதவூரில் மாணிக்கவாசகராய் அவதரித்து திருப்பெருந்துறைக்கு மேலும் சிறப்பு சேர்த்தார்.



வாஸ்தவமான ஞானம் பெறுபவனுக்கு ஈசுவரன் வெகு தூரத்தில் இருப்பதாகத் தோன்றுவதில்லை. 'அவன்' என்று, எட்ட இருப்பதுபோல் இல்லாமல் 'இது' என்று இங்கே, அவனுடைய உள்ளத்திலேயே இருப்பதாக அவன் உணர்கிறான். ஈசுவரன் எல்லாரிடத்தும் இருக்கிறான். ஆகவே தேடுபவர்களுடைய காட்சிக்கு அவர்களிடமே தென்படுகிறான்.

– பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

12 லட்சம் பேர் பங்கு பெற உள்ள ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்
12-ஆம் ஆண்டு தேசிய இளைஞர் தின மாபெரும் விழா 2014

வகுப்பு 3-7

1. அஞ்சாதே, அஞ்சாதே!
2. நீ எதையும் சாதிக்க முடியும்.
3. தைரியமாக இரு சகோதரா!
4. வா, வீர முயற்சி ஏதாவது செய்.
5. நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய்.
6. வலிமையானவனாக நினை; நீ வலிமை மிக்கவன் ஆவாய்.
7. பெரும் ஊக்கம், அளவற்ற அஞ்சாமை, அளவற்ற பொறுமை - இவையே நமக்குத் தேவை.
8. பாவங்களுள் பெரிய பாவம் பயமே.
9. கோழைத்தனத்தை உதறித் தள்ளு.
10. நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது; வீரனாக இரு.
11. நம்பிக்கை, நம்பிக்கை - இதுவே மகிமையின் ரகசியம்.
12. வலிமையே வாழ்வு; பலவீனமே மரணம்.
13. ஏழைகளுக்காக இதய ரத்தத்தை வடிப்பவனே, மகாத்மா.
14. தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலரது வரலாறே உலக வரலாறு.
15. கல்வியின் சாரம் மன ஒருமைப்பாடே தவிர, வெறும் தகவல்களைச் சேகரிப்பதல்ல.
16. எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருக்கின்றன.
17. எஜமானன் போல் வேலை செய்; அடிமையாக அல்ல.
18. தனிமனித நிலை உயர்த்தப்பட்டால் நாடும், நிறுவனங்களும் நிச்சயம் உயர்வடையும்.
19. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி - இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை.
20. 'இந்திய மண்ணே என் சொர்க்கம். இந்திய நலனே எனது நலன்.'

வகுப்பு 8-12 மற்றும் கல்லூரிகள்

1. உன்னால் எதையும் சாதிக்க முடியும்.
2. தீமையை எதிர்த்து நில்; அஞ்சாமல் எதிர்த்து நில்.
3. உயிரே போனாலும் தைரியத்தைக் கைவிடாதே.
4. பலவீனத்திற்குப் பரிகாரம் ஓயாது பலவீனத்தை நினைப்பதல்ல; மாறாக பலத்தை நினைப்பதுதான்.
5. இரும்புத் தசையும், எஃகு நரம்புகளும், வஜ்ராயுதம் போன்ற மனவலிமையும் உள்ளவர்களே நமக்குத் தேவை.
6. இரக்கமுள்ள இதயம், சிந்திக்கும் மூளை, வேலை செய்யும் கைகள் இவையே நமக்குத் தேவை.
7. உன்னை நம்பு. எல்லா ஆற்றலும் உன்னிடமே உள்ளது.
8. உறுதியான நம்பிக்கைகளே உன்னத செயல்களுக்கு வழிவகுக்கும்.
9. சிறந்த குணத்தை உருவாக்கும், மனவலிமையை வளர்க்கும், அறிவை விரியச் செய்யும், ஒருவனைச் சொந்தக் காலில் நிற்கச் செய்யும் கல்வியே நமக்குத் தேவை.
10. அச்சமில்லை, அச்சமில்லை என முழங்கு. அச்சமே சாவு. அதுவே பாவம். அதுவே நரகம்.
11. இளைஞர்களே, நாம் வேண்டுவதெல்லாம் உற்சாகம், உற்சாகமே.
12. எல்லையற்ற சக்தியும், எல்லையற்ற ஊக்கமும், எல்லையற்ற தைரியமும், எல்லையற்ற பொறுமையும் நமக்கு வேண்டும். அப்போதுதான் மகத்தான விஷயங்களைச் சாதிக்க முடியும்.
13. கோடானுகோடி மக்கள் பசியிலும் அறியாமையிலும் மூழ்கியுள்ளனர். அவர்களது செலவில் கல்வி பெற்றுக் கொண்டு அவர்களுக்காக ஒரு சிறிதும் கவலைப்படாமல் இருக்கும் ஒவ்வொருவனும் துரோகியே.
14. உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம். லட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறியபடியே இரு!
15. நம் சமுதாயமான தேசியக் கப்பலில், ஓட்டைகள் இருந்தாலும் நாம் அதன் பிள்ளைகள் அல்லவா? அந்த ஓட்டைகளை நாம் அடைப்போம், வாருங்கள்.
16. துறவும் தொண்டுமே இந்தியாவின் லட்சியங்கள்.
17. வேறெந்த நாட்டினரைவிடவும் முற்போக்குடன் இருப்போம்; அதே வேளையில் நமது பரம்பரைப் பண்பில் நம்பிக்கையுடனும் பற்றுடனும் மாறாமல் நிலைத்திருப்போம்.
18. வீரர்களே! கட்டுண்டவர்களின் தளைகளை வெட்டியெறியவும், எளியவர்களின் துயரச் சுமையைக் குறைக்கவும், பாமரர்களின் இருண்ட உள்ளங்களை ஒளி பெறச் செய்யவும் முன்னேறுங்கள்.
19. நம்புங்கள்; உறுதியாக நம்புங்கள். இந்தியர்கள் விழித்தெழ வேண்டும் என்ற கடவுளின் கட்டளை பிறந்துவிட்டது.
20. நாம் எல்லோரும் கடுமையாக உழைப்போம். தூங்குவதற்கு இது நேரமில்லை. எதிர்கால இந்தியா நம் உழைப்பைப் பொருத்தே அமைய உள்ளது.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், ஆர்.கே. மடம் சாலை, மயிலாப்பூர்,
சென்னை-4. அலைபேசி : 98409 87307, 91767 33362, 99400 51529
✆ : 044-24621110. Ext : 211 email : srvydc@gmail.com website : www.chennaimath.org

Vol. 93-9. Sri Ramakrishna Vijayam (Tamil Monthly) September 2013. Regd. with the Registrar of Newspapers for India under No. 1107/1957. Postal Registration Number : TN/CH(C)/221/12-14. Licenced to post without prepayment TN/PMG(CCR)/WPP-145/2012-14. Date of Publication : 24th of every month